www.padippakam.com

1-15 மே 2001 □ ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



தேர்தல் புறக்கணிப்பு ஏன்?

## சட்டத்தின் முன் கிரிமினல்களின் விசுவரூபம்




படிப்பகம்

www.padippakam.com

# விண்ணில் 'சாதனை' மண்ணில் வேதனை

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம், ''ஜி.எஸ்.எல்.வீ.'' (GSLV) என்ற வகைப்பட்ட ராக்கெட்டின் மூலம் ''ஜி.எஸ்.ஏ.டி.-1'' என்ற செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியிருக்கிறது. ''இது, இந்தியாவின் அறிவியல் - தொழில்நுட்ப ஆராய்ச்சியின் முன்னேற்றத்தில் ஒரு மைல்கல்'' என ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடின்றி அனைத்து ஓட்டுக் கட்சிகளும், பத்திரிகைகளும் ஆனந்தக் கூத்தாடுகின்றன. இச்சாதனையைப் படைத்த விஞ்ஞானிகளுக்கு நாடாளுமன்றத்தில் பாராட்டு தெரிவிக்கப்படுகிறது. ''அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை எல்லாம் மீறி, இச்சாதனையை நாம் படைத்திருக்கிறோம்; சுய சார்பின் மூலம் தேசக் கட்டுமானத்திற்குக் குறுக்கே நிற்கும் எந்தச் சவால்களையும் நாம் வெற்றி கொள்ள முடியும்'' என பிரதமர் வாஜ்பாயி அமெரிக்க எதிர்ப்பு சவடால் அடிக்கிறார்.

''இந்த ராக்கெட்டில் உள்ள ''கிரையோஜெனிக் என்ஜின்'' தவிர, பிற அனைத்தும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டவை. விண்வெளியில், பூமியில் இருந்து 35,000 கி.மீ. தூரத்தில் உள்ள சுற்றுப் பாதையில் செயற்கைக் கோளைச் செலுத்தும் திறனை இந்தியா பெற்றுவிட்டது. உலகிலேயே, இந்தியாவையும் சேர்த்து ஆறே நாடுகளிடம்தான் இந்தத் திறன் இருக்கிறது'' எனக் காரணங்களை அடுக்கி, இந்தச் சாதனை தேசியப் பெருமிதம் என இவர்கள் அனைவரும் கொண்டாடுகிறார்கள்.

இந்தியா ''ஜி.எஸ்.எல்.வீ.'' ராக்கெட்டை விண்ணில் செலுத்தி உலக நாடுகளின் வரிசையில் ஆறாவது இடத்தைப் பிடித்த அதே தருணத்தில்தான், இந்தியா, சில விசயங்களில் உலகிலேயே முதல் இடத்தில் இருக்கும் புள்ளி விவரங்களைப் படிக்க நேர்ந்தது. ஆனால் என்ன, இந்தப் புள்ளி விவரங்களைப் படிக்கும் யாரும் பெருமிதம் கொள்ள முடியாது; வேதனை அடைவதும் அடையாததும் அவரவர்களின் சமூக அக்கறையைப் பொருத்தது.

★ உலகிலுள்ள தொழு நோயாளிகளுள் 60 சதவீத நோயாளிகள் இந்தியாவில்தான் வசிக்கின்றனர்.

★ உலகிலுள்ள காச நோயாளிகளுள் 25 சதவீத நோயாளிகள் இந்தியக் குடிமக்கள்.

★ உலகிலேயே பார்வையற்றோர் அதிகமுள்ள நாடு இந்தியா. கிட்டதட்ட 1.3 கோடி இந்தியர்கள் குருடர்களாகக் காலந் தள்ளுகின்றனர்.

★ உலகில் பிரசவத்தின் பொழுது தாயும், சேயும் இறந்து போகும் மொத்த எண்ணிக்கையில், 20 சதவித பிரசவச் சாவுகள் இந்தியாவில் நடக்கின்றன.

இவை ஒருபுறமிருக்க, 40 சதவீத இந்தியக் கிராமங்களில் உருப்படியான சாலை வசதி கிடையாது; 4.5 இலட்சம் இலட்சம் கிராமங்களில் வசிக்கும் கோடிக் கணக்கான இந்தியர்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பது குதிரைக் கொம்பு; ஐந்து இலட்சம் கிராமங்களில் அஞ்சல் நிலையம் கிடையாது. 1.8 இலட்சம் கிராமங்களில் ஆரம்பப் பள்ளி கிடையாது.

இதைப் படிக்கும் சிலர் இந்தியா அடைந்துள்ள விஞ்ஞான - தொழில்நுட்பத் திறனுக்கும், மக்களின் வாழ்க்கைக்கும் இத்துணை இடைவெளியா என அதிசயக்கலாம்; வேறு சிலர், ''ஒரு விஞ்ஞான சாதனை நிகழ்த்தப்பட்டுள்ள நேரத்தில், இப்படி எதிர்மாறான விசயங்களைப் பட்டியல் போடுவது, சின்னப் புத்திக்காரர்களின் வேலையாகும்'' என நெற்றிக் கண்ணைத் திறக்காத குறையாக ஆத்திரப்படலாம்; அல்லது, ''இந்தியாவோட மக்கள் தொகை அதிகம்; ஊழல் வேற; அதனால் இந்த மாதிரி காரியமெல்லாம் பையப்பையத்தான் நடக்கும். அதனாலேயே, இந்தச் சாதனையைக் குறைத்து மதிப்பிடக் கூடாது'' எனச் சமாதானம் சொல்லலாம்.

இந்தியா விண்வெளியில் ராக்கெட்டை அனுப்பியிருப்பது விஞ்ஞான சாதனையா, இல்லையா என்பதல்ல நமது கேள்வி. ஜி.எஸ்.எல்.வீ. ராக்கெட்டை, திட்டமிட்டபடி பத்தே ஆண்டுகளில் தயாரித்து விண்ணில் செலுத்திய இந்தியா, சுதந்திரமடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆன பின்னும், கோடிக் கணக்கான இந்திய மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து தராமல் மறுத்து வருவது ஏன் என்பதுதான் நமது கேள்வி. விண்வெளியில் 35,000 கி.மீ. தொலைவில் செயற்கைக் கோளை நிறுத்தும் திறனைப் பெற்றதற்காகப் பெருமைப்படுபவர்களுக்கு, இரண்டு ஊர்களுக்கு இடையே தார்ச் சாலைப் போட்டுக் கொடுக்க, கிராமப்புற மக்களுக்குக் குடிநீர் வழங்க, தொழுநோய், மலேரியா போன்ற தொற்று நோய்களை ஒழிக்க, பிரசவச் சாவுகளைத் தடுக்க இந்தியா 'திறன் இல்லாமல் இருப்பது' உறுத்தலாக இல்லையா? ஜி.எஸ்.எல்.வீ. ராக்கெட்டைத் தயாரிக்க பற்றாக்குறை பட்ஜெட்டில் இருந்து 1400 கோடி ரூபாயை எடுத்து அள்ளிவிட்ட இந்தியா, மக்களின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து வைக்கப் பணமில்லை என்ற பாட்டையே திரும்பத் திரும்ப பாடி வருவது வக்கிரமானதில்லையா? இந்த ஏரவஞ்சனையில் வெளிப்படுவது அரசின் வக்கிரப் புத்தி மட்டுமல்ல; வர்க்கப் புத்தியும் கூட.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இந்திய நாட்டு விமான நிலையங்களில் நவீன பாதுகாப்பு வசதிகள் இல்லை எனப் பத்திரிகைகள் குறைபட்டுக் கொண்டவுடனேயே, இந்திய அரசு கோடிக் கணக்கான ரூபாய்களை வாரி

(27-ஆம் பக்கம் பார்க்க)



விலைவாசிக்குப் போட்டியாக விண்ணில் சீறிப் பாயும் ஜி.எஸ்.எல்.வீ. ராக்கெட்

ஜி.எஸ்.எல்.வீ. ராக்கெட்டின் மாதிரியை வாஜ்பாயிடம் பெருமிதத்துடன் கொடுக்கும் இந்திய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத் தலைவர் கஸ்தூரி ரங்கன். விஞ்ஞான சாதனையா? வாண வேடிக்கையா?





படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 16

**இதழ் 12**

1 மே 2001 - 15 மே 2001

**உள்நாடு:**
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 120.00**

**வெளிநாடுகள்**
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 18**

**படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்**

**புதிய ஜனநாயகம்**
**அஞ்சல் பெட்டி எண்: 6015,**
**அசோக் நகர்,**
**சென்னை - 600 083.**


# சட்டத்தின் முன் கிரிமினல்களின் விசுவரூபம்

மூன்றாண்டுகளுக்குக் கடுங்காவல் தண்டனை பெற்ற அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நான்கையும் தேர்தல் அதிகாரிகள் செல்லாது என்று தள்ளுபடி செய்து விட்டனர். ஆனால், கேரளாவில் ஐந்தாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை பெற்ற முன்னாள் அமைச்சர் பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனு கொட்டாரக்கரா தொகுதி தேர்தல் அதிகாரியால் செல்லுபடியாகும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இந்த முரண்பாட்டை முன் வைத்து தேர்தல் ஆதாயம் தேடிக் கொள்ள ஜெயா - சசி கும்பல் தலைமையிலான அணி முயன்று வருகிறது. ஆட்சியிலிருந்தபோது ஏராளமான இலஞ்ச - ஊழல் அதிகார முறைகேடுகள் செய்து பல வழக்குகளில் சிக்கி, சட்டத்தின் சந்து பொந்துகளைத் தேடி, பல கோடி ரூபாய்களை வாரி இறைத்தும் தப்பிக்க முடியாத ஜெயலலிதா, அரசுக்குச் சொந்தமான (டான்சி) சிறுதொழில் நிறுவன நிலத்தை அதிகார முறைகேடு செய்து அடிமாட்டு விலைக்கு வாங்கிய வழக்கில் மூன்றாண்டுகளுக்குச் சிறைத் தண்டனை பெற்றுள்ளார்.

உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்து, டான்சி வழக்கில் அடைந்த தண்டனைக்கு இடைக்காலத் தடை பெற்றுக் கொண்டார். இதையே காரணமாகக் காட்டி மூன்றாண்டுகள் என்ன, எத்தனை ஆண்டுகள் சிறைத் தண்டனை பெற்றாலும் உயர்நீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்பு உறுதி செய்யும் வரை, தான் தேர்தல்களில் போட்டியிட்டு ஆட்சிக்கு வருவதை யாரும் தடுக்க முடியாது என்று ஜெயலலிதா திமிர்வாதம் செய்து வந்தார். ஜெயலலிதாவிடம் விலைபோன நீதித்துறையினர் மட்டுமல்ல, அவருடைய சாதிப் பாசமிகு சோவின் துக்ளக், இந்து போன்ற செய்தி ஊடகமும் அதையே பிரச்சாரம் செய்து வந்தன. ஜெயலலிதாவைச் சூழ்ந்துள்ள பிழைப்புவாதக் கும்பலும் அவ்வாறே அதிகார போதையேற்றி வைத்தது. தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்கள் வந்ததும் இரண்டு தொகுதிகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்த ஜெயலலிதா, இறுதி நாளில் திடீரென்று மேலும் இரண்டு தொகுதிகளுக்கு வேட்பு மனு தாக்கல் செய்தார். 1997 தேர்தல் ஆணைய உத்தரவுப்படி ஜெயாவின் நான்கு வேட்பு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதும், கருணாநிதி - ஸ்டாலின் ஆகியோரது சதிதான் காரணம் என்று குற்றம் சாட்டினார். இதற்கு ஆதாரமாக, கேரளாவில் தனது ஊழல் சகபாடி பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனு ஏற்கப்பட்டதைக் காட்டுகிறார், ஜெயலலிதா.

கேரள காங்கிரசைச் சேர்ந்த பாலகிருஷ்ணப் பிள்ளை காங்கிரசு தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணியின் அமைச்சரவையில் அங்கம் வகித்த போது எடமலையாறு அணைக்கட்டு திட்ட ஊழலில் சிக்கி ஐந்தாண்டு சிறைத் தண்டனை பெற்றார். தீர்ப்பு வருவதற்கு முன்பாகத் தேர்தலில் போட்டியிட்டு சட்டப் பேரவை உறுப்பினராக உள்ளார். 1997 தேர்தல் ஆணைய உத்தரவின்படி இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறைத் தண்டனை பெற்றவர்கள் தேர்தல்களில் போட்டியிட முடியாது என்பதால், ஜெயலலிதாவின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. ஆனால், அதற்கு முந்தைய மக்கள் பிரதிநிதித்துவ சட்டப்படி தற்போது சட்டப் பேரவையிலோ, நாடாளுமன்றத்திலோ உறுப்பினராக உள்ளவர்கள் சிறைத் தண்டனை பெற்றிருந்தாலும், இடைக்காலத் தடை அமலில் இருந்தால் அவர்கள் தேர்தலில் நிற்கத் தடையில்லை என்பதைக் காரணங்காட்டி பாலகிருஷ்ணப் பிள்ளையின் வேட்பு மனு ஏற்கப்பட்டுள்ளது.

மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் சம்பந்தப்பட்ட பிரிவை, 1997 தேர்தல் ஆணையத்தின் உத்திரவு இரத்து செய்கிறதா இல்லையா என்பதைத் தெளிவாகத் தேர்தல் ஆணையம் குறிப்பிடத் தவறியுள்ளது. இந்த ஓட்டையை சாதகமாக்கிக் கொண்டு பாலகிருஷ்ணப் பிள்ளை தப்பி விட்டார். இப்படி, அங்கே ஐந்தாண்டுகள் தண்டனை பெற்றவர் வேட்பு மனு ஏற்கப்பட்டு, இங்கே மூன்றாண்டு தண்டனை பெற்ற ஜெயலலிதாவின் வேட்பு மனு எப்படி நிராகரிக்கப்படலாம் என்கிற வாதத்தோடு சென்னை உயர்நீதி மன்றத்தின் இன்னொரு இரண்டுங்கெட்டான் தீர்ப்பையும் தனக்குச் சாதகமாக வியாக்கியானம் செய்கின்றது, ஜெயலலிதா - சசிகலா கும்பல். சட்டப் பேரவை உறுப்பினராக இல்லாதவர் ஆறுமாதங்களுக்கு முதல்வராக நீடிக்கலாம் என்கிற ஒரு விதியைக் காட்டி, தான் எப்படியும் முதல்வராகிவிட முடியும் என்றும் சாதிக்கிறது. அப்படி முதல்வராகி விடுபவர் ஆறு மாதத்துக்குள் சட்டப் பேரவை உறுப்பினராகிவிட வேண்டும்; இல்லையேல் பதவி இழப்பார் என்ற விதியைக் கண்டு கொள்ளவே இல்லை. எப்படியாவது முதல்வராகி அதிகாரத்துக்கு வந்து விட்டால் தேர்தல் அதிகாரிகளையும், நீதித்துறையையும் மிரட்டிப் பணிய வைத்துவிட முடியும், வழக்குகளில் இருந்து தப்பிவிட முடியும் என்று துடிக்கிறது. தேர்தல் தில்லு முல்லுகளின் காரணமாகப் பதவி இழந்த இந்திரா காந்தி, சட்டத்தையும் - நீதித்துறையையும் வளைத்துத் தப்பித்துக் கொண்டதோடு, பதவியைக் காத்துக் கொள்வதற்காக பாசிச அடக்குமுறையை ஏவியதை மறக்க முடியாது.

ஜெயா - சசி கும்பலை விட, பாலகிருஷ்ணப் பிள்ளையை விட மோசமானவர்கள்,

**தொடர்ச்சி 6-ஆம் பக்கம்**

படிப்பகம்

www.padippakam.com

# தேர்தல் புறக்கணிப்பு ஏன்?

தமிழ்நாடு உட்பட ஐந்து மாநிலங்களின் சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தல்களுக்கு இன்னும் சில நாட்களே இருக்கின்றன. இவற்றில் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகிய இரு மாநிலங்களின் தேர்தல் முடிவுகள் அரசியல் நோக்கர்கள் பரபரப்போடும் ஆவலோடும் எதிர்நோக்கியிருக்கின்றனர். இதற்குக் காரணம் தமிழ்நாட்டில் ஜெயலலிதாவும், மேற்கு வங்கத்தில் மமதா பேனர்ஜியும் எப்படியும் ஆட்சியைக் கைப்பற்றிவிட வேண்டும் என்கிற முடிவில் அரசியல் அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதுதான்.

ஆட்சியைக் கைப்பற்றியே தீர வேண்டும் என்பதில் ஜெயலலிதா - சசிகலா கும்பலுக்குள்ள நிர்பந்தம் என்னவென்பது தமிழக அரசியலைக் கவனித்து வரும் அனைவரும் அறிந்ததே. ''ஜெயா - சசி கும்பலைப் பொருத்தவரை இத்தேர்தல்கள் வாழ்வா, சாவா என்கிற போராட்டம்; இந்தத் தேர்தல்களில் தோற்றால் இந்தக் கும்பலின் அரசியல் வாழ்வு மட்டுமல்ல; சொந்த வாழ்வே இருண்டு விடும்; ஜெயா - சசி கும்பல் தேர்தல்களில் வெற்றி பெற்றால், பழைய மாதிரியாக ஆட்சி நடத்த மாட்டார்கள், மனம் திருந்தி, நல்லாட்சி நடத்துவார்கள்'' என்று அரசியல் பாமரர்கள் மட்டுமே நம்ப முடியும்.

இந்தத் தேர்தல்களில் தோற்றுப் போனாலும் ஜெயலலிதா அரசியலில் இருந்து ஒதுங்கிப் போகவும் மாட்டார்; அவரது இலஞ்ச - ஊழல் குற்றங்களுக்காக உச்ச நீதி மன்றத்தின் இறுதி தீர்ப்பாகத் தண்டிக்கப் படும்போது கூட ஓய்ந்துவிட மாட்டார். ஏனென்றால், அரசியலில் தொடர்ந்து நீடித்திருப்பதுதான் இன்னும் கோடி கோடியாகக் குவித்து வைத்திருக்கும் சொத்துக்களைப் பாதுகாத்து அனுபவிப்பதற்கான வழி; அப்படியே தண்டிக்கப்பட்டாலும் துன்பம் சிறிதுமின்றி அரசபோக வாழ்க்கை நீடிக்கும். அரசியல் மாற்றங்களும், தொடர்ந்து நீடிக்கும் சமூக ஆதரவும், குவித்திருக்கும் பணபலமும் தண்டனையில் இருந்து தப்புவிக்கும்; இவற்றைத் திடமாக நம்புபவர், ஜெயலலிதா.

ஜெயா - சசி கும்பல் இத்தேர்தல்களில் வெற்றி பெற்றுத் தானோ, தனது கைப்பாவை ஒருவரோ ஆட்சிக்கு வந்தால் சொத்துச் சேர்க்கும் அதன் பேராசை பெரிய வெறியாகும்; இன்னும் துணிந்து பகிரங்கமாகவே உல்லாச - ஊதாரி வாழ்க்கை நடத்தும்; கருணாநிதி குடும்பம், சிதம்பரம் போன்ற அரசியல் எதிரிகளை வக்கிரமாகவும் மூர்க்கமாகவும் பழிவாங்கும்; புரட்சிகர, தேசிய இன மற்றும் ஈழ ஆதரவு சக்திகள் மீது பாசிச அடக்குமுறையை ஏவிவிடும்; மற்றபடி மனந்திருந்தி நல்லாட்சி தரும் என்பது வடிகட்டின பொய்யாகும். ஆனால், சோ, இராம. கோபாலன் போன்ற பார்ப்பன வெறியர்களும், ஜெயா - சசியிடம் விலைபோன செய்தி ஊடகங்களும் இதையே பிரச்சாரம் செய்கின்றன.

ஜெயா - சசி கும்பலின் இத்தகைய பாசிச - பயங்கரவாத - சமூகவிரோத - உல்லாச - ஊதாரிப் பண்புகளை நன்கு உணர்ந்த ஜனநாயக அரசியல் சக்திகளுக்கோ நல்லாட்சி தரும் என்று நம்பி வாக்களிப்பதற்கு ஒரு சரியான - மாற்று அரசியல் தலைமை எதுவும் கிடையாது.

கருணாநிதி - மாறன் குடும்பமோ தமிழ்நாட்டிலேயே முதன்மையான தரகு அதிகார முதலாளி குடும்பங்களில் ஒன்றாக வளர்ந்துவிட்டது; கருணாநிதிக்குப் பிறகு ஸ்டாலினுக்கு வாரிசுரிமையாக ஆட்சியையும் கட்சியையும் கைமாற்றித் தருவதற்குத் தடையேதும் ஏற்பட்டுவிடக் கூடாது; ஜெயா - சசி கும்பலின் கேடுகெட்ட பண்புகளைக் காட்டித்தான் கருணாநிதி, மாறன் குடும்பம் அரசியல் நடத்த முடியும்; எனவே, பகிரங்கமான இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபடுவதைத் தவிர்த்து இப்போதைக்கு நைச்சியமான - சட்டபூர்வமான வழிகளில் தமது குடும்ப ஆதிக்கத்தை நிறுவும் முயற்சிகளில் கவனம் செலுத்துகிறது. ஜெயா - சசி கும்பல் அரசியலில் இரண்டாவது பெரிய சக்தியாக நீடித்திருப்பதால்தான் இது தொடர்கிறது. இந்தக் கும்பல் அரசியலில் மீண்டும் தலையெடுக்கவே முடியாது என்ற நிலை உருவானால், கருணாநிதி - மாறன் குடும்பமும், கழக உடன்பிறப்புகளும் பகற்கொள்ளையிலும் - பயங்கரவாத அடக்குமுறையிலும் பகிரங்கமாகவே இறங்கி விடுவர்.

ஜெயா சசி கும்பல் மற்றும் கருணாநிதி - மாறன் குடும்பம் ஆகியவை மட்டுமல்ல, இவற்றின் பின்னே அணிவகுத்து நிற்கும் போலி கம்யூனிஸ்டுகள் உட்பட அனைத்து அரசியல் சக்திகளும் ஒன்று இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றவாளிகள் மற்றும் சாதி - மதவெறியர்கள் அல்லது அவற்றுக்குத் துணை போகின்றவை. பாரதீய ஜனதாவும் காங்கிரசும் முறையே கருணாநிதி மற்றும் ஜெயலலிதாவுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் இரண்டு பெரிய ''தேசியக் கட்சிகள்''. அவற்றில் போஃபர்ஸ் முதல் பங்கு - பத்திர மோசடி வரை பல ஆயிரம் கோடி இலஞ்ச - ஊழல் குற்றங்களால் அழியாத கரைபடிந்தது, காங்கிரசு; தெகல்கா.காம் ஆயுத பேர ஊழலில் சிக்கி அம்பலப்பட்டுப் போன பிறகு பாரதீய ஜனதா - ஆர்.எஸ்.எஸ். கும்பலின் பரிசுத்த மாய்மாலம் திரை கிழிந்து போனது. இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்ற எதிர்ப்பு என்கிற தி.மு.க. - பா.ஜ.க.வின் அரசியல் முழக்கப் பாவாடை பொத்தல் விழுந்து போனது.

தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது ஏற்கனவே, இந்து மத வெறி பாசிச பா.ஜ.க.வைக் கொண்டிருக்கிறது; தற்போது பல்வேறு சாதியக் கட்சிகளையும் கூட்டுச் சேர்த்துக் கொண்டு முழுமையான சாதி - மத வெறிக் கூட்டணியாகப் பரிணமித்துவிட்டது. அதற்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல என்கிற மாதிரி, ஏற்கனவே முக்குலத்தோர்களின் ஆதிக்கத்திலுள்ள ஜெயாவின் அ.தி.மு.க., வன்னிய சாதி அடிப் படையைக் கொண்ட பா.ம.க.வுடன் அணி சேர்ந்துவிட்டது. அதைத் தொடர்ந்து தொகுதிப் பங்கீட்டிற்காக இந்த அணியில் நடந்த நாய்ச்சண்டை மதச்சார்பற்ற கூட்டணி என்கிற அதன் முகச்சாயத்தை வெளுக்கச் செய்துவிட்டது. காங்கிரசுடனான தனது தேர்தல் கூட்டை பா.ஜ.க. எதிர்ப்பு மதச்சார்பற்ற கூட்டணி என்கிற இலட்சிய நாமகரணம் சூட்டி, நியாயம் கற்பிக்கும் போலி கம்யூனிஸ்டுகள், அண்டை மாநிலமான கேரளாவில் காங்கிரசு, பா.ஜ.க. என்ற வகுப்புவாத சக்தியுடன் மறைமுகக் கூட்டுச் சேர்ந்திருப்பதாக குற்றஞ் சாட்டுகிறது. அங்கே மதவெறி பா.ஜ.க.வுடன் கூட்டு சேர்ந்துள்ள காங்கிரசை இங்கே மதச்சார்பற்ற சக்தியாக எப்படிக் கருத முடியும்; இத்தனைக்கும் கேரளாவிலோ, தமிழ்நாட்டிலோ காங்கிரசின் மாநிலத் தலைமைகள் சுண்டு விரலைக்கூட தனித்து ஆட்ட முடியாத அளவு மேலிடத்துக்குக் கட்டுப்பட்டது என்பது போலி கம்யூனிஸ்டுகள் அறியாததல்ல.

போலி கம்யூனிஸ்டுகளைப் போலவே, கிருஷ்ணசாமி - திருமாவளவன் தலைமையிலான



நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்.

இரு ''தலித் அரசியல்'' கட்சிகளும், வைக்கோ தலைமையிலான ம.தி.மு.க.வும் தேர்தல் கூட்டுகளை உருவாக்கவும், முறித்துக் கொள்ளவும் என்னதான் சவடால்கள் அடித்தாலும், தமது இறுதி இலட்சியம் எலும்புத் துண்டுகள்தாம் என்பதை நிரூபித்து விட்டார்கள். இவர்களின் எஜமான விசுவாசம் நாயிலும் மோசமானது என்பதைக் காண்கிறோம்.

நான்கு தொகுதிகளுக்காக அடித்துக் கொண்டு தி.மு.க.வுடனான உறவை முறித்துக் கொண்டு தனித்து நிற்கும் வைக்கோ, இந்துமதவெறி பாசிச பா.ஜ.க.-விடம் தனக்குள்ள விசுவாசத்தை தீவிரமாகக் காட்டிக் கொண்டே, சாதி எதிர்ப்பு போராளியைப் போல சண்டப் பிரசண்டமடிக்கிறார். அந்த நான்கு தொகுதிகள் கூடுதலாகக் கிடைத்திருந்தால், இப்படிச்சவடால் எதுவும் அடித்திருப்பாரா? கடந்த தேர்தலின் போது மதவாதமே நாட்டுக்குப் பேராபத்து என்பதால் தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை எதிர்த்துத் தலைமையேற்கும்படி தில்லி வரை போய் சோனியாவிடம் மன்றாடிய கிருஷ்ணசாமி இப்போது, அதே மதவாதக் கூட்டணியில் இணைந்திருக்கிறார். அதேபோல, சாதி - மதவாத ஆபத்தை எதிர்த்து ஜெயலலிதா - மூப்பனாருடன் இதுவரை அணி சேர்ந்திருந்த திருமாவளவன் மதவாதத்தைவிட சாதியமே பேராபத்து என்று சொல்லிக் கொண்டு சாதியக் கட்சிகளைக் கொண்ட தி.மு.க. - பா.ஜ.க. அணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ளார்.

இப்படி தேர்தல் களத்திலுள்ள, எந்தவொரு அரசியல் கட்சிகளும், கூட்டணிகளும் மக்கள் ஆதரவைப் பெருவதற்குரிய, நம்பித் தேர்ந்தெடுக்கப்படக் கூடிய அருகதை உள்ளவை அல்ல. எல்லாக் கட்சிகளும் அயோக்கியத்தனமும், நம்பிக்கைத் துரோகமும், நேர்மையின்மையும் நிறைந்த கேடுகெட்ட அமைப்புகளாகவே உள்ளன.

இந்த அரசியல் கட்சிகள் எல்லாமே நாடாளுமன்ற ஜனநாயகத்தின் ஓர் அங்கம்; ஓர் அங்கம்தான்!. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் சட்டமியற்றும் ஓர் அங்கம்தான். அதன் மற்றொரு அங்கமான நிர்வாக இயந்திரம் அரசியல் கட்சிகளைப் போலவே புழுத்து நாறிப் போயிருக்கிறது. அரசியல் கட்சிகளின் எல்லா இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்களிலும், சாதி - மதவெறிச் செயல்களிலும் இந்த நிர்வாக இயந்திரம் கூட்டுச் சேர்ந்திருப்பதைக் காண்கிறோம்.

ஆகவே, இனியும் எதற்காக, யார் மீது - எந்த அமைப்பின் மீது நம்பிக்கை வைத்து இந்தத் தேர்தல்களில் பங்கேற்கவும் வோட்டளிக்கவும் முடியும்?

தங்களுடைய அடிப்படைத் தேவைகள் கூடநிறைவேறாத அதிருப்தி, ஓட்டுக் கட்சித் தலைவர்களின் நம்பிக்கை துரோகம் ஆகிய இரண்டு காரணங்களுக்காக தேர்தல்கள் மீது அவநம்பிக்கை அடைந்து, இனிமேலும் ஓட்டுப் போடுவதில் பயனில்லை என்று வாக்காளர்களில் பலர் கூறுகின்றனர். ஆனால், இன்றைய அரசியல் அமைப்பின் கீழ் தேர்தல்களைப் புறக்கணிப்பதற்கு இன்னும் பல முக்கியமான, வலுவான காரணங்களும் அவசியமும் இருக்கின்றன.

முதலாவதாக, நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு வக்காலத்து வாங்குபவர்கள் வாதிடுவதைப் போல, ஓட்டுரிமை என்பது, நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஜனநாயக உரிமை அல்ல. வெற்றுத்தாளில் கையொப்பம் போட்டுத் தருவதுதான் ஓட்டுப் போடுவது என்பது. அப்படி வாங்கிக் கொண்டு போகும் ஓட்டுக் கட்சிக்காரர்கள் அதை எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளும் உரிமத்தைப் பெறுகிறார்கள். இன்னென்ன அரசியல், பொருளாதார, சமூகக் கொள்கைகளையும் திட்டங்களையும்தான் கடைப்பிடிக்க வேண்டும் என்கிற கட்டுப்பாடுகள் எதுவும் கிடையாது. நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக அவர்கள் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கையையும் தடுக்கவோ, தண்டிக்கவோ மக்களுக்கு எந்த அதிகாரமும் வழியும் கிடையாது. ஒரு தொகுதி வாக்காளர்களின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், அவர்களின் எண்ணங்களைத்தான் பிரதிபலிக்க வேண்டும்; அவர்களின் விருப்பப்படிதான் செயல்பட வேண்டும் என்கிற நெறிமுறை எதுவும் கிடையாது. அவற்றுக்கு மாறாக, அணி சேர்ந்தோ, கட்சி தாவியோ ஆட்சி அமைக்கலாம், ஆட்சியைக் கவிழ்க்கலாம்; சட்ட - திட்டங்கள் போடலாம். இலஞ்ச - ஊழல் - அதிகார முறைகேடுகளில் ஈடுபடலாம். அவருடைய செயல்களைத் தடுக்கவோ, மாற்றவோ வாக்காளர்களுக்கு எந்த வித உரிமையும் கிடையாது. வேண்டுமானால், அடுத்தமுறை அவரைத் தேர்ந்தெடுக்காமல் வேறொருவருக்கு வெற்றுத் தாளில் கையொப்பமிட்டுக் கொடுத்து உரிமத்தை மாற்றித் தரலாம்; வேறெதுவும் செய்ய முடியாது.



நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்

இரண்டாவதாக, இந்த நாடு ஜனநாயக நாடு என்றும், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளும், அவர்கள் உருவாக்கும் ஆட்சிக்குத் தலைமையேற்கும் அமைச்சர்களும் மட்டும்தான் இந்த நாட்டை ஆளும் அதிகாரம் பெற்றவர்கள் என்றும், அதாவது இந்த நாட்டை மக்கள், தங்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் தங்களைத் தாங்களே ஆண்டு கொள்கிறார்கள் என்றும், இதுதான் ஜனநாயகம் என்றும் கூறப்படுகிறது. ஆனால், இது உண்மையல்ல. உள்ளூராட்சி மன்றத்தில் இருந்து நாடாளுமன்றம் வரை மக்கள் பிரதிநிதிகள் என்று தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு அந்தந்த மன்றங்களில் கொண்டு வரப்படும் சட்டதிட்டங்களை ஆதரித்தோ, எதிர்த்தோ கைதூக்கும் உரிமை மட்டுமே உள்ளது. அவர்களில் பெரும்பான்மையினர் சேர்ந்து உருவாக்கும் அமைச்சரவை போன்ற தலைமைக்கு ஆளும் நிர்வாக அமைப்பில் முடிவுகள் எடுக்கும் அதிகாரம் உண்டு. ஆனால், தாம் போடும் சட்டதிட்டங்களையோ, நிர்வாக முடிவுகளையோ அமலாக்கும் அதிகாரம் இந்த இரண்டு மட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கும் கிடையாது. அதற்கான நிர்வாக அதிகாரம் முழுவதும் உள்ளூராட்சி மன்ற ஆணையர் முதல் வட்ட, மாவட்ட ஆட்சியர் ஊடாக மாநில - மத்தியத் தலைமைச் செயலாளர் வரையிலான அதிகாரவர்க்க அமைப்பு, நீதிமன்றம், போலீசு, இராணுவம் போன்ற அமைப்புகளில் உள்ள அதிகாரிகள் என்கிற ஒரு தனிவகைச்சாதியிடம் இருக்கிறது. ஆகவே, இந்தத் தேர்தல்கள் எல்லாம் ஆளும் நிர்வாக அதிகாரம் பெற்றவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக நடக்கவில்லை. ஆளும் நிர்வாக அதிகாரம் ஏதுமற்ற பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்காகவே நடக்கின்றன.

மூன்றாவதாக, ஆளும் நிர்வாக அதிகாரம் படைத்த அதிகாரிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அல்ல; கல்வித் தகுதியை மட்டுமே அடிப்படையாகக் கொண்டும், முறைகேடுகள் மூலமாக அந்தத் தகுதிகள்கூட இல்லாமலும், முன்பே அதிகாரிகளாக இருப்பவர்களால் நியமிக்கப்படுபவர்கள். இவர்களுடைய நடவடிக்கைகளை மேற்பார்வையிடவும், தவறு செய்தால் தண்டிக்கவும், தடுக்கவும் இவர்களுடைய மேலதிகாரிகள்தான் அதிகார உரிமை உடையவர்கள். எம்.எல்.ஏ., எம்.பி.க்கள், மந்திரிமார்கள் தவறு செய்தால் கூட, மக்கள் விசாரிக்கவோ தண்டிக்கவோ முடியாது. ''நீதிபதிகள்'' என்கிற அதிகாரிகள்தான் விசாரித்துத் தண்டிக்க முடியும். நாட்டின் சட்ட திட்டங்களில் முன் வரைவுகளைத் தயாரித்துக் கொடுப்பதோடு, அவற்றை அமலாக்கும் நிர்வாக அமைப்பாக அதிகாரிகளே அமையும்படி அந்தந்த சட்டதிட்டங்களிலேயே அதிகாரத்தை வகுத்துக் கொள்கிறார்கள்.

நான்காவதாக, வெறும் கல்வித் தகுதி

www.padippakam.com

அல்லது முறைகேடுகள் மூலம் நியமனம் பெறும் அதிகாரிகள் மக்கள் நலன்களை அடிப்படையாகக் கொண்டு மக்களுக்குப் பொறுப்பாகச் செயல்படுவதற்கான எந்த நிர்பந்தமும் கிடையாது. ஒரு தேர்தல் அரசியல்வாதியைப் போலவே சொந்த சம்பாத்தியம் கருதியே, எவ்வளவு சம்பளம் வரும், எவ்வளவு கிம்பளம் வரும், என்னென்ன அதிகாரம் கிடைக்கும் என்பதைக் குறி வைத்தே அதிகாரிகளாகப் போகிறார்களே தவிர, மக்கள் சேவையை மனதில் வைத்துப் பதவிக்கு வந்தவர்கள் அல்ல. ஆளும் நிர்வாக அதிகாரிகளுக்குத் தரப்படும் பயிற்சியும், இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் அமைப்பையும், தரகு அதிகார வர்க்கம் - நிலப்பிரபுக்களின் சுரண்டல் - ஒடுக்குமுறையையும் பாதுகாப்பது எப்படி என்பதற்காகத்தான்; மக்களுக்குச் சேவை செய்வதற்காக அல்ல.

ஏதாவது கோரிக்கைகளுக்காகப் போராடும் மக்களைப் பயங்கரமான முறையில் ஒடுக்குகிறது போலீசு. வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் "லாக்-அப்" - கொட்டடிக் கொலைகள், வன்புணர்ச்சியில் ஈடுபடும் போலீசு, வரம்பற்ற அதிகாரம் வைத்துக் கொண்டு காட்டாட்சி நடத்துகிறது. மக்கள் சேவையில் ஈடுபடாமல் தின்று கொழுத்து இருக்கும் இராணுவத்தினர், சிவிலியன் மக்களிடையே நிறுத்தப்படும் பொழுதெல்லாம் துப்பாக்கிச் சூடு, கொலை, கொள்ளையில் ஈடுபடும் சம்பவங்கள் ஏராளமாகவுள்ளன. தரகு முதலாளி அம்பானி என்றால் விடுமுறை நாட்களிலும், வீட்டிலேயே வழக்கு நடத்திச் சாதகமான தீர்ப்பு வழங்கும் நீதித்துறை அதிகாரிகள், போபால் நச்சுப்புகை வழக்கு, கீழ் வெண்மணி முதல் தில்லி சீக்கியர் படுகொலைகள் வரை, ஆதிவாசி சிறுமி மதுரா முதல் தாழ்த்தப்பட்ட பன்வாரிதேவி வரை ஆயிரக்கணக்கான வன்புணர்ச்சி வழக்குகளில் நீதிக்குப் புறம்பான மக்கள் விரோதத் தீர்ப்புகளை வழங்குகிறார்கள். பொதுத்துறை அதிகாரிகள் பகற்கொள்ளையடிக்கிறார்கள். ஆளும் நிர்வாக அமைப்பின் எல்லா மட்டங்களிலும் இலஞ்ச ஊழலும், அதிகார முறைகேடுகளும் தலைவிரித்தாடுகின்றன. நிரந்தரமான இந்த மக்கள் விரோத அரசு அமைப்பை மாற்றுவதற்கான எதுவும் தேர்தல் மூலம் கிடையாது.

ஐந்தாவதாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவது குறிப்பிட்ட காலத்துக்குத்தான் பதவி வகிக்க முடியும். அதன் பிறகு மீண்டும் ஓட்டுக் கேட்டு மக்களிடம் வர வேண்டும். அவர்களின் கடந்த கால குறைநிறைகளைக் கண்டு நிராகரிக்கலாம் அல்லது மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வாய்ப்புப் பெறலாம். இந்த வகையிலாவது அவர்கள் மக்களுக்குப் பொறுப்பாக நடக்கும் அவசியம் ஏற்படுகிறது. ஆனால், ஆளும் நிர்வாக அமைப்பின் அதிகாரிகள் மக்களுக்குப் பொறுப்பானவர்கள் இல்லை. இதையே, என்னை யாரும் ஆட்டவும் அசைக்கவும் முடியாது என்று (திமிரோடு) கூறி நிரந்தரப் பதவி வகிக்கிறார்கள். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் குற்றமிழைத்தால், மத்திய அரசு அனுமதி பெற்றுத்தான் வழக்குப் போட முடியும். நீதிபதிகளையோ விமர்சிக்கவும் உரிமையில்லை. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரித்தாலே, குற்றமிழைக்கும் நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்ய முடியும். இராணுவ அதிகாரிகளை மக்கள் மட்டுமல்ல, எம்.எல்.ஏ., எம்.பிக்கள் கூடத் தட்டிக் கேட்க முடியாது. நீதிபதிகள், இராணுவ அதிகாரிகள் புனிதர்களாக வைத்துக் காக்கப்படுகின்றனர். ஆனால், அரசியல்வாதிகள் - மக்கள் பிரதிநிதிகள் தலையீட்டால்தான் நிர்வாகம் சீர்கெட்டுப் போகிறது. அதிகாரிகளைச் சுதந்திரமாகச் செயல்படவிட்டால் திறமையான ஆட்சி நடக்கும் என்று பார்ப்பன, நடுத்தர, மேட்டுக்குடியினர் பிரச்சாரம் செய்கின்றனர். அரசியல்வாதிகள் - கிரிமினல்கள் - அதிகாரிகளின் முக்கூட்டுதான் நாட்டையே ஆட்டிப் படைப்பதாக ஆய்வறிக்கைகள் கூறுகின்றன. இதிலும் இவர்களின் பின்னணியில் இருக்கும் தரகு அதிகார வர்க்கம், நிலப்பிரபுக்கள் மறைக்கப்படுகின்றனர். ஆனால், இந்தச் சமூக விரோத அரசியல் கூட்டில் அதிகாரிகள் மட்டுமே யோக்கியமானவர்கள் என்று மோசடி செய்கின்றனர். தேர்தல்கள் மூலம் ஏற்படும் ஆட்சி மாற்றம் எல்லாம் ஆளும் நிர்வாக அமைப்பை மாற்றுவதில்லை. அதன் மேல்மட்டத்தை, மூடுதிரையை மாற்றுவதுதான்.

ஆறாவதாக, இந்த நிரந்தரமான ஆளும் நிர்வாக அமைப்பை அகற்றாமல் எத்தனை தேர்தல்கள் வந்தாலும், அது நாடாளுமன்ற ஜனநாயகமாக இருந்தாலும் சரி, அதிபர் ஆட்சி முறையாக இருந்தாலும் சரி, அடிப்படை அரசியல், சமூக, பொருளாதார மாற்றம் எதையுமே சாதிக்க முடியாது. நடைபெறும் தேர்தல்கள் எல்லாம் இந்த உண்மையை மூடிமறைத்து, தற்போதைய அரசியல் அமைப்பு நீடித்திருப்பதற்கான ஒப்புதலை மக்களிடம் பெறுவதற்காகவே நடத்தப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக, மாற்றாக மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ளும் ஓர் அதிகார அமைப்பை நிறுவியாக வேண்டும்.

மக்கள் தாம் வாழும் கிராமங்கள், பகுதிகளில், தொழில் புரியும் ஆலைகளில் எல்லாம் மக்கள் சர்வாதிகார மன்றங்களை நிறுவ வேண்டும். அனைத்து அதிகாரங்களையும் சொத்துக்களையும் கைப்பற்றிக் கொள்ள வேண்டும். உடமைகளை, குறிப்பாக நிலவுடைமைகளை நியாயமான முறையில், வர்க்க அடிப்படையில் மறுவினியோகம் செய்து பகிர்ந்து கொள்ள வேண்டும். கைபற்றப்பட்ட அதிகாரத்தையும், சொத்துக்களையும் காத்துக் கொள்வதற்கு மக்கள் படைக் குழுக்களை அமைத்து, ஆயுதமேந்த வேண்டும். இத்தகைய மக்கள் சர்வாதிகார மன்றங்களின் பிரதிநிதிகளடங்கிய கூட்டமைப்பே நாட்டை ஆள வேண்டும். இதற்குத் தடையாக நிற்கும் அனைத்துச் சக்திகளையும் அடித்து நிர்மூலமாக்க வேண்டும். அதற்கு முதற்படியாக தேர்தல்களைப் புறக்கணிப்பதோடு, தற்போதைய ஆளும் நிர்வாக அமைப்புக்குக் கட்டுப்பட மாட்டோம் என்று கலகம் செய்ய வேண்டும்.

● ஆர்.கே.

## தலையங்கம் தொடர்ச்சி

அவர்களுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டிருப்பவர்கள்தான். முன்பு பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். கும்பல், இப்போது காங்கிரசு - போலி கம்யூனிஸ்டுகள், பதவி ஆசைக்காக ஜெயலலிதாவின் இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்களுக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். இதே பாலகிருஷ்ணப் பிள்ளையின் இலஞ்ச - ஊழலுக்கு எதிராகப் போராடி, சிறைத் தண்டனை பெறுவதற்கு வாதாடிய போலி கம்யூனிஸ்டுகள், இப்போதும் சிறைத் தண்டனை பெற்ற அவருடைய வேட்பு மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேரளாவில் அரசியல் பேசிக் கொண்டே, இங்கே, சிறைத் தண்டனை பெற்றாலும் ஜெயலலிதாவின் வேட்பு மனு நிராகரிக்கப்படக் கூடாது; அப்படிச்செய்வது கருணாநிதியின் அரசியல் சதி; ஜெயலலிதா முதல்வராவதற்குத் தடை போடக் கூடாது என்றெல்லாம் நாக்கில் நரம்பின்றிப் பேசுகின்றனர். உச்சநீதி மன்றத்தின் இறுதித் தீர்ப்பு வரும் வரை ஜெயலலிதா கிரிமினல் குற்றவாளி ஆகமாட்டார்; தேர்தலில் போட்டியிட்டு முதல்வராகலாம்; நீதிமன்றத் தீர்ப்புகள் பெரிதல்ல; மக்கள் மன்றத் தீர்ப்பே (தேர்தல் முடிவே) உயர்ந்தது என்றால், பாலகிருஷ்ணப் பிள்ளைக்கும் இந்த வாதம் பொருந்தும் என்பதைப் போலி கம்யூனிஸ்டுகள் ஒப்பு கொள்வார்களா?

இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றவாளிகள் சட்டம் - நீதித்துறை சந்து பொந்துகளிலோ, மக்களின் தண்டனையிலிருந்தோ தப்பி விடக் கூடாது; பாலகிருஷ்ணப் பிள்ளையைப் போல, சட்டப் பேரவை உறுப்பினராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஆனால், இதற்குப் பதில் அவர்கள் கேரளத்தில் இருந்தால், எதிர்த்தரப்பில் இருந்தால் தண்டிக்கப்பட வேண்டும்; தமிழ்நாட்டில், தம் தரப்பில் இருந்தால் அவருக்காக அனுதாப அலை வீச வேண்டும், மக்கள் ஆதரவு பெருக வேண்டும், எப்படியாவது அவரைத் தண்டனையிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்பதுதான் போலி கம்யூனிஸ்டுகளின் நிலை.

ஜெயலலிதா - சசிகலா கும்பலின் அணி மட்டுமல்ல, அதன் எதிர்த்தரப்பினரும் சேர்ந்து தற்போதைய அரசியலில் ஒரு மரபை - பண்பாட்டை உருவாக்க முயலுகின்றனர். இலஞ்ச - ஊழல் கிரிமினல் குற்றங்களாகட்டும், சாதி - மதவெறி நடவடிக்கைகளாகட்டும் அரசியலில் இயல்பானது தான் என்பதை நிலைநாட்ட எத்தனிக்கிறார்கள். இதன் வெற்றிதான் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் பரிணாம வளர்ச்சியாகும்.

www.padippakam.com

# முட்டுச் சந்தில் திணறும் சி.பி.எம்.

1960-களின் ஆரம்பத்தில் உலகக் கம்யூனிச இயக்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்டது. சோவியத் ஒன்றியத்தின் திருத்தல்வாத குருச்சேவ் கும்பலின் தலைமையில் ஒரு பிரிவும், செஞ்சீனத்தின் புரட்சிகர மாவோ தலைமையில் மற்றொரு பிரிவுமாக உலக நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகள் அணி திரண்டன. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பை எதிர்கொண்டிருந்த வட வியத்நாம், லாவோஸ், கம்போடியா மற்றும் வடகொரிய நாடுகளின் பொதுவுடைமைக் கட்சிகள் அந்தத் தனிச் சிறப்பான நிலைமைகள் காரணமாக இரண்டு பிரிவையும் ஆதரித்தன அல்லது நடுநிலை வகித்தன.

பின்னாளில் சி.பி.(எம்) கட்சியை உருவாக்கிய ஈ.எம்.எஸ். - ரணதிவே - ஜோதி பாசு போன்ற தலைவர்கள் ''பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும்'' காட்டும் ஒரு சந்தர்ப்பவாத நிலையெடுத்தனர். வடகொரியா, வடவியத்நாம் பொதுவுடைமைக் கட்சிகளைப் போல சி.பி.(எம்) தலைவர்களுக்கு எவ்வித நிர்பந்தமும் கிடையாது; இருந்த போதும் சீனா மற்றும் சோவியத் ஒன்றியம் இரண்டினுடைய நிலைகளையும் ஆதரித்தனர் அல்லது ''நடுநிலை'' வகித்தனர். இந்தியாவில் அப்போது நிலவிய சீன எதிர்ப்பு தேசியவெறியைப் பயன்படுத்திக் கொள்ளவும், சோவியத் ஒன்றியத்தின் ஏக போக ஆதரவைப் பெறவும் சி.பி.(எம்) தலைவர்கள் எல்லாம் ''சீன ஏஜெண்டுகள்'' என்றும் இடது குறுங்குழுவாதிகள் என்றும் சி.பி.ஐ. தலைவர்கள் முத்திரை குத்தினர்.

சி.பி.(எம்) தலைமையோ சோசலிச முகாம் பிளவுபடக் கூடாது என்றும், அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பிற்காக ஐக்கியப்பட்டு நிற்கவேண்டும் என்றும் வலிந்து வேண்டிக் கொண்டே இருந்தது. சீனாவும் சோவியத் ஒன்றியமும் ஐக்கியப்பட்டு நிற்கும் சோசலிச முகாம் யதார்த்தத்தில் நீடித்திருப்பதாகக் கற்பனை செய்து கொண்டே உலக விவகாரங்களை அணுகியது. ஆனால், யதார்த்தமோ இதற்கு மாறாகவே இருந்தது.

சீன மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய நாடுகளிடையே அரசு மற்றும் கட்சி உறவுகள் முறிந்து போய் பகை முரண்பாடு தோன்றியது. சீன எல்லை நெடுக இராணுவத்தை நிறுத்திய சோவியத் ஒன்றியம், அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து சீனத்தைச் சுற்றி வளைத்து முற்றுகையிடும் போர்த்தந்திரத்தை மேற்கொண்டது. பின்னர் சோவியத் ஒன்றியம் சமூக ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசாகி, அமெரிக்காவுடன் உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் இறங்கி மூன்றாம் உலகப் போருக்கும் தயாரானது. அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியம் ஆகிய இரு மேல்நிலை வல்லரசுகளுக்கு எதிராக, குறிப்பாக பின்னதுக்கு எதிராக இரண்டாம் - மூன்றாம் உலக நாடுகளையும் மக்களையும் அணிதிரட்டும் போர்த்தந்திரம் வகுத்துச் செயல்படும் அளவுக்கு சீனா நிலையெடுத்தது.

இவ்வாறு இரு நாடுகளிடையே பகை முரண்பாடு உருவாகி முற்றிய போதும் கூட, சோசலிச முகாம் ஒன்றுபட்டு ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி கட்டி போராடவும், போர் தொடுக்கவும்கூட வேண்டும் என்ற வறட்டுச் சூத்திரத்தையே சி.பி.(எம்) கட்சி ஓதிக் கொண்டிருந்தது. இதற்குக் காரணம், உலகக் கம்யூனிச இயக்கத்தில் பிளவு ஏற்படக் காரணமாக அமைந்த அடிப்படையான அரசியல் சித்தாந்தப் பிரச்சினைகள் மீது ஒரு பத்தாண்டுகளுக்கு சி.பி.(எம்) எந்த முடிவும் எடுக்கவில்லை.

இதுபற்றி சி.பி.(எம்) கட்சியே பின்வருமாறு 1969 இறுதியில் கூறுகிறது. ''கட்சித் திட்டம், பணிகள் பற்றிய தீர்மானம், அரசியல் - அமைப்பு அறிக்கை ஆகியவற்றை நிறைவேற்றியதன் மூலம், ஒரு புதிய போர்த் தந்திரம் - செயல் தந்திரம் வகுத்துக் கொண்டதன் மூலம் வலது சந்தர்ப்பவாதிகள், திருத்தல்வாதிகளோடு அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளில் கணக்குத் தீர்த்துக் கொண்டோம். அதேபோல, திருத்தல்வாதிகளை இந்தியக் கம்யூனிச இயக்கத்துக்கு வெளியே நிறுத்தும் வகையில் புதிய கட்சிப் பிரகடனம், திருத்தப்பட்ட அமைப்பு விதிகள், புதிய மத்தியக் கமிட்டியை தேர்வு செய்தது ஆகியவை மூலம் திருத்தல்வாதிகளோடு அமைப்பு ரீதியில் கணக்குத் தீர்த்துக் கொண்டோம்.

''டாங்கேயிசவாதிகளால் முன்வைக்கப்பட்ட வர்க்க சமரச, கேடுகெட்ட திருத்தல்வாத வழியில் இருந்து சரஞ்சரமான முக்கிய, கோட்பாட்டு, சித்தாந்தப் பிரச்சினைகளில் தெரிவான எல்லைக்கோடு வரைந்து கொண்டோம். இன்னும் தெளிவாகச் சொல்லுவதானால் இந்தியப் புரட்சியுடன் தொடர்புடைய நாமும் திருத்தல்வாதிகளும் நேரெதிரெதிரான நிலையெடுக்காத ஒரே ஒரு அடிப்படை பிரச்சினைகூடக் கிடையாது.'' ''இந்தியக் கம்யூனிச இயக்கத்துடன் தொடர்புடைய அனைத்து அடிப்படை பிரச்சினைகளிலும் டாங்கேயிச திருத்தல்வாதிகளோடு முழுக்க முழுக்க உடன்படும் நிலைப்பாடுகளையே சோவியத் ஒன்றியக் கம்யூனிசக் கட்சியின் தலைமை எடுத்தது. இது, இந்தியாவில் பரவலாக விநியோகிக்கப்பட்ட, சோவியத் ஊடகத்தில் வந்த ஏராளமான அறிக்கைகள், கட்டுரைகள், எழுத்துகள் மூலமாகவும், இந்திய விவகாரங்கள் குறித்து சோவியத் அரசாங்கம் எடுக்கும் சங்கிலித் தொடரான நடவடிக்கைகள் எடுத்து வைக்கும் அடிகள் மூலமாகவும், திருத்தல்வாதிகளின் கட்சிக் காங்கிரசுகளில் சோவியத் ஒன்றியக் கம்யூனிசக் கட்சி தலைமையில் சகோதரக் கட்சிகள் கூட்டமாக பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டு பகட்டுக் காட்டுவதன் மூலமாகவும், டாங்கேயிச கட்சித் திட்டம், கொள்கைத் தீர்மானங்களை மார்க்சிய - லெனினிய மற்றும் பாட்டாளி வர்க்க சர்வதேசியமாக முழுமனதோடு அங்கீகரிப்பதன் மூலமாகவும் உறுதி செய்யப்பட்டது.

''இந்த நிலைமைகளில் சித்தாந்த - கோட்பாட்டு புரிதலும் ஒற்றுமையும் கொண்ட நமது கட்சி, சொந்தக் கட்சித் திட்டம் வகுத்துக் கொண்டு, இந்தியப் புரட்சிக்கான போர்த் தந்திரம் செயல் தந்திரம் வகுத்துக் கொண்டு இந்தியத் திருத்தல்வாதியிடமிருந்து முறித்துக் கொள்வதை சாத்தியமாக்கியது.

''பிறகு நமது கட்சி நிலைப்பாடு எடுக்கும்படி, சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் மையமாக உள்ள விவாதத்துக்குரிய கோட்பாட்டு - சித்தாந்தப் பிரச்சினைகள் இன்னும் என்ன எஞ்சியிருக்கின்றன? அவை. ஏற்கனவே நமது கட்சித் திட்டத்தில் தீர்க்கப்பட்டவை தவிர, புதிய சகாப்தத்தின் வர்க்க ஆய்வு மற்றும் மதிப்பீடு பற்றிய கேள்விகள்; தற்போதைய காலகட்டத்தின் போர் மற்றும் அமைதி பற்றிய பிரச்சினை; மாறுபட்ட சமூக அமைப்புகளுடைய அரசுகளின் சமாதான சகவாழ்வு பற்றி கருத்தோட்டம்; சோசலிசத்துக்கு மாறிச் செல்லும் வடிவங்கள், நமது சகாப்தத்தின் பல்வேறு அடிப்படை முரண்பாடுகள் பற்றி மதிப்பீடு; தற்போதைய கட்டத்தில் ஏகாதிபத்தியத்துக்கும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கும் இடையிலான முரண்பாட்டின் இடம் மற்றும் பங்கு - பாத்திரம்; ஸ்டாலின், சோவியத்



படிப்பகம்

www.padippakam.com

ஒன்றியத்தில் லெனினுக்குப் பிறகு சோசலிசக் கட்டுமானத்துக்கு அவருடைய தலைமைப் பாத்திரம் மற்றும் உலகக் கம்யூனிச இயக்கத்திற்கு அவருடைய வழிகாட்டுதல் பற்றிய மதிப்பீடு; டிட்டோயிசம் மற்றும் டிட்டோவின் யுகோஸ்லாவியா, சோவியத் ஒன்றியத்தில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் - தொழிலாளர் கட்சி ஆகியவற்றின் இடத்தில் அனைத்து மக்கள் அரசு - அனைத்து மக்கள் கட்சியை மாற்றீடாக வைப்பது, சோவியத் ஒன்றியத்தில் பொருளாயத ஊக்கமளிப்புக்கு கூடுதல் அழுத்தம் தருவது ஆகியவை பற்றிய கண்ணோட்டம்; மற்றும் இன்றைய அரசியல் - சித்தாந்தப் பிரச்சினைகளில் நேரெதிரெதிரான கருத்துக்களை கொண்டிருக்கும் வெவ்வேறு சோசலிச அரசுகள் - கட்சிகளின் தலைவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைக்காக ஐக்கியப்படுவது என்ற கருத்து சரியா தவறா என்பது ஆகியவை குறித்து (நமது கட்சி) நிலையெடுக்க வேண்டி உள்ளது.''



ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு



ஜோதிபாசு

**சி.பி.(எம்) கட்சியை உருவாக்கிய ஈ.எம்.எஸ். - ரணதிவே - ஜோதிபாசு போன்ற தலைவர்கள் உலகக் கம்யூனிச இயக்கத்தில் பெரும் பிளவு ஏற்பட்ட போது, ''பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும்'' காட்டும் ஒரு சந்தர்ப்பவாத நிலையெடுத்தனர்.**

''இந்த சித்தாந்தப் பிரச்சினைகளோடு, ஒரு தொடர் அமைப்புக் கருத்துக்கள் மற்றும் நடைமுறை பற்றிய பாரிய வேறுபாடு கள் எழுந்துள்ளன. அவை, சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் வெவ்வேறு பிரிவு அமைப்புகளுக்கு இடையிலான உறவுகள், சோசலிச உலகின் வெவ்வேறு அரசுகளுக்கு இடையிலான உறவுகள், அதேபோல அரசு அதிகாரத்திலுள்ள கம்யூனிசக் கட்சிகள் மற்றும் அரசு அதிகாரத்தில் இல்லாத கம்யூனிசக் கட்சிகளுக்கிடையிலான உறவுகள் போன்றவை. சுருங்கக் கூறின், இந்த அடிப்படை சித்தாந்தப் பிரச்சினைகள் மீது உலகக் கம்யூனிச இயக்கத்தில் கடும் மோதல்களும், கருத்து முரண்களும் எழுந்துள்ளன. ஒரு மார்க்சிய - லெனினியக் கட்சி என்கிற முறையில் நமது கட்சி இவற்றின் மீது தனது கருத்துக்களைத் தெரிவிக்கவும் ஒரு தெள்ளத் தெளிவான நிலையெடுக்கவும் கடமைப்பட்டுள்ளது'' என்கிறது சி.பி.(எம்). [சித்தாந்தப் பிரச்சினைகள் மீதான நிலைப்பாடு பக்: 1-4 (சுருக்கமாக)]

சி.பி.எம். கட்சியின் சொந்த வாக்குமூலத்தையே பாருங்கள். சர்வதேசப் பொதுவுடைமை இயக்கத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றி கடும் வாதப் பிரதிவாதங்கள் நடந்து, இரு அணிகளாகப் பிளவுபட்டு, பகை முரண்பாடுகள் உருவான அந்தப் பத்தாண்டுகளில் முக்கியப் பிரச்சினைகள் எதன் மீதும் சி.பி.(எம்) முடிவெடுக்கவில்லை. சி.பி.(எம்) கட்சியின் தாய் அமைப்புடனான அரசியல் - சித்தாந்த - கோட்பாட்டுப் பிரச்சினைகள் மீது மட்டுமே முடிவெடுத்து தனிக் கட்சியானது. சோவியத் ஒன்றியக் கம்யூனிசக் கட்சி தலைமையிலான உலகத் திருத்தல்வாதக் கட்சிகள் அனைத்தும் சி.பி.(எம்) கட்சியையும் அதன் திட்டத்தையும் அங்கீகரிக்க மறுத்து சி.பி.(ஐ) கட்சியையும் அதன் திட்டத்தையும் ஆதரித்தன.

இந்த நிலையில் சோவியத் ஒன்றியத்தின் தலைமையிலான கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கம்யூனிசக் கட்சிகள் எடுத்த அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளை எதிர்க்க வேண்டிய அவசியத்துக்கு சி.பி.(எம்) கட்சி தள்ளப்பட்டது. இந்த எதிர்ப்பு கூட உண்மையானது அல்ல. சி.பி.(ஐ) கட்சியின் நிலைக்கு மாறுபட்டதாகக் காட்டிக் கொள்வதற்காக எடுக்கப்பட்டவைதாம். இந்தியக் கம்யூனிச இயக்கத்தின் பல்வேறு பிரச்சினைகளில் சி.பி.(ஐ) கட்சியிலிருந்து மாறுபட்ட நிலைப்பாடு கொண்டிருப்பதாக சி.பி.(எம்) எப்படி புளுகுகிறதோ, அதுபோலத்தான் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் உலக கம்யூனிச இயக்கம், சோசலிச கட்டுமானம் போன்ற பல்வேறு நிலைப்பாடுகள் மீது மாறுபாடுகள் கொண்டிருப்பதாக சி.பி.(எம்) புளுகுகிறது.

இந்தியக் கம்யூனிச இயக்கம் குறித்த டாங்கேயிசமும் உலகக் கம்யூனிச இயக்கம் குறித்த குருச்சேவ் - பிரஷ்நேவிசம் ஆகியவற்றின் மறுபதிப்புதான் சி.பி.(எம்) கட்சியின் நம்பூதிரி - ரணதிவே - ஜோதிபாசு கும்பலின் நிலைப்பாடுகள். இந்த உண்மை சி.பி.(எம்) கட்சிக்குள் இருந்த (நக்சல்பாரி) கம்யூனிஸ்டு புரட்சியாளர்கள் சி.பி.(எம்) கட்சியின் அரசியல் - சித்தாந்த கோட்பாடுகள் மற்றும் நடைமுறை மீது கேள்விகள் எழுப்பியபோது வெளிப்பட்டது.

உலகக் கம்யூனிச இயக்கத்தின் பிளவுக்கும், சீர்குலைவுக்கும் கடும் நெருக்கடிக்கும் உலக ஏகாதிபத்தியம் கட்டவிழ்த்து விட்ட தாக்குதலை முறியடிக்கும் முன்முயற்சி இழந்து வேதனைக்குரிய நிலை ஏற்படக் காரணமானது (குருச்சேவ் கும்பலின்) நவீனத் திருத்தல்வாத கோட்பாடுகள் தாம்'' என்று சி.பி.(எம்) சாடியது.

''ஏகாதிபத்தியம் இனிமேலும் ஒரு பயங்கர மிருகமல்ல என்றும் அதை அழித்தொழிக்காமலேயே சுதந்திரத்தையும் நிரந்தர அமைதியையும் அடைய முடியும் என்ற ஒரு கனவு உலகைப் படைக்கிறது, நவீனத் திருத்தல்வாதம். உலக சோசலிச அமைப்பின் ஐக்கியத்தையும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் ஐக்கியத்தையும் சீர்குலைக்கிறது. தேசிய விடுதலைப் போராட்டத்தையும் புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கத்தையும் கீழறுக்கிறது'' என்று சி.பி.(எம்) குற்றஞ் சாட்டியது.

''உலக சோசலிச அமைப்புக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் இடையிலான முரண்பாடுதான் மைய முரண்பாடு, அதன் தீர்வே பிற முரண்பாடுகளைத் தீர்த்துவிடும். மைய முரண்பாட்டையும் அமைதிவழிப் பொருளாதாரப் போராட்டம் போன்றவற்றால் தீர்த்துவிட முடியும் என்று (குருச்சேவ் கும்பலின்) திருத்தல்வாதம் கூறுகிறது. இந்த முற்றிலும் தவறான, இயக்கத்துக்கு மாறான புரிதலும்


படிப்பகம்

முரண்பாடுகள் பற்றிய திருத்தல்வாத மதிப்பீடுகளும் பல பெரிய தவறுகள் புரியக் காரணமாகிறது'' என்று சி.பி.(எம்) விமர்சித்தது.

''குருச்சேவால் வழிநடத்தப்பட்டு, தற்போதைய சோவியத் ஒன்றியக் கம்யூனிச கட்சியினால் பின்தொடரப்பட்ட நவீன திருத்தல்வாதம் உலகக் கம்யூனிச இயக்கம் மற்றும் தொழிலாளர் வர்க்க இலட்சியங்களுக்கு மிக மிகப் பெரிய நாசத்தை ஏற்படுத்தியிருக்கிறது''. ''பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை ஒரு அனைத்து மக்கள் அரசாக மாற்றி அமைப்பது பற்றிய பேச்சுக்களில் ஈடுபடுவது அல்லது வேறு சொற்களில் சொல்வதானால் பாட்டாளி வர்க்க அரசைக் கலைத்து விடுவது (அதேபோல கம்யூனிஸ்டு கட்சியை அனைத்து மக்கள் கட்சியாக்கிவிடுவது) மார்க்சிய - லெனினியத்துக்கு துரோகமிழைப்பதாகும்; தொழிலாளர் வர்க்கத்தின் முதுகில் குத்துவதாகும்.

''முதலாளித்துவ ஊக்கமளிப்பில் இறங்குவது மற்றும் தனிநபர் இலாபம் என்ற கருத்துக்கள், இறுதி ஆய்வில், புது வகையான முதலாளியத்தை மீண்டும் நிலைநாட்டுவதற்கு வழி வகுக்கும்; சோசலிசம் மற்றும் கம்யூனிச இலட்சியத்துக்கு ஊறுவிளைவிக்கும். ''நவீன திருத்தல்வாதத் தலைவர்கள் ஸ்டாலினை முற்றாக மறுதலித்ததானது, ஏகாதிபத்தியம், யுத்தம் மற்றும் சமாதானம் ஆகியவை பற்றிய ஒரு தொடரான மார்க்சிய - லெனினிய கோட்பாடுகள் மற்றும் வரையறுப்புகள் மீதும், பாட்டாளி வர்க்க மேலாதிக்கம் மற்றும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்ற கருத்தாக்கத்தின் மீதும், காலனிய மற்றும் சார்பு நாடுகளின் புரட்சிகளுக்கான போர்த்தந்திரம் மற்றும் செயல் தந்திரங்களின் மீதும் கம்யூனிசக் கட்சியின் தன்மை, குணாம்சம் மற்றும் பங்கு - பாத்திரத்தின் மீதும் அவர்கள் தாக்குதல்கள் தொடுப்பதாகும்'' என்றெல்லாம் சி.பி.(எம்) கடுமையாக விமர்சித்தது.

சோவியத் ஒன்றியக் கம்யூனிஸ்டு கட்சியின் தலைமை மட்டுமல்ல; உலக முழுவதும் அதைப் பின்பற்றிய கட்சிகள் மேலே சி.பி.(எம்) கட்சியின் கடும் விமர்சனத்துக்குள்ளான திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த அமைப்புக் கோட்பாடுகளையே ஏற்று அமல்படுத்தவும் செய்தன. ஒரு பத்தாண்டுகளுக்கு மட்டுமல்ல, அடுத்த 40 ஆண்டுகள் சோவியத் ஒன்றியம் மற்றும் பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த அமைப்புக் கோட்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. இருந்தபோதும், இக்கட்சிகளின் தலைமைகள்தான் திருத்தல்வாதம் பேசிக் கொண்டிருப்பதாகவும், இன்னமும் அந்தக் கட்சிகள் கம்யூனிஸ்டு கட்சிகள்தாம் என்றும், அந்தந்த நாடுகள் சோசலிச நாடுகளாகவே நீடிக்கின்றன என்றும் சி.பி.(எம்) கட்சி சாதித்து வந்தது. சோவியத் ஒன்றியம், பிற கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் சீனா - அல்பேனிய உட்பட அனைத்துமே சோசலிச முகாமின் அங்கங்கள் என்றும் அவை அனைத்தும் அடங்கிய ஒரு சோசலிச முகாம் நீடித்திருப்பதாகவும் சி.பி.(எம்) புளுகி வந்தது.

''திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த கோட்பாடுகளையும் நடைமுறையையும் கொண்ட கட்சிகளைக் கம்யூனிசக் கட்சிகளாகக் கருத முடியாது; பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தையும் பாட்டாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாகவும் இருக்க வேண்டிய கம்யூனிச கட்சியும் அனைத்து மக்கள் அரசாகவும், அனைத்து மக்கள் கட்சியாகவும் மாறிவிடும் போது அந்நாட்டில் முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு விடுகிறது.


பிரஷ்னேவ்

**இந்திய கம்யூனிச இயக்கம் குறித்த டாங்கேயிசமும் உலக கம்யூனிச இயக்கம் குறித்த குருச்சேவ் - பிரஷ்நேவிசம் ஆகியவற்றின் மறுபதிப்புதான் சி.பி.(எம்) கட்சியின் நம்பூதிரி - ரணதிவே - ஜோதிபாசு கும்பலின் நிலைப்பாடுகள்.**

அந்தக் கட்சிகள் வேறு வகையான முதலாளியக் கட்சிகளாகி விடுகின்றன'' என்கிற (நக்சல்பாரி) கம்யூனிசப் புரட்சியாளர்களின் நிலைப்பாடுகளை இடதுசாரி வறட்டுவாதம், இடதுசாரி குறுங்குழுவாதம் என்று சி.பி.(எம்) அவதூறு செய்தது.

எந்தத் திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த - அமைப்புக் கோட்பாடுகளைப் பின்பற்றுவதற்காக சி.பி.(ஐ) கட்சியில் இருந்து விலகித் தனிக்கட்சி, தனித்திட்டம் என்று பிரிந்து போனார்களோ அதே திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த - அரசியல் - அமைப்புக் கோட்பாடுகளைப் பின்பற்றும் பிற நாடுகளின் கட்சிகளைக் கம்யூனிசக் கட்சிகள்தாம் என்று ஏற்று அங்கீகரித்துக் கொண்ட சி.பி.(எம்). ''தலைமை மட்டுமே திருத்தல்வாதத் தலைமை'' என்று சித்தரித்தது.

இது எப்படி சாத்தியம்? நாற்பதாண்டுகளாகத் திருத்தல்வாதத் தலைமையையும், திருத்தல்வாத அரசியல் - சித்தாந்த - கோட்பாடுகளையும் ஏற்றுக் கொண்டிருக்கும் கட்சி எப்படி கம்யூனிசக் கட்சியாக நீடிக்க முடியும்? அப்படிப்பட்ட தலைமையையும், கோட்பாடுகளையும் கொண்டிருக்கும் நாடுகள் எப்படி சோசலிச நாடுகளாக நீடிக்க முடியும்? இத்தகைய கோட்பாடுகளை நிராகரித்துவிட்டு புரட்சிகர அரசியல் - சித்தாந்த அமைப்புக் கோட்பாடுகளை அமலாக்கும் கட்சிகளும் நாடுகளும் - ஏற்கனவே அவற்றுகிடையே பகை முரண்பாடுகளாக வளர்ந்துவிட்ட நிலையில்; திருத்தல்வாதத்தை பின்பற்றும் கட்சிகள் நாடுகளோடு இணைந்து ஒரே சோசலிச முகமாக எப்படி நீடித்திருக்க முடியும் - என்கிற கேள்விகளுக்கு சி.பி.(எம்) கட்சியிடமிருந்து இன்னமும் பதில்கள் வரவில்லை.

அதற்கு மாறாக, ''சோசலிச முகாம் இனி மேலும் கிடையாது, பிளவுபட்டுவிட்டது; உலகின் முதல் சோசலிச நாடு உட்பட பெரும்பாலானவற்றில் முதலாளித்துவம் மீண்டும் நிலைநாட்டப்பட்டு விட்டது'' என்று சொன்னால் புரட்சிகர அணிகளும், மக்களும் ஏமாற்றமடைவார்கள், அது கம்யூனிச இயக்கத்துக்கு பலவீனமாகிவிடும் என்கிற உணர்வை மட்டுமே முன்வைத்து சி.பி.(எம்) வாதிட்டது. ''ஒரு முறை சோசலிசம் நிலைநாட்டப்பட்டு விட்டால், மீண்டும் எப்படி முதலாளித்துவம் வரும்? அங்குள்ள உடமைகள் இன்னமும் அரசிடம் தானே இருக்கின்றன? முதலாளித்துவம் நிலைநாட்டப்பட்டு விட்டது என்றால் சோசலிச முகாமின் கதி என்னவாகும்? ஏகாதிபத்தியத்தின் முன் உலகக் கம்யூனிச இயக்கம் பலவீனமாகி விடாதா? என்பது போன்ற எதிர்க் கேள்விகளும் (பாமரத்தனமான) வாதமும் மட்டுமே சி.பி.(எம்) முன்வைத்தது. யதார்த்தத்தை ஏற்க மறுத்தது. இதற்குக் காரணம், சி.பி.(எம்) கட்சியே ஒரு திருத்தல்வாதக் கட்சியாக இருப்பதுதான்!

(தொடரும்)

## அறிவிப்பு

**'தாராளமயத் தாசர்களும் நவீன எட்டப்பர்களும்' என்ற தொடர் கட்டுரை தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்த இதழில் இடம் பெறவில்லை எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

**- ஆசிரியர் குழு.**

www.padippakam.com





### விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின்

## மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடு

# இருண்ட வானில் உதித்த ஒளிக்கீற்று

**பு**திய பொருளாதாரக் கொள்கையைத் தொடங்கி வைத்து, டங்கல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட பொழுது, ''இனி நாட்டில் பாலாறும், தேனாறும் ஓடும்'' என ஆளுங் கட்சிகள் மட்டுமல்ல, பொருளாதார மேதாவிகளும் ஆருடம் சொன்னார்கள். ஆனால், இவையனைத்தும் கட்டுக்கதை என்பதும், இயற்கையாய்க் கிடைக்கும் குடி தண்ணீருக்கே டங்கல் ஒப்பந்தம் வேட்டு வைத்து, மக்களின் உயர் வாழும் உரிமைகள் அனைத்தையும் பறித்து வருகிறது என்பதும் அம்பலமாகிவிட்டது. விவசாயிகள், தொழிலாளர்கள், வங்கி - காப்பீடு துறை ஊழியர்கள், வணிகர்கள், சிறுதொழில் அதிபர்கள் எனப் பலதரப்பட்ட மக்கள், இந்தியாவெங்கும், தாராளமயத்தை எதிர்த்துப் போராடி வருவதே இதற்கு சாட்சி. அதேசமயம், அரசோ, இப்போராட்டங்களை சட்டையே செய்யாமல், அரிசி, கோதுமை, ஊதுபத்தி, ஊறுகாய் மட்டை என அனைத்து விதமான பொருட்களையும் அந்நிய நாடுகளில் இருந்து எவ்விதத் தடையும் இன்றி இறக்குமதி செய்து கொள்வதற்கு வசதியாக இறக்குமதி கொள்கையைத் தளர்த்துகிறது. இது, ஏற்கனவே தாராளமயத்தால் தடுமாறிக் கொண்டிருக்கும் விவசாயத்தை, சிறு தொழில்களை ஒரேயடியாக சவக்குழிக்குள் தள்ளிவிடும் அபாயம் நிறைந்ததாகும்.

இந்நிலையில்தான், மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ.க.), விவசாயிகள் விடுதலை முன்னணி (வி.வி.மு.), புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி (பு.ஜ.தொ.மு.), புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (பு.மா.இ.மு) - ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து கோவையில், ''விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டை'' நடத்துவதாக அறிவித்தன.

தாராளமயத்துக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டங்களால் திடீரென விழித்துக் கொண்டு அறிவிக்கப்பட்ட மாநாடல்ல, இது. 1985-ஆம் ஆண்டு ராஜீவ் புதிய பொருளாதாரக் கொள்கையை அமல்படுத்தத் தொடங்கிய பொழுதே, இப்புரட்சிகர அமைப்புகள், ''இது, நாட்டை அமெரிக்காவுக்கு அடிமையாக்கும் சதி'' என எச்சரித்தன; உலக வங்கி, சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைக்கு அடிபணிந்து, நரசிம்மராவ், தாராளமயம் - தனியார்மயத்தைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தத் தொடங்கிய பொழுது இவ்வமைப்புகள், ''இது நாட்டை மறுகாலனியாக்கும் முயற்சி'' என அம்பலப்படுத்தி, அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டிப் போராடத் தொடங்கின.

''டங்கல் ஒப்பந்தம் அமுலுக்கு வந்ததை எதிர்த்து தமிழகத்தின் முக்கிய நகரங்களில் நடத்தப்பட்ட ரயில் மறியல்; தாராளமயம் விவசாயத்தை நாசமாக்குவதை எதிர்த்து சீர்காழியில் நடந்த இறால் பண்ணை அழிப்புப் போராட்டம்; கம்பம் - போடி பகுதியில் நடத்தப்பட்ட தேக்குப் பண்ணை அழிப்புப் போராட்டம்; பன்னாட்டு நிறுவனங்கள் இந்திய விவசாயத்தை முழுமையாகத் தங்கள் பிடிக்கும் கொண்டுவர முயலும் சதித்தனத்தை அம்பலப்படுத்தி நடந்த மான்சாண்டோ எதிர்ப்பியக்கம்; நெய்வேலியில் தனியார் மின் நிலையம் அமைக்க அனுமதிக்கப்பட்டதை எதிர்த்து நடந்த மறியல் போராட்டம்; 'நாட்டை மறுகாலனியாக்காதே; மரணக் குழியில் மக்களைத் தள்ளாதே' என்ற முழக்கத்தின் கீழ் தமிழகம் தழுவிய அளவில் நடந்த பிரச்சார இயக்கம்; நாடு மறுகாலனியாகும் பொழுது, 'போலி சுதந்திரத்திற்கு பொன்விழா ஒரு கேடா!' என்ற முழக்கத்தை முன் வைத்து, தமிழகம் தழுவிய அளவில் நடந்த பொதுக்கூட்ட பிரச்சார இயக்கம்'' - இவற்றின் தொடர்ச்சியாகவே இம்மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடும், பேரணியும், பொதுக்கூட்டமும் கடந்த ஏப்ரல் 22 மற்றும் 23 தேதிகளில் கோவையில் நடைபெற்றன.

கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கிய இம்மாநாடு பற்றிய பிரச்சார இயக்கம் தமிழகம் தழுவிய அளவில் நடத்தப்பட்டது. சுவரெழுத்து, சுவரொட்டி, துண்டுப் பிரசுர விநியோகம், மிதிவண்டிப் பிரச்சாரம், வீடு வீடாகச் சென்று பொது மக்களைப் பார்த்து, பேசி, ஆதரவு திரட்டுவது, தெருமுனைக்



விவசாயம் பற்றி நடந்த கருத்தரங்கின் முதல் அமர்வில் காந்திய கிராமப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திரு. மார்க்-கண்டன் உரையாற்றுகிறார். அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து) தோழர்கள் மாறன், கதிரவன் மற்றும் டாக்டர் எம்.ஆர். சிவசாமி.



சிறுதொழில் பற்றி நடந்த கருத்தரங்கின் இரண்டாம் அமர்வில் சிறு விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கச் செயலர் திரு. வி.டி. அரசு உரையாற்றுகிறார். அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து) தோழர்கள் இராசன், கதிரவன் மற்றும் திரு. சி.பி. சண்முகசுந்தரம்.



படிப்பகம்

www.padippakam.com



கூட்டம் - என சாத்தியப்பட்ட அனைத்து வழிகளிலும் பிரச்சார இயக்கம் இலட்சக் கணக்கான மக்களைச் சென்றடையும் வண்ணம் விரிவான அளவில் மேற்கொள் ளப்பட்டது. கோவில்பட்டி, கோபி, நாமக்கல் உள்ளிட்டு சில குறிப்பிட்ட நகரங்களில் மட்டும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன.

''இப்பிரச்சார இயக்கத்தின்பொழுது ஒரு சிலர் தாமாகவே முன் வந்து நன்கொடை அளித்து, தேநீர் வாங்கிக் கொடுத்து உற்சா கப்படுத்தியதாகவும்; ஓரிரு பகுதிகளில் மாற்று அமைப்பு - கட்சிகளைச் சேர்ந்த இளைஞர்கள், நம்முடன் வந்து பிரச்சாரத் துக்கு உதவியதாகவும்; பகுதி மக்கள் தாமே முன் வந்து ரேஷன் பிரச்சினை; மண்ணெண்ணெய் - சமையல் எரிவாயு விலை உயர்வு; ஆலை மூடல் போன்ற தாரா ளமயத்தின் பொருளாதாரத் தாக்குதல்களை முறையிட்டதாகவும்'' சென்னை நகரத்தில் பிரச்சாரம் செய்த பு.ஜ.தொ.மு. தோழர்கள் கூறுகின்றனர். துறையூர் பகுதியில் நான்கா வது, ஐந்தாவது படிக்கும் சிறுவர்கள் மாநாடு பற்றி ஆசிரியர்களிடம், மக்களிடம் பிரச் சாரம் செய்து 225 ரூபாயை நிதியாக வசூலித் திருக்கின்றனர். அந்தளவிற்கு இம்மாநாடும், மாநாடு பற்றிய பிரச்சார இயக்கமும், தமிழக மெங்கிலும் பொது மக்களை ஈர்ப்பதாக அமைந்தது.

''தாராளமயத்தால் பாதிக்கப்பட்ட பல தரப்பட்ட பிரிவினரும் இம்மாநாட்டில் பங்கேற்க வேண்டும்; அவர்களின் கருத்துக் களும் இம்மாநாட்டில் பிரதிபலிக்க வேண்டும் என்பதற்காகவே இம்மாநாடு, ''விவசாயிகள் - தொழிலாளர்கள் - தேசிய முதலாளிகளின் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாடாக'' நடத்தப்பட்டது. அதற்கேற்ப, மாநாட்டுக் குழுவினர் மாற்று அமைப்பு களைச் சேர்ந்த விவசாயிகள், தொழிலா ளர்கள் சங்கப் பிரதிநிதிகளையும், தீப்பெட்டி தயாரிப்பு, வார்ப்படத் தொழில், ஆயுத்த ஆடை, கோழி வளர்ப்பு, குளிர்பானம் உள்ளிட்டு பல்வேறு தொழில்களை நடத்தி வரும் சிறுதொழில் அதிபர்களையும் சந்தித்துப் பேசினர். குறிப்பாக, பல்வேறு சிறுதொழில் சங்கங்களைச் சேர்ந்த பிரதி நிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரை யாற்ற இசைவு தெரிவித்தனர்.

ஏகாதிபத்திய ஆதிக்கத்தை எதிர்த்து வீழ்த்த விவசாயிகள் - தொழிலாளர்கள் - தேசிய முதலாளிகளின் ஐக்கியம் அவசியம் என்பதை சீன புரட்சிகர அனுபவம் நமக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறது. அந்த அனுப வத்தின் அடிப்படையில், அதை இந்தி யாவில் சாதிக்க எடுக்கப்பட்ட கன்னி முயற்சி இம்மாநாடு என்றே கூறலாம்.

பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23 மற்றும் 24 தேதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த இம்மாநாடு, அரசு பொதுத் தேர்வுகளின் காரணமாக ஏப்ரல் 15, 16-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. ஆனாலும், அத்தினங்களில் பெய்த கோடை மழையின் காரணமாக மீண்டும் ஏப்ரல் 22, 23-க்கு ஒத்தி வைக்கப்பட்டது. இதன் காரணமா கவே, மாநாட்டில் உரையாற்றுவதாக ஒத்துக் கொண்டி ருந்த சிலரால் பங் கெடுத்துக் கொள்ள இயலவில்லை.

கருத்தரங்கின் இரண்டு நாட்களி லும் நடந்த நான்கு அமர்வுகளிலும் விவசாய மற்றும் சிறு தொழில் அதிபர் சங்கப் பிரதி நிதிகள், பேராசிரி யர்கள், ம.க.இ.க., வி.வி.மு., பு.ஜ.தொ.மு. அமைப்புகளைச் சேர்ந்தோர் பங்கேற்று உரை யாற்றினர்.

மேலும், கருத்த ரங்கில் தேயிலைச் சந்தையில் ஆதிக் கம் செலுத்தும் பன் னாட்டு நிறுவனங் களுக்கு எதிரான போராட்டமாக, நீல கிரி தேயிலை விவ சாயிகளால் உற் பத்தி செய்யப்படும் ''கோத்தகிரி தேயி லை'' விற்பனை துவக்கி வைக்கப் பட்டது; உலகமய மாக்கத்தால் தேயிலை விலை வீழ்ந்து, அதனால் வாழ்விழந்த நீலகிரி தேயிலை விவசா யிகள் மற்றும் தோட்டத் தொழிலா ளர்களின் போராட் டத்தையும் வாழ்க் கையையும் சித்தி ரிக்கும், ''புதிய கலாச்சாரம் - திரை முழக்கம்'' தயாரித்த ''தீக்கொழுந்து'' என்ற குறும்படத் தின் குறுந்தகடு (C.D.) வெளியிடப் பட்டது. கருத்தரங் கின் முடிவில் பேர ணியும், பொதுக் கூட்டமும் நடை பெற்றன.



நீலகிரி தேயிலை விவசாயிகளின் போராட்டம் பற்றித் தயாரிக்கப் பட்ட குறும்படம் ''தீக்கொழுந்தின்'' குறுந்தகட்டை (C.D.) வெளி யிட்டுப் பேசுகிறார், ம.க.இ.க. மாநிலச் செயலர் தோழர். மருதையன்

அரங்கத்தில் இடம்பெற்ற ''கோத்தகிரி தேயிலை'' விற்பனை அங்காடி: பன்னாட்டு தேயிலை நிறுவனங்களுக்கு எதிரான போர்!



www.padippakam.com



கருத்தரங்கில் பேசிய மாற்று விவசாய சங்கப் பிரதிநிதிகளும், சிறுதொழில் சங்கங்களைச் சேர்ந்தவர்களும் புரட்சிகர அரசியலை ஏற்றுக் கொண்டவர்கள் கிடையாது. அரசாங்கத்திற்கு மனு கொடுத்தோ, தேர்தலில் எதிர்க் கட்சிகளை ஆதரித்தோ தாராளமயத் தாக்குதலில் இருந்து தப்பிவிட முடியும் என நம்பகிறவர்கள்தான். இன்னும் சொல்லப் போனால், ''அரசியல்வாதிகள் கமிசனுக்காகதான் இறக்குமதியை அனுமதிக்கிறார்கள்; இறக்குமதியாகும் பொருளுக்குக் கூடுதலாக வரி போட்டு விட்டால் எல்லாம் சரியாகப் போய்விடும்'' என்று எண்ணுகிறார்கள். இவர்கள் மட்டுமல்ல, தாராளமயத்தால் பாதிக்கப்பட்ட ஆகப் பெரும்பாலோர் இப்படிதான் எண்ணுகிறார்கள்.

இவர்களையெல்லாம் பொருத்தவரை தாராளமயம் - தனியார்மயம், பன்னாட்டு நிறுவனங்களின் ஆதிக்கம் எல்லாம் வெறும் பொருளாதார பிரச்சினை. ஆனால், உண்மை அதுவல்ல. எப்படி ஒரு கிழக்கிந்திய கம்பெனி தன்து வர்த்தக நலன்களுக்காக நமது நாட்டை அடிமையாக்கி, தனக்கான ஓர் அரசாட்சியை உருவாக்கிக் கொண்டதோ, அதுபோல இன்று பன்னாட்டு மற்றும் தேசங் கடந்த நிறுவனங்களும், வங்கிகளும், மேலாதிக்க வல்லரசுகளும் தங்களின் வர்த்தக நலன்களுக்காக, அரசியல் - இராணுவ மேலாதிக்கத்திற்காக நமது நாட்டின் சட்டம், நீதி, அரசு முறை அனைத்தையும் படிப்படியாக மாற்றியமைத்து, நமது நாட்டை மீண்டும் அடிமையாக்கிக் கொண்டு வருகின்றன. எனவே, நாடு மறுகாலனியாவதுதான் பிரச்சினை. இதற்கு எதிரான போராட்டங்களை ஒடுக்க, நாடாளுமன்ற ஆட்சி முறையைத் தூக்கியெறிந்துவிட்டு, பாசிச ஆட்சியைத் திணித்திட ஆளுங் கும்பல் முயன்று வருகிறது. ஆதலால், இப்பிரச்சினையை மனு கொடுப்பதன் மூலமோ, ஆளுங் கட்சியை தேர்தலில் தோற்கடிப்பதன் மூலமோ மாற்றியமைத்து விட முடியாது. புரட்சிகரப் பாதையில் இரண்டாம் சுதந்திரப் போரைத் தொடங்குவதுதான் தீர்வு.

அமெரிக்க மோகத்தைக் கேலி செய்து நடந்த ம.க.இ.க. மையக் கலைக் குழுவினரின் கலை நிகழ்ச்சி.




''தாராளமயத்தால் பாதிக்கப்படும் பெரும்பாலோரை புரட்சிகர அரசியலை நோக்கி இழுக்க, இது போன்ற ஒரு மாநாடல்ல, ஓராயிரம் மாநாடுகள் நடத்த வேண்டியிருக்கும்'' என்றார் மருதையன். தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் எம்.ஆர். சிவசாமி, ''எனக்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையில்லை; ஆனாலும் இப்பொழுது தேவை போராட்டம் அல்ல; புரட்சி. இம்மாநாடு அதற்கான வித்தாக இருக்கும்'' என்றார். நாம் முதல் வித்தை மிகச் சரியாகவே விதைத்திருக்கிறோம்!

இவண்,
ம.க.இ.க., வி.வி.மு.,
பு.ஜ.தொ.மு.,
பு.மா.இ.மு., தமிழ்நாடு.

---



# ''கத்தியின்றி, ரத்தமின்றி நாடு மறுகாலனியாகுது!''

— தோழர். கதிரவன், ம.க.இ.க., மாநிலச் செயற்குழு உறுப்பினர்.

விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின் மறுகாலனியாதிக்க எதிர்ப்பு மாநாட்டைத் தலைமை உரையாற்றித் துவக்கி வைத்த மக்கள் கலை இலக்கியக் கழக மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் கதிரவன், ''பகத்சிங் நினைவு நாளான மார்ச் 23 அன்று நடைபெற வேண்டிய இம்மாநாடு, தவிர்க்கவியலாத காரணங்களினால் இன்று - ஏப்ரல் 22 அன்று தொடங்குகிறது. மார்ச் 23-ஐப் போலவே இந்த நாளும் பொருத்தமான நாள்தான். காரணம், உலகெங்கிலுமுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளிகளின் தோழன் லெனினின் பிறந்த நாள் இது'' எனக் குறிப்பிட்டுத் தனது உரையைத் தொடங்கினார்.

''நமது நாடு சுதந்திர நாடு; ஆள்பவர்களும் நம்மவர்கள்தான். பின் எப்படி நாடு மறுகாலனியாகிறது எனக் கூறுகிறீர்கள் என்று பொது மக்கள் கேட்பதாக''க் குறிப்பிட்ட அவர், 'அன்று பிளாசி யுத்தத்தின் மூலம் நமது நாடு காலனியானது. ஆனால், இன்று யுத்தம் கிடையாது; அதேசமயம், படைகளுக்குப் பதிலாக பன்னாட்டு நிறுவனங்கள் நமது நாட்டினுள் நுழைந்துள்ளன; ஆயுதங்களுக்குப் பதில் அவர்களது நிதி மூலதனம் ஊடுருவிப் பாய்கிறது. கத்தியின்றி, ரத்தமின்றி நமது நாடு சுதந்திரம் அடைந்ததாகக் கூறுவது பொய். 1947-இல் அரைக்காலனியாக மாறிய நமது நாடு, இப்பொழுது, கத்தியின்றி, ரத்தமின்றி, உலக வங்கி, ஐ.எம்.எஃப், உலக வர்த்தக நிறுவனம் மூலம் கமுக்கமாக மறுகாலனியாக்கப்படுகிறது'' எனப் பதில் அளித்தார்.

மேலும் அவர் தனது உரையில், ''இந்திய விவசாயிகள் எதை விளைவிக்க வேண்டும் என்பதையும், அதற்கான விலையையும் அவர்கள்தான் தீர்மானிக்கிறார்கள். 20 கோடி இந்திய மக்கள் ஈடுபட்டுள்ள நெசவுத் தொழில் நசிந்து வருவதால், நெசவாளர்கள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். பொருளாதார சீர்திருத்தம் என்பதே வேலை வெட்டி இல்லாமல் ஆக்குவது என்பது வெட்ட வெளிச்சமாகி விட்டது.''

''வெள்ளைக்காரன், தனது சுரண்டலுக்காக ரயில் பாதை போட்டதை, நாட்டை முன்னேற்றத்தான் என ஒரு கும்பல் தாளம் போட்டு, 'சர்' பட்டம் வாங்கியதைப் போல, இப்பொழுதும் ஒரு கும்பல் தாராளமயத்தை ஆதரித்துப் பேசி வருகிறது.''

''விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகளின் பொது எதிரி, பன்னாட்டு முதலாளிகள். பொது எதிரியை எதிர்த்த இந்தக் கூட்டணி புதியதல்ல. சீன புரட்சிகர அனுபவம் நமக்குக் கற்றுக் கொடுத்ததுதான். உப்புகூட அவர்கள் கைக்குப் போய்விட்ட இந்த அடிமைத்தனத்தை எதிர்த்து, நாம் வ.உ.சி., பகத்சிங் வழியில் போராட வேண்டும்'' எனக் குறிப்பிடடார்.

www.padippakam.com



## "இந்தியாவின் முதுகெலும்பை உடைக்கிறார்கள்"

— தோழர். மாறன்,
விவசாயிகள் விடுதலை முன்னணி.



கருத்தரங்கின் முதல் அமர்வுக்குத் தலைமை தாங்கிய உத்தமபாளையம் வட்டார விவசாயிகள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த தோழர். மாறன், "உணவு தானிய உற்பத்தியில் 'தன்னிறைவு' தகர்ப்பு; விவசாயத்தில் இருந்தே விரட்டப்படும் விவசாயிகள்; மான்சாண்டோ போன்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு விவசாய வளங்கள் தாரை வார்ப்பு" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

"தங்கமணி, சீரகச் சம்பா, கிச்சடிச் சம்பா, விறகுச் சம்பா, வறட்சியைத் தாங்கி மானாவாரி நிலங்களில் விளையும் திறன் கொண்ட புழுதி நெல்லு" என 30,000-க்கும் மேற்பட்ட நெல் இரக வகைகள் தமிழ்நாட்டில் இருந்ததாகவும், இந்தியாவெங்கிலும் ஒரு இலட்சம் இரக நெல் விதைகள் இருந்ததாகவும்" குறிப்பிட்ட தோழர் மாறன், சோளம், கம்பு, வரகு, பயறு போன்ற உணவு தானியங்களிலும் பல வகைகள் இருந்ததைச் சுட்டிக் காட்டினார்.

"விவசாயத் துறை அதிகாரிகள், 'கோடை உழவு செய்யுங்கள்', 'ஊடு பயிர் போடுங்கள்' என விவசாயிகளுக்கு கூறி வரும் அறிவுரைகளை, நமது விவசாயிகள் பன்னெடுங்காலத்துக்கு முன்பே, தமது அனுபவத்தின் மூலம் இந்த விஞ்ஞான உண்மைகளை அறிந்து வைத்திருந்தனர். தமிழக விவசாயிகள் சித்திரை, வைகாசியில் கோடை உழவு நடத்தி, ஆடியில் விதைத்து, மார்கழியில் அறுப்பார்கள். இப்படி நடந்த உழவு முறையில், விவசாயிகளுக்கு ஏழு மாதம் வேலை கிடைத்து வந்தது. இரும்புச் சோளம், தட்டாம் பயறு, பாசிப் பயறு, கல் பயறு போன்ற தானிய வகைகளை ஊடு பயிர்களாகப் பயிரிடுவார்கள். நிலத்திற்குத் தேவையான தழைச் சத்து - நைட்ரஜன் சத்தைத் தனியாகப் போட வேண்டியதில்லை. ஊடு பயிர்களாகப் போடப்படும் பயறு வகைகளின் வேர் முடிச்சுகளே தழைச் சத்தை நிலத்திற்கு அளித்து விடும். இந்த உணவுப் பயிர் தவிர, செவ்வரளி, முல்லை, சம்பங்கி போன்ற பூ விவசாயம், மருத்துவத்திற்குத் தேவையான மூலிகை விவசாயம் தனியாக நடந்து வந்தன" என இந்தியாவின் பாரம்பரிய விவசாயப் பெருமைகளை விவரித்தார்.

"இப்படி தன்னிறைவு கொண்ட பாரம்பரிய விவசாயம், வெள்ளைக்காரன் ஆட்சியில் பொதுமராமத்துப் பணிகளை அரசு செய்து கொடுக்காமல் கைகழுவியதன் மூலமும் விவசாயத்தில் ரயத்துவாரி, மகல்வாரி, ஜமீன்தாரி உடைமை முறைகளைப் புகுத்தியதன் மூலமும் சீரழிக்கப்பட்டது. அடுத்து வந்த 'பசுமை'ப் புரட்சி வீரிய ரக விதைகள், உரம், பூச்சி மருந்து என்ற மும்முனைத் தாக்குதலை நமது விவசாயத்தின் மீது தொடுத்தது. வீரிய இரக விதைகள் இந்தியாவில் இருந்து வந்த பாரம்பரிய விதைகளை ஒழித்தன; உரம், பூச்சி மருந்தால், மண்ணில் இருந்து வரும் நுண்ணுயிர்கள் இறந்து போய், நிலம் மலடானது. தீவிர சாகுபடித் திட்டங்களும், விவசாய வளர்ச்சித் திட்டங்களும் இந்தப் பழைய பாரம்பரிய விதைகளை அபிவிருத்தி செய்யவில்லை; மாறாக, கரும்பு, தென்னை, வாழை போன்ற பணப்பயிர் விவசாயத்திற்கே முன்னுரிமை அளித்தன. இதனால் விளைச்சலில், 1965-இல் 69 சதவீதமாக இருந்த உணவுப் பயிர் உற்பத்தி, இன்று 25 சதவீதமாகச் சுருங்கிப் போய் விட்டது."

"தாராளமயம் இதனை விரைவுபடுத்துகிறது. அரிசிக்கும், கோதுமைக்கும் உர மானியத்தை வெட்டும் தாராளமயம், 25,000 ஏக்கரில் மலர்களைப் பயிரிட்டு ஏற்றுமதி செய்யும் ஈ.ஐ.டி. பாரி, குளோரோ ஃப்ளொரசன்ஸ் உள்ளிட்ட 14 நிறுவனங்களுக்கு மானியத்தை வாரி வழங்குகிறது. இந்நிறுவனங்கள் தங்களின் மலர்கள் பற்றி விளம்பரம் செய்ய இரண்டு இலட்சம் மானியம்; பூக்களை விமான நிலையத்திற்குக் கொண்டு செல்ல குளிரூட்டும் வாகனம் வாங்க 50 சதவீத் மானியம்; மலர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதென்றால் விமானக் கட்டணத்தில் கிலோவுக்கு ஐந்து ரூபாயும் அமெரிக்காவுக்கு என்றால் ஏழு ரூபாயும் மானியமாகத் தரப்படுகிறது."

"ஏப்ரல் 1 முதல் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, தாராளமாக இறக்குமதி செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ள 1427 பொருட்களில் 265 பொருட்கள் விவசாய விளைபொருட்கள். இது இந்தியாவின் முதுகெலும்பை உடைப்பதாகும். பிலிப்பைன்சில் இருந்து இறக்குமதியாகவுள்ள பொன்னி இரக அரிசி கிலோ ரூ. 10.50 தான். அதே சமயம் உள்ளூர் பொன்னி அரிசி கிலோ 14 ரூபாயில் இருந்து 28 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இந்தக் கழுத்தறுப்புப் போட்டியால், கோடிக்கணக்கான விவசாயிகள் மரணக் குழிக்குள் விழப் போகிறார்கள்."

"இந்த அபாயத்தை ஓட்டுக் கட்சிகளோ, பத்திரிகைகளோ விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்வதில்லை. நாடு மறுகாலனியாக்கப்படுவதை நாம் எடுத்துச் சொன்னால், 'நடைப்பிணமான நாங்க இதை எதிர்க்கவா முடியும்!' என விவசாயிகள் விரக்தியோடு பேசுகிறார்கள்; 'இந்தக் கொள்கையால் நாலு விவசாயிக்காவது நல்லது கிடைச்சா, அதை ஏன் எதிர்க்கிறீர்கள்?" என்று அப்பாவித்தனமாக கேட்கிறார்கள். இப்படி அறியாமையிலும், விரக்தியிலும், வறுமையிலும் உழலும் விவசாயிகளைத் தான் எழுச்சி கொள்ளச் செய்ய வேண்டிய கடமை நமக்கு உள்ளது" என தோழர் மாறன் பாரம்பரிய உணவு விவசாயத்தின் எச்ச சொச்சங்கள் கூட அழிந்து போகக் கூடிய அபாயத்தையும், அதற்கு எதிராகப் போராட வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டிப் பேசினார்.

## "விவசாயத்தை நாசமாக்கியவர்கள், தரத்தைப் பற்றிப் பேசலாமா?"

— திரு. மார்க்கண்டன், முன்னாள் துணை
வேந்தர், காந்தி - கிராமியப் பல்கலைக் கழகம்.



கருத்தரங்கின் முதல் அமர்வில் பேசிய திரு. மார்க்கண்டன், நாடு மறுகாலனியாகி வருவதை, "சுதந்திரத்துக்கு முன்பிருந்த தோற்றம் தெரிவதாக"க் குறிப்பிட்டதோடு, "காந்தி ஒரு ஏகாதிபத்திய நிறுவனத்தைத்தான் எதிர்த்துப் போராடினார்" எனக் கூறி, இன்று இந்தியாவைக் கொள்ளையிட்டு வரும் நூற்றுக் கணக்கான ஏகாதிபத்திய நிறுவனங்களை எதிர்த்துப் போராட வேண்டியிருப்பதை மறைமுகமாகச் சுட்டிக் காட்டினார்.

www.padippakam.com



''விளைபொருட்களின் இறக்குமதியால் இந்திய விவசாயிகள் தங்கள் விளைச்சலை சந்தையில் விற்க முடியவில்லை. தீப்பெட்டி இறக்குமதியால் சிவகாசி, சாத்தூர், கோவில்பட்டி பகுதிகளைச் சேர்ந்த 2½ இலட்சம் குடும்பங்கள் அழிவின் விளிம்பில் நிற்கின்றன. இந்த நிலைமையில் மக்களை யார் காப்பாற்றுவது? நடிப்புச் சுதேசிகளை நம்பிப் பலனில்லை.''

''கடந்த ஐம்பதாண்டுகளில் விவசாயத்திற்கு ஒன்றும் செய்யாமல் பாழடித்தவர்கள், இன்று தரத்தை உயர்த்தச் சொல்கிறார்கள். நமது நாட்டின் மற்றொரு முக்கிய பிரச்சினை கடன். அரசின் பெரும் பகுதி வருமானத்தைக் கடனும், கடனுக்கான வட்டியும், அதிகாரிகளும், இராணுவமும் தின்று தீர்த்து விடுகின்றன. இதனை எடுத்துச் சொல்லாமல் படித்த நடுத்தர வர்க்கம் கோழைத்தனமாக உள்ளது. தவறு நடக்கிறதென்று எடுத்துச் சொல்லி, மக்களைப் போராடச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு நமக்குள்ளது'' எனக் குறிப்பிட்டார். மேலும், ''நல்ல அரசியல் தலைமையும், அதிகாரப் பரவலும், மார்க்சிய - காந்திய சிந்தனை இணைவதுமே இன்றுள்ள நிலைமைக்கு மாற்றாக அமையும்'' என்றார்.



''கட்டுப்படியாகாத விலை; கடன் சுமை; மானியங்கள் ரத்து; காட் ஒப்பந்தத்தால் கருகும் விவசாயம்'' எனும் தலைப்பில் உரையாற்றிய தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் டாக்டர். எம்.ஆர். சிவசாமி, ''அன்று ஒரு கிழக்கிந்திய கம்பெனி; 100 ஆண்டுகள் அடிமைகளாய் இருந்தோம். இன்று 200 பன்னாட்டு கம்பெனிகள்; 2000 ஆண்டுகள் அடிமையாய்க் கிடக்க வேண்டியது தானா?'' என நாட்டைச் சூழ்ந்துள்ள அபாயம் பற்றி கேள்வி எழுப்பினார்.

''ஐந்து ரூபாய், ஆறு ரூபாய் என விற்றுக் கொண்டிருந்த தேங்காய் இரண்டு ரூபாயாகச் சரிந்தது; தேயிலையின் விலை கிலோ 4 ரூபாய்க்கு விழுந்தது; கிலோ 40 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த மஞ்சளின் விலை இன்று 5 ரூபாய்; வெங்காயத்துக்கு நல்ல விலை கிடைக்காததால், வெங்காயத்தோடு சேர்த்து உழுதார்கள் விவசாயிகள். விவசாய விளைபொருட்கள் 5 சதவீத அளவு இறக்குமதியாகும் பொழுதே விவசாயிகளின் கதி இதுவென்றால், ஏப்ரல் 1-க்கு பிறகு...? பொள்ளாச்சி பகுதியில் தென்னை பயிரிடும் விவசாயிகளை நாங்கள் எசமான் என்போம். அவர்கள்கூட இப்பொழுது போராட வந்து விட்டார்கள். பெரிய விவசாயி, சிறிய விவசாயி என்ற வேறுபாடு இப்பொழுது இல்லை. காட் ஒப்பந்தத்தால் எல்லோருக்கும் அபாயம் வந்துவிட்டது.''

''ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட்டாச்சு; இனி மாத்த முடியுமா என்று கேட்கிறார்கள். ஐரோப்பிய பொதுச் சந்தை ஒப்பந்தம் போட்டார்கள். அதில் கையெழுத்துப் போட்ட ஒரு நாட்டின் விவசாயிகள், தங்களின் ஆப்பிள் விலை குறைந்ததால், அந்த நாட்டு வாத்தக அமைச்சர் வரும் இடங்களுக்கெல்லாம் திரளாகப் போய், அவர் மீது ஆப்பிளைத் தூக்கியெறிந்து அடித்தார்கள். ஆப்பிள் அடி தாங்க முடியாமல், அந்த அமைச்சர் பொதுச் சந்தையில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். நம்ம தென்னை விவசாயிகளும், பிள்ளையாருக்கு உடைப்பதற்குப் பதிலாக மாறன் தலையில் தேங்காயைப் போட்டு உடைத்தால், உ.வ.க.வில் இருந்து ஓடி விடுவார்.''

## ''தேங்காயை மாறன் தலையில் போட்டு உடைப்போம்!''

**— டாக்டர். எம்.ஆர். சிவசாமி, மாநிலத் தலைவர், தமிழக விவசாயிகள் சங்கம்.**


''பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ளது நமது நாடு. எண்ணெய் வளம் தவிர எல்லா வளமும் இருக்கிறது. எண்ணெய்க்குப் பதிலாகக் கூட, கரும்பில் இருந்து கிடைக்கும் எத்தனால் என்ற எரிபொருளை, பிரேசிலைப் போல நாமும் பயன்படுத்தலாம். பிறகு ஏன் எல்லாத்தையும் இறக்குமதி செய்கிறார்கள்? அரசியல்வாதிகளுக்குக் கிடைக்கும் கமிஷன்தான் காரணம்.''

''சாஸ்திரி 'ஜெய் ஜவான், ஜெய் கிஸான்' என்றார். அதில்தான் ஊழல் புகுந்து விளையாடுகிறது. விவசாயத்தில் யூரியா ஊழல்; சர்க்கரை ஊழல்; மாட்டுத் தீவன ஊழல். இராணுவத்தில் போஃபர்ஸ் ஊழல்; தெகல்கா ஊழல். 5 சதவீத தாராள இறக்குமதி நடந்த பொழுதே இத்துணை ஊழல். இப்பொழுது 100 சதவீத தாராள இறக்குமதி...!''

''தொழில்மயமானால் நாடு முன்னேறும் என்றார்கள். ஆனால், தனியார் துறையும், அரசுத் துறையும் சேர்த்தே 2½ கோடி பேருக்குதான் வேலை கிடைத்தது. இப்பொழுது கம்ப்யூட்டர் மயம். இது இருக்கிற வேலையையும் பிடுங்கி விடுகிறது. கடன் சுமையால் சாகும் விவசாயியைக் கம்ப்யூட்டரால் காப்பாற்றவா முடியும்?''

''புதிய பொருளாதாரக் கொள்கை இந்த நாட்டில் 100 கோடி வயிறும், 200 கோடி கைகளும் இருப்பதை மறந்து விடுகிறது. தாய்லாந்தில் இருந்து 6 ரூபாய்க்கு அரிசி இறக்குமதியாவதால், விவசாயம் செய்ய முடியாது; டென்மார்க்கில் இருந்து ஐந்து ரூபாய்க்கு பால் இறக்குமதியாவதால், விவசாயிகள் மாடு கூட மேய்த்துப் பிழைக்க முடியாது. ஏற்கனவே, விளைபொருட்களுக்கு கட்டுப்படியாகாத விலை. இப்பொழுது அந்த விலைக்கும் ஆபத்து வந்துவிட்டது.''

''தேர்தலுக்குப் பிறகு விவசாயிகள் மீது மும்முனைத் தாக்குதல் நடக்கும். ஒன்று, ஏப்ரல் 1-க்குப் பிறகு வந்துள்ள தாராள இறக்குமதி; இரண்டாவது, கடன் ஜப்தி; மூன்றாவது, இலவச மின்சாரம் ரத்து... எனக்கு ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கையில்லை. ஆனாலும், இப்பொழுது தேவை போராட்டமல்ல; புரட்சி. அதற்கு இந்த மாநாடு வித்தாக இருக்கும்.''



கருத்தரங்கின் இரண்டாவது அமர்வு, தாராளமயம் உள்நாட்டுத் தொழில்களை அழித்து, குழிதோண்டி புதைத்து வருவது குறித்து நடந்தது. இந்த அமர்வுக்குத் தலைமை தாங்கிய புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி பொதுச் செயலர் தோழர். சுப. தங்கராசு, ''இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நீக்கம்; அந்நியப் பொருள்களின் குவிப்பு; லட்சக்கணக்கான சிறு தொழில்கள் அழிப்பு'' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

## ''உள்நாட்டு சிறுதொழில்களை முடக்கிவிட்டு, முன்னேற முடியுமா?''

**— தோழர். சு.ப. தங்கராசு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, தமிழ்நாடு.**

''கோவை மாவட்டத்தில் இயங்கி வந்த 1150 மில்களில் சிறிய

www.padippakam.com



மில்கள் கதவடைப்பு செய்துவிட்டன; பெரிய மில்களிலோ ஆட்குறைப்பு. அதனால், இப்போது கோவையில் 'மில்லுக்குப் போறேன்' என்பதையே கேட்க முடிவதில்லை'' என வருத்தத்தோடு குறிப்பிட்ட அவர், ''இதற்கு பஞ்சு ஏற்றுமதி, நூற்பு இயந்திரம் இறக்குமதி, மின்சாரக் கட்டணம் உயர்வு போன்றவைதான் காரணம்'' எனக் கூறினார். ஜவுளித்துறை ஆணையர் வீ.சி. கட்டாவ், விசைத்தறி வளர்ச்சி ஆணையர் மதிவாணன் போன்ற அதிகாரிகள் கூட, அமெரிக்காவுக்குச் சாதகமாக ஜவுளித்துறை தாராளமயமாக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை எடுத்துக் கூறினார்.

சோப்பு, குளிர்பானத்தையடுத்து, 1000 கோடி ரூபாய் சந்தை மதிப்பு கொண்ட ஊதுபத்தி தொழிலிலும் இந்துஸ்தான் லீவர் என்ற பன்னாட்டு நிறுவனம் நுழைந்து விட்டதைச் சுட்டிக் காட்டிய அவர், ''இந்நிறுவனங்கள் வர்த்தக வலைப் பின்னல், விளம்பரம் மூலம் நுகர் பொருள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறுதொழில்களை விழுங்கி விடுகின்றன'' என்றார்.

''பன்னாட்டு நிறுவனங்களின் வரவால் பொருட்களின் விலை குறையும்; வேலை வாய்ப்புப் பெருகும் என்றார்கள். ஆனால், நடந்தது என்ன? நெய்வேலி அனல் மின்சாரம் ஒரு யூனிட் மின்சாரத்தை 0.90 பைசாவுக்குத் தயாரிக்கிறது; ஆனால், என்ரான் தயாரிக்கும் ஒரு யூனிட் மின்சாரத்தின் விலை ரூ. 7.50. 2500 கோடி ரூபாய் மூலதனத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஹுண்டாய் நிறுவனம் முதலில் 600 பேருக்கு வேலை கொடுத்தது; பின்னர், 200 தொழிலாளர்களை வேலையில் இருந்து துரத்திவிட்டது. தாராளமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பன்னாட்டு நிறுவனங்களும், தரகு முதலாளிகளும் நிரந்தரத் தொழிலாளர்களை ஒப்பந்தத் தொழிலாளர்களாக, அத்துக் கூலிகளாக மாற்றி விடுகின்றனர்.''

''தரத்தை எடுத்துக் கொண்டால், சமீபத்தில் நமது ''பெல்'' நிறுவனம் சர்வதேச அளவில் பன்னாட்டு நிறுவனங்களோடு போட்டியிட்டு, 18 வர்த்தக ஒப்பந்தங்களில் 17-ஐக் கைப்பற்றியது. ஹுண்டாய் காருக்குத் தேவையான உதிரி பாகங்களை சென்னையைச் சுற்றியுள்ள சிறு தொழில் கூடங்கள் தயாரித்துத் தருகின்றன. எனவே, நமது உள்நாட்டு தொழில்கள் நசிந்து போவதற்குக் காரணம், உள்நாட்டு தயாரிப்புகள் தரமற்றவை என்பதல்ல; மாறாக, பன்னாட்டு நிறுவனங்களுக்குக் காட்டப்படும் பாரபட்சமான சலுகைகள்தான்'' எனப் பன்னாட்டு நிறுவனங்களைச் சுற்றிக் கட்டப்படும் மாயைகளை உடைத்தார்.

''இப்படி உள்நாட்டுத் தொழில்களை முடக்கிவிட்டு, நாட்டை முன்னேற்ற முடியுமா?'' எனக் கேட்ட அவர், ''நாட்டுப்பற்று கொண்ட வ.உ.சி., திப்பு சுல்தான், கட்டபொம்மன், பகத்சிங் போன்றோரின் வழியில் போராடப் போகிறோமா? இல்லை, எட்டப்பன், மீர் ஜாபர் போன்ற துரோகிகளாக இருக்கப் போகிறோமா? என்பதுதான் இப்போது நம்முன் உள்ள கேள்வி'' என்றார்.



''தீப்பெட்டி தொழிலில் பன்னாட்டு நிறுவனங்கள் படையெடுப்பு! குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழில் எரிந்து சாம்பலாகும் அபாயம்!'' எனும் தலைப்பில் கருத்தரங்கின் இரண்டாம் அமர்வில் கோவில்பட்டி தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்கச் செயலர் திரு. ஜெ. தேவதாஸ் உரையாற்றினார். ''விருதுநகர், இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களிலும் மற்றும் தருமபுரி, குடியாத்தம் பகுதிகளிலும் நடைபெற்று வரும் குடிசை தீப்பெட்டித் தொழில், தாராளமயத்தின் பின் நவீன இயந்திரமயமாக்கலினால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருப்பதாக''த் தெரிவித்தார்.

''இராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்கள் வானம் பார்த்த பூமியாக இருப்பதால் அம்மாவட்டங்களின் மொத்த மக்கட் தொகை 50 இலட்சம் பேரில், கிட்டதட்ட 10 இலட்சம் பேர் குடிசை தீப்பெட்டி தொழிலை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகின்றனர். குடிசை தீப்பெட்டி தொழிலகங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுள் 90 சதவீதம் பேர் பெண்கள். கட்டை அடுக்குவதற்கு பெரிய படிப்போ, திறமையோ தேவையில்லை. உழைக்கனும் என்ற எண்ணம் இருந்தாலே, புதிதாக வேலைக்குச் சேருபவர்கள் கூட ஒரே வாரத்தில் நாளொன்றுக்கு 30, 35 கட்டைகள் அடுக்கப் பழகி, தினமும் 40 ரூபாய் சம்பாதித்து விடலாம். இயந்திரமயமாக்கம் இந்த பெண் தொழிலாளர்களுள் பெரும்பாலானோரின் வேலையைப் பறித்து விடும்'' என்ற அவர், ''வெளிநாடுகளில் தீ பற்ற வைப்பதற்கு காஸ் லைட்டர், எலக்ட்ரிக் லைட்டர் போன்ற சாதனங்கள் வந்து

> **''அந்நிய மாயையில் இருந்து வெளியேறுவோம்! குடிசை தீப்பெட்டியையே வாங்குவோம்!''**
>
> — திரு. ஜெ. தேவதாஸ், செயலர், கோவில்பட்டி தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம்.

விட்டதால், தீப்பெட்டி தயாரிப்பு நின்று விட்டது. அதனால், தீப்பெட்டி தயாரிக்கும் இயந்திரங்களை தாராளமயம் என்ற பெயரில் ஏற்றுமதி செய்து, எங்கள் வயிற்றில் அடிக்கிறார்கள்'' என இறக்குமதி இரகசியத்தை போட்டு உடைத்தார்.

''எங்கள் பகுதியில் ஏற்கனவே 16 இயந்திர தீப்பெட்டி நிறுவனங்கள் வந்துவிட்டன; இன்னும் 12 இயந்திரங்கள் வரவுள்ளன. இதனால் 1200 சிறு நிறுவனங்கள் அழிந்து போகும். எங்களது போராட்டத்தின் காரணமாக மைய அரசு 2003-ஆம் ஆண்டு வரை பன்னாட்டு நிறுவனங்களின் தீப்பெட்டிகள் இறக்குமதி செய்யப்படுவதை நிறுத்தி வைத்துள்ளது'' என்றார் அவர்.

மேலும், ''பன்னாட்டு நிறுவனங்களின் தீப்பெட்டிகளின் தரத்தை விட, விலைதான் எங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. தீப்பெட்டி தயாரிக்கப் பயன்படும் மூலப் பொருளான குளோரேட், எங்களுக்கு சலுகை விலையில் கிடைப்பதில்லை; மின் கட்டணமும் அதிகம். இதனால், உற்பத்திச் செலவு அதிகமாகி விடுகிறது. தாராளமயத்தைப் பற்றி ஓட்டுக் கட்சிகள் என்ன சொல்கிறார்கள் என்பது தேவையில்லை; நமது மனத்தில் சுதேசி எழுச்சி பெற்று, அந்நிய மாயையில் இருந்து விடுபட்டு; குடிசை தீப்பெட்டியையே வாங்குவோம் என்று உறுதி பூண வேண்டும்'' என்று சூளுரைத்தார்.

''சிறு தொழில்களுக்கான சலுகைகள் பறிப்பு! பகாசுர ஆலைகளுடன் போட்டியிட வேண்டிய அவல நிலை! சிறு தொழில்கள் தப்பிக்க வழி உண்டா?'' என்ற தலைப்பில் உரையாற்றிய கோவை வெட்கிரைண்டர் மற்றும் உதிரிப்பாகத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. சி.பி. சண்முக சுந்தரம், ''இந்தக் கருத்தரங்கிற்குப் போவதைவிட பஜனை கேட்கலாம்; டி.வி. பார்க்கலாம் என்று என் வீட்டிலேயே சொன்னார்கள். இவர்களைப் போன்றவர்கள், வந்தாரை வாழ வைக்கும் கோவை மாநகரத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாய் இருப்பதைப் புரிந்து கொள்ளவில்லை'' என வேதனையுடன் குறிப்பிட்டார்.

> **''கோவையில் தொழில் நசிவுக்குக் குண்டு வெடிப்பு காரணமல்ல; இறக்குமதிதான் காரணம்''**
>
> — திரு. சி.பி. சண்முக சுந்தரம், தலைவர், கோவை வெட்கிரைண்டர் மற்றும் உதிரிப் பாகத் தயாரிப்பாளர் சங்கம்.

www.padippakam.com





''கோவையின் ஜீவநாடியே பஞ்சாலைகள், வார்ப்படத் தொழிலகங்கள், சிறு தொழில்கள்தான். நூற்பாலைகளுக்குத் தேவையான இயந்திரங்கள் தயாரித்துக் கொடுக்கும் லெட்சுமி மிஷின் ஒர்க்ஸ் நிறுவனத்தில் முன்பு கிட்டதட்ட 8,000 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இன்று, அத்தொழிற்சாலையில் 2,000 பேருக்கு தினமும் வேலை கிடைத்தாலே அதிசயம்தான். நூற்பு இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதுதான் இந்த நசிவுக்குக் காரணம். இதனால், இந்த நிறுவனத்திற்கு சிறு சிறு இயந்திர பாகங்களைச் செய்து கொடுத்து வந்த சிறு தொழில்களும் நசிந்து விட்டன.

''ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா நாடுகளில் இருந்து வார்ப்படங்கள் இறக்குமதி செய்யப்படுவதால், கோவையின் வார்ப்படத் தொழில் படுத்துவிட்டது. அந்நாடுகளின் வார்ப்படங்கள் தரமானதாக இருக்கிறதென்று கூறுகிறார்கள். ஜி.எஸ்.எல்.வீ. ராக்கெட்டை விட்ட இந்திய அரசு, இந்த வார்ப்படத் தொழிலின் தரத்தை உயர்த்த ஏன் முன் வரவில்லை?''

''தாராளமயத்தைப் பயன்படுத்திக் கொண்டு, கிராம்டன், மஹாராஜா போன்ற பெரிய நிறுவனங்கள், கோவையில் ஆட்டுக் கல்லை வாங்கி, தில்லி, ஃபாரிதாபாத்தில் மோட்டார் மற்ற உதிரி பாகங்களை இணைத்து ஒரே நாளில் 50,100 கிரைண்டர்களைத் தயாரித்து விற்கிறார்கள். தைவான், சீனா நாடுகளில் இருந்தும் கிரைண்டர்கள் இறக்குமதியாகின்றன. இதனால் கோவை கிரைண்டர் தயாரிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் சம்பளம் குறையும்; வேலைவாய்ப்பு பறிபோகும்'' என கோவையின் தொழில் நசிவுக்கான காரணங்களைப் பட்டியல் இட்ட இவர், ''கோவையின் தொழில் நசிவுக்கு குண்டு வெடிப்புதான் காரணம் என்பது முட்டாள்தனமானது; இறக்குமதிதான் காரணம்'' என முத்தாய்ப்பாக தனது உரையை முடித்தார்.



''பஞ்சு - நூல் ஏற்றுமதி; உள்ளாடைகள் இறக்குமதி; கிடுக்கிப்பிடியில் விசைத்தறி'' என்ற பொருள் குறித்துப் பேசிய சிறு விசைத்தறி உற்பத்தியாளர் சங்கச் செயலர் திரு. வி.டி. அரசு, ''தொழில் நசிவுக்கு தொழில் கொள்கை, பொருளாதாரக் கொள்கைதான் காரணம்'' என அடித்துக் கூறினார். ''இப்பொழுது நமக்குத் தேவை தேசப் பற்று; ஆனால், சினிமா மோகத்திலும், ஜாதியிலும் மூழ்கிக் கிடக்கிறோம்'' என வேதனைப்பட்ட அவர், ''ஈரோடு, சேலம் மாவட்டங்களைச் சேர்ந்த சிறு உற்பத்தியாளர்கள், தொலைபேசியில் யாராவது அழைத்தால் 'அந்நியப் பொருட்களைப் புறக்கணிப்போம்; இந்தியப் பொருட்களை வாங்குவோம்' எனக் கூறிவிட்டுதான் பேசத் தொடங்குகிறோம்'' என்ற செய்தியை பார்வையாளர்களின் கரவொலிக்கிடையே தெரிவித்தார்.

''இந்தியாவிற்கு, தமிழகத்திற்கு வரவேண்டிய ஆர்டர்கள் எல்லாம் இப்போது சீனாவுக்குச் செல்கிறது. சீனா, விசைத்தறி, சாயப்பட்டறை தொழிலையும் ஆடை வடிவமைப்பையும் நவீனப்படுத்தியிருக்கிறது. ஆனால், நமது அரசின் நிலை என்ன?''

## ''ரோட்டுக்கு வரும் பொழுது மைய அரசு பதில் சொல்லியே தீர வேண்டும்''

— திரு. வி.டி. அரசு, செயலர், சிறு விசைத்தறி உற்பத்தியாளர்கள் சங்கம், பள்ளிப்பாளையம்.

''ஜவுளித் தொழிலை நவீனப்படுத்துவதற்காக 25,000 கோடி ரூபாயை ஒதுக்குவதாக மைய அரசு அறிவித்தது. இது பற்றி வங்கிகளிடம் போய்க் கேட்டால், எங்களிடம் செயல்முறைத் திட்டம் இல்லை என்கிறார்கள். இதற்கு 1 கோடி ரூபாய் மூலதனம் தேவைப்படும் தொழில் திட்டம் தேவை என்கிறார்கள். 1 கோடி ரூபாய் கடன் வாங்க 25 சதவீதம் ஈடுகட்ட வேண்டும்; அவ்வளவு பெரிய தொகைக்கு சிறு உற்பத்தியாளர்கள் எங்கே போவது?'' என மைய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மையை, அலட்சியப் போக்கை அம்பலப்படுத்திய அவர், ''ரோட்டுக்கு வரும் காலம் வரும் பொழுது, மைய அரசு பதில் சொல்லியே தீர வேண்டும்'' என எச்சரித்தார்.



கருத்தரங்கின் மூன்றாவது அமர்வில், ''மாணவர்களை மிருகங்களாக உருவாக்கும் புதிய கல்விக் கொள்கை; குறைந்த விலையில் அமெரிக்காவுக்கு மூளைகளை ஏற்றுமதி செய்யும் ஆலைகளாகக் கல்வி நிறுவனங்கள்'' என்ற தலைப்பில் உரையாற்றிய பேரா. சிவக்குமார் ''இன்று நமது நாட்டின் தொடக்கக்கல்வியையும், உயர் கல்வியையும் கல்வியாளர்கள் தீர்மானிக்கவில்லை; ஏழை நாடுகளுக்குக் கடன் கொடுக்கும் உலக வங்கியும், இந்திய முதலாளி அம்பானியும்தான் தீர்மானிக்கிறார்கள். ஒரு வர்த்தக வங்கிக்கும், ஒரு முதலாளிக்கும் கல்வியின் மீது இத்தனை அக்கறை ஏன்? என்ற கேள்விக்கான பதில், தொடக்க கல்வி தொடங்கி உயர் கல்வி வரை தனியாரிடம் சிக்கிக் கொண்டு இலாபம் தரும் தொழிலாக மாறியிருப்பதில்தான் அடங்கியிருக்கிறது'' என விளக்கமளித்தார்.

## ''இன்றைய கல்வி பரிபூரண மனிதனை உருவாக்கவில்லை''

— பேரா. ப. சிவக்குமார், மாநிலக் கல்லூரி, சென்னை.

''1980-81-இல், 5,09,517 ஆக இருந்த அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளின் எண்ணிக்கை, 90-91-இல் 11 இலட்சமாக உயர்ந்தன; அதே பத்தாண்டுகளில் தனியாரின் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்

www.padippakam.com



இரண்டு இலட்சத்தில் இருந்து 8,10,000 ஆக, நான்கு மடங்காக உயர்ந்தன. மைய அரசின் கல்வித் திட்டத்தின் கீழ் இயங்கும் தனியார் பள்ளிகள் அந்தப் பத்தாண்டுகளில் 29-லிருந்து 887-ஆக முப்பது மடங்காக உயர்ந்துள்ளன'' எனப் புள்ளி விவரங்களோடு கல்வியில் தனியாரின்பிடி இறுகுவதைச் சுட்டிக்காட்டிய அவர், ''முன்பெல்லாம் கல்லூரியில் அறிவியல் படிக்கும் மாணவர்களுக்குக் கூட வரலாறு, தத்துவம் பற்றி போதிப்பார்கள். இப்பொழுது, அறிவியல் மாணவர்களுக்கு வரலாறு, இலக்கியம் பற்றிப் போதிக்கப்படாததால், இந்தக் கல்வி முறை பரிபூரணமான மனிதனை உருவாக்கக் கூடியதாக இல்லை'' என்றார்.

''இன்றைய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி எதற்குப் பயன்படுகிறது? மரபணு தொழில் நுட்பம், விவசாயத்தை நாசமாக்கும் மலட்டு விதைகளைக் கண்டுபிடிக்க பயன்படுத்தப்படுகிறது. ''மைக்ரோ சர்ஜரி'' என்ற புதிய தொழில்நுட்பம், போலீசார் கைதிகளைச் சித்திரவதை செய்யப் பயன்படும் எனக் கூறி அமெரிக்காவின் மனித உரிமை அமைப்புகள் இந்தத் தொழில் நுட்பத்தை எதிர்க்கின்றன'' என அவர் உயர் தொழில்நுட்ப வளர்ச்சியின் சமூக விரோதத் தன்மையை அம்பலப்படுத்தினார்.

''ஓரளவுக்காவது தரமான கல்வி அளிக்க பட்ஜெட்டில் 6 சதவீதத் தொகையை ஒதுக்க வேண்டும் எனப் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே கோத்தாரி கமிசன் வலியுறுத்தியது. ஆனால், இன்று வரை பட்ஜெட்டில் கல்விக்கான நிதி ஒதுக்கீடு 4 சதவீதத்தைத் தாண்டவில்லை. பின்எப்படி தரமான இலவசக்கல்வி அளிக்க முடியும்? இந்த நிலையில் அரசு, கல்லூரிகளுக்கும், பல்கலைக் கழகங்களுக்கும் நட்சத்திர அந்தஸ்து அளித்து நட்சத்திர விடுதிகளைப் போல மாற்றி வருகிறது. நட்சத்திர அந்தஸ்து பெறாதவைக்கு இனி மூடுவிழாதான் என்பது இதன் பொருளாக இருக்கும்'' என்று அவர், அரசாலேயே கல்வி வியாபாரமாக்கப்படுவதை அம்பலப்படுத்தினார்.

## ''இந்தியாவை ஆள்வது, இந்திய அரசியல் சாசனமா? உலக வர்த்தகக் கழகத்தின் சட்டமா?''

— தோழர். மருதையன், மாநிலச் செயலர், ம.க.இ.க., தமிழ்நாடு.



கருத்தரங்கின் மூன்றாம் அமர்வுக்குத் தலைமை தாங்கிய மக்கள் கலை இலக்கியக் கழக மாநிலச் செயலர் தோழர். மருதையன் கருத்தரங்கின் முதல் நாள் நிகழ்ச்சிகளை முடித்து வைத்து உரையாற்றினார்.

''இக்கருத்தரங்கில் பேசிய விவசாய சங்கங்களைச் சேர்ந்தவர்கள், விசைத்தறி உரிமையாளர்கள், சிறுதொழில் அதிபர்கள் அனைவருமே விவசாயமும், நெசவும், சிறு தொழில்களும் தாராளமயத்தால் அதன் இறுதி நிலையை எட்டிக் கொண்டிருப்பதாக வேதனையுடன் குறிப்பிட்டார்கள். இந்த வேதனையைப் பகிர்ந்து கொள்ள, துடைக்க ஆளுங் கும்பலுக்கு நாதியில்லை. ஆனால், கருணாநிதி, இதுதான் எனது கடைசி தேர்தல் என்றவுடன் உடன் பிறப்புகள் தொடங்கி ஜனநாயகவாதிகள் வரை அனைவரும் ஒப்பாரி வைக்கிறார்கள்'' என ஆளுங் கும்பல், மக்களின் பிரச்சினை பற்றி அக்கறை இல்லாமல் இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

''வர்த்தகத் துறை அமைச்சர் மாறன், உலக வர்த்தகக் கழகத்தின் சட்டம் பற்றிய அறிவை இந்திய மக்களிடம் வளர்க்க வேண்டும் என்கிறார். இந்திய அரசியல் சட்டம் தெரியாதவர்களிடம் உ.வ.க.வின் சட்ட அறிவை வளர்க்க வேண்டுமென்றால், இந்திய அரசியல் சாசனச் சட்டம் காலாவதியாகிவிட்டதா?'' எனக் கேட்ட மருதையன், ''வெள்ளைக்காரன் காலத்தில் இலண்டனுக்குப் போய் 'பார்-அட்-லா' படித்த காலம், இப்பொழுது வேறு மாதிரி திரும்புகிறது'' என்றார்.

''பருத்தி, நிலக்கடலை, ரப்பர் தொடங்கி விவசாய விளைபொருட்கள் அனைத்தும் அடிமாட்டு விலைக்குச் சரிந்துவிட்டது; 18 இலட்சம் டன் சர்க்கரை கையிருப்பு இருக்கும் பொழுது, மேற்கொண்டு 10 இலட்சம் டன் சர்க்கரையை அமெரிக்க டாலராகக் கொடுத்து இறக்குமதி செய்யும் அரசு, விவசாயிகளுக்குத் தர வேண்டிய 352 கோடி ரூபாய் பாக்கியைத் தர மறுக்கிறது. கடனால், வறுமையால், பட்டினியால் விவசாயிகளும், நெசவாளர்களும் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அவர்கள் குடும்பத்திற்கு குறைந்த விலையில் கூட ரேஷன் அரிசி போட மறுக்கும் மைய அரசு கிலோவுக்கு ரூ. 4.15 மானியம் கொடுத்து, வெளிநாட்டுக்கு அரிசியை ஏற்றுமதி செய்கிறது. இப்படி ஏன் நடக்கிறது என்று கேட்டால், இதுதான்டா சீர்திருத்தம் என்கிறார்கள். அதாவது மக்களின் வாழ்க்கையை சீர்குலைப்பதை சீர்திருத்தம் என 'நாகரிகமாக'க் கூறுகிறார்கள்'' என தாராளமயத்தின் உண்மை முகத்தைச் சுட்டிக் காட்டினார்.

''தாராளமயத்திற்கு முன்பிருந்த நாற்பது ஆண்டுகளும் பாழாய்ப் போன ஆண்டுகள் என்கிறார் வாஜ்பாயின் எடுபிடி ஜஸ்வந்த் சிங். அந்த ஆண்டுகளில் எங்களின் திறமை அமுக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள் இந்தியத் தரகு முதலாளிகள். ஆனால், அந்த நாற்பதாண்டுகளில்தான் பிர்லாவின் சொத்து 12 ஆயிரம் சதவீதமும், டாடாவின் சொத்து, 5,627 சதவீதமும் சிங்கானியாவின் சொத்து 21,095 சதவீதமும், தாபரின் சொத்து 25,000 சதவீதமும், மஹிந்திராவின் சொத்து 72000 சதவீதமும் அதிகரித்தது. ஆனால் நாட்டின் பொருளாதாரமோ வருடத்திற்கு 3 சதவீதம்தான் (120 சதவீதம்தான்) 'வளர்ந்தது'!''

''இப்பொழுது தனியார்மயம் - தாராளமயம் என்பது பொதுத் துறையைச் சூறையாடுவதற்கான ஏற்பாடாக உள்ளது. மார்க்ஸ் சொன்னபடி மக்களின் சொத்தை அபகரித்துக் கொள்பவர்கள் முதலாளிகள்தான் என்பது அம்பலமாகி விட்டது. 5,000 கோடி ரூபாய் பெறுமான ''பால்கோ'' நிறுவனத்தை வெறும் 500 கோடி ரூபாய் கொடுத்து சுருட்டிக் கொள்கிறது ஸ்டெர்லைட். வைர வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள டி-பீர்ஸ் என்ற பன்னாட்டு நிறுவனம் ம.பி.யில் இருந்து தினமும் 10 லாரி வைரத்தை அள்ளிச் செல்கிறது. என்ரான் போட்ட 6,000 கோடி ரூபாய் மூலதனத்திற்காக, இராணுவத் தளவாடங்கள், தூதரகங்கள் தவிர, நாட்டின் அனைத்துச் சொத்துகளும் அந்நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.''

''இப்படி எல்லா தொழில்களையும், சொத்துக்களையும் தூக்கிக் கொடுக்கும் அரசு, போலீசையும், இராணுவத்தையும் மட்டுமே தன்னிடமே வைத்திருக்கிறது. அதாவது, இந்திய அரசு, தன்னைக் கூலிப்படை அரசாகக் காட்டிக் கொண்டு விட்டது. எனவே, இப்பொழுது பிரச்சினையின் மையம் இப்படி நாடு மீண்டும் ஏகாதிபத்தியங்களுக்கு அடிமையாவதுதான்; மறுகாலனியாவதுதான். தேயிலை, ரப்பரின் விலை சரிவதும், பொதுத் துறை விற்கப்படுவதும் இதன் விளைவுகள்தான். நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவதன் மூலமே எல்லா பிரச்சினைகளையும் சரியாகத் தீர்க்க முடியும்'' என தோழர் மருதையன் இரண்டாம் சுதந்திரப் போருக்கு அறைகூவல் விடுத்தார்.

www.padippakam.com



## "நாம் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல"

— தோழர் இரா. சீனிவாசன்,
மாநிலப் பொருளாளர், ம.க.இ.க., தமிழ்நாடு.



கருத்தரங்கின் இரண்டாம் நாள் நடந்த நான்காம் அமர்வுக்குத் தலைமை தாங்கிய ம.க.இ.க., மாநிலப் பொருளாளர் இரா. சீனிவாசன், "நான் பெருமிதத்தோடு இந்த மேடையில் நிற்கின்றேன். அந்தப் பெருமிதம் பார்வையாளர்களிடமும் இருக்கும் என நம்புவதாகக்" கூறி தனது உரையைத் தொடங்கினார். "குப்பை அள்ளுவதற்குக் கூட சிங்கப்பூர் நிறுவனத்தைக் கொண்டு வருகிறார்கள். அந்தளவிற்கு நாம் மட்டமாகப் போய்விட்டோமா?" எனக் கேள்வி எழுப்பிய அவர், "பழங்காலத்திலேயே இரும்பு வார்ப்பட அறிவை கோவை பகுதியில் வாழ்ந்த மக்கள் அறிந்து வைத்திருந்ததற்கான தொல்பொருள் ஆதாரங்கள் கிடைத்துள்ளன" எனக் குறிப்பிட்டு நான்காம் அமர்வை தொடங்கி வைத்தார்.

## "பண்பாட்டைக் காக்க கல்வியறிவு தேவை"

— பேரா. இரா. அரங்கராசன், சிக்கைய நாயக்கர்
அரசு கலைக் கல்லூரி, ஈரோடு.



கருத்தரங்கின் இரண்டாம் நாள் நடந்த நான்காம் அமர்வில், "நாட்டின் பாரம்பரிய வாழ்க்கை விழுமியங்கள்; அடிமைச்சிந்தனையைப் பரப்பும் பண்பாட்டுத் தாக்குதல்" என்ற தலைப்பில் உரையாற்றிய பேரா. அரங்கராசன், "முன்பு ஆங்கிலேயன் பீரங்கிகளைக் காட்டி மிரட்டிப் பணிய வைத்தான். இப்போது அப்படியில்லை. நமது ஆட்சியாளர்களே சிவப்புக் கம்பளம் விரித்து அவர்களை வர வேற்கிறார்கள். இது வேதனைக்குரியது" என்றார்.

இன்று கல்வி எல்லோருக்கும் உரியதாக இல்லை. சமமானதாக இல்லை என்பது குறித்துப் பேசிய அவர், "அரசு கல்வித்துறையைக் கைகழுவி விட்டது. சுயநிதி கல்லூரிகளில் எல்லோராலும் படிக்க வைக்க முடியுமா? அதோடு இப்போதும் 1853 ஆண்டு அறிமுகமான மெக்காலே கல்வி திட்டம்தான் நடைமுறையில் உள்ளது.

மேலும், கல்வி வழங்கும் நடைமுறையிலேயே, மாநில, மைய ஆங்கிலோ - இந்தியக் கல்விமுறை என்றும், அரசுப் பள்ளி, நகராட்சிப் பள்ளி, உதவி பெறும் பள்ளி, மைய அரசு நடத்தும் நவோதோயா பள்ளி என்றும் வேறுபாடு உள்ளது.

ஒருபுறம் ஐ.ஐ.டி. போன்ற மேல்படிப்பிற்கு ஒரு மாணவனுக்கு ரூ. 80,000 வரை செலவு செய்கிறது அரசு. ஆனால் சாதாரண மாணவனுக்கோ ரூ. 80 கூட செலவு செய்வதில்லை. மேலும் வெவ்வேறு ஊர்களில் படிப்பவர்க்கும் வேறுபாடு உள்ளது. இதனால் 'மெட்ரிக்' பள்ளிகளில் படித்தவர்களே உயர் கல்விக்குப் போகின்றனர். ஒரே மாதிரியான கல்வியை வழங்காத இந்த முறை ஒழிய வேண்டும்" என்றார்.

"மைய அரசின் நல்வாழ்வுத் துறை அனுப்பிய சுற்றறிக்கையில் - பள்ளியில் படிக்கக் கூடிய மாணவ, மாணவியருக்கு கருத்தடை பற்றி சொல்லித்தர வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அந்தளவிற்கு நமது பண்பாடு சீரழிந்து விட்டது" என்று வருத்தத்தோடு குறிப்பிட்ட அவர், "சீவக சிந்தாமணி போன்ற நமது இலக்கியங்களில் வெற்றிலை - பாக்கு போடுவது பற்றி கூட நயமாக விளக்கப்பட்டுள்ளது. சாப்பிட்ட பின் இலையை மடிப்பதில் கூட பண்பாடு பதிவு செய்யப்பட்டது. அந்தளவிற்கு நுட்பமான பழக்க வழக்கங்கள் நம்மிடையே இருந்தன. இன்று அழகு சாதனப் பொருட்கள் இறக்குமதியாகின்றன. வியாபார உத்திகளின் மூலம் ஒரு நுகர்வு கலாச்சாரத்தை நம்மிடம் உருவாக்கி விட்டனர். திரைப்படம், எம்.டி.வி.க்கள் மூலம் பண்பாட்டுச் சீரழிவு பரப்பப்படுகிறது" என்றார்.

இறுதியாக, "கணிப்பொறி துறையில் வந்திருக்கும் பல்வேறு பட்டப் படிப்புகள் யாருக்குப் பயன்படப் போகிறது?" என்று கேட்டு, "பண்பாடு காக்கப்பட்டால்தான் மொழியும், தேசியமும் பாதுகாக்கப்படும். அதற்கு அனைவருக்கும் கல்வியறிவுதான் முதல் தேவை" என்று கூறி நிறைவு செய்தார்.

## "போராட்டம்தான் ஒரே தீர்வு"

— வழக்கறிஞர் சி. பாலன்,
கர்நாடக மாநில உயர்நீதி மன்றம், பெங்களூர்.



"பன்னாட்டு நிறுவனங்களின் கொள்ளை - மேலாதிக்கத்திற்கும், மறுகாலனியாதிக்கத்திற்கும் சேவை செய்யும் நீதித்துறை" என்ற தலைப்பில் உரையாற்றிய வழக்கறிஞர் சி. பாலன், "தாராளமயத்தால் விவசாய விளைபொருட்களின் விலை சரிகிறது; பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்படுகின்றன; கர்நாடகாவிலுள்ள பீனா, தமிழ்நாட்டிலுள்ள ஓசூரில் அமைந்துள்ள தொழிற்பேட்டைகள் மூடப்படுகின்றன. இதனை எதிர்த்து விவசாயிகளும், தொழிலாளர்களும் போராடினால், சில மேதாவிகள், 'நீதிமன்றத்திடம் போனால் நியாயம் கிடைத்துவிடும்; இதற்காக ஏன் போராடுகிறீர்கள்; சாலையை மறிக்கிறீர்கள்? எனக் கேட்கிறார்கள். ஏ.ஐ.டி.யு.சி. போன்ற கம்யூனிச தொழிற்சங்கங்கள் கூட இந்த நீதிமன்ற மாயையில் சிக்கிக் கொண்டுள்ளன" எனக் குறிப்பிட்டார், அவர்.

"சுதந்திர இந்தியாவின் சட்டங்கள் உருவாக்கப்பட்ட விதம் குறித்துப் பேசிய அவர், "இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்க, ஏற்படுத்தப்பட்ட குழுவின் உறுப்பினர்கள், வெறும் 13 சதவீத இந்தியர்களால், வரி செலுத்தும் மேட்டுக் குடியினரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தக் குழு, 1935-இல் உருவாக்கப்பட்ட காலனிய இந்தியாவின் அரசியல் சாசனத்தையும், 1860-இல் உருவாக்கப்பட்ட

சிவில் சட்டம், 1898-இல் உருவாக்கப்பட்ட குற்றவியல் சட்டம் - ஆகியவற்றையே காப்பியடித்து, சுதந்திர இந்தியாவின் சட்டங்களாக உருவாக்கியது. இச்சட்டங்கள் பற்றி பொதுமக்களிடையே விவாதம் நடத்தப்படாமல், அவர்கள் மீது திணிக்கப்பட்டது'' என்றார். இதற்கு மாறாக, ''சோவியத் யூனியனிலும், வியத்நாமிலும் அரசியல் சாசன சட்டங்கள் மக்களின் விவாதத்திற்கு விடப்பட்டு, அவர்கள் கூறிய திருத்தங்கள் சேர்க்கப்பட்டன'' எனக் குறிப்பிட்டார்.

''இந்திய அரசியல் சட்டங்களின் இம்மக்கள் விரோதத் தன்மை காரணமாகவே, பஞ்சாபின் நில உச்சவரம்புச் சட்டம்; வங்கிகளைத் தேச உடமை ஆக்கியது, இட ஒதுக்கீடு உள்ளிட்ட பல வழக்குகளில் உச்சநீதி மன்றமும், பல்வேறு மாநில உயர்நீதி மன்றங்களும் நிலப் பிரபுக்களுக்கு, முதலாளிகளுக்கு, மேல் சாதியினருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தன.'' அதன் தொடர்ச்சியாகவே இப்பொழுது, ''பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக தொழிற்சங்கச் சட்டம், தொழிற் தகராறு சட்டம், தொழிலாளர் நலச் சட்டங்கள் திருத்தப்படுவதை இந்நீதிமன்றங்கள் கண்டு கொள்வதேயில்லை.''

''கோலார் தங்கவயல் நட்டமடையக் காரணமே, கோலார் தங்கத்தை விலை அதிகம் கிடைக்கும் மும்பய் சந்தையில் விற்கக் கூடாது; தங்கம் விலை மலிவாகப் போகும் இலண்டன் சந்தையில் விற்க வேண்டும் என்ற ஒப்பந்த விதிதான். இந்த நட்டத்தைக் காட்டி கோலார் தங்க வயலை மூடக் கூடாதென கர்நாடக உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இதைக் காட்டி சி.ஐ.டி.யு. ஆனந்தக் கூத்தாடியது. இதற்கு மேல் உச்சநீதி மன்றம் இருப்பதை இவர்கள் மறந்து விட்டனர்'' என தொழிற்சங்க சுல்தான்களின் சட்ட வாதத்தைச் சாடினார்.

தொழிலாளர்கள் ஹர்த்தால், பந்த் நடத்துவதற்கு எதிராக, ''அழகிப் போட்டிக்கு ஆதரவாக, என்ரானின் வழிப்பறி கொள்ளைக்கு ஆதரவாக, நகரங்களின் அழகுக்காக நடைபாதை வியாபாரிகளின் வாழ்க்கையையே பறிக்கும் தீர்ப்புகளை எழுதி, தனது ஜனநாயக விரோதத் தன்மையை உச்சநீதி மன்றம் வெளிக் காட்டிக் கொண்டுள்ளது'' எனக் குறிப்பிட்ட அவர், ''இன்று வழக்கறிஞர்கள் பன்னாட்டு நிறுவனங்களின் தரகர்களாகச் செயல்படுவதாக''க் குற்றஞ்சாட்டினார். எனவே, ''ஆளும் வர்க்கங்களுக்கு சேவை செய்யும் நீதிமன்றங்களை நம்புவதை விட, போராட்டத்தை நம்புவதுதான் ஒரே தீர்வு'' என மாற்று வழியை முன் வைத்தார்.

## ''பன்னாட்டு நிறுவனங்களின் ஆக்கிரமிப்பில் இந்தியா''

— திரு. மாக்சிமன் அரக்கல், தலைவர்;
— திரு. ஜோய் வெங்கதாரம், செயலர், விவசாயிகள் முன்னேற்ற சங்கம், கூராசுண்டு, கேரளா.



மாக்சிமன் அரக்கல்

கருத்தரங்கின் இரண்டாம் நாள் பங்கேற்ற கேரளாவிலுள்ள கூராசுண்டு கிராம விவசாயிகள் முன்னேற்ற சங்கத் தலைவர் திரு. மாக்சிமன் அரக்கல் மற்றும் செயலர் திரு. ஜோய் வெங்கதாரம் இருவரும், ''கோக் - பெப்சி, பாமாயில், பன்னாட்டு நிறுவனங்களின் சோப்புகள் முதலானவற்றை முற்றாகப் புறக்கணிக்கும் தங்கள் கிராம மக்களின் போராட்ட அனுபவங்களை தமிழ் நாட்டு மக்களிடம் பகிர்ந்து கொள்ள ஆர்வத்தோடு வந்திருப்பதாக''க் கூறினார்கள்.




ஜோய் வெங்கதாரம்

''தேங்காய், குறுமிளகு, ரப்பர் - இந்தப் பயிர்கள் கேரளத்தின் உயிர்நாடி. ஏழு ரூபாய் விற்ற தேங்காய் இன்று இரண்டு ரூபாய்க்குச் சீரழிகிறது. இந்தோனேஷியாவில் இருந்து குறுமிளகு இறக்குமதியாவதால், 12,000 ரூபாய்க்கு விற்ற கேரள குறுமிளகின் விலை 7000 ரூபாயாகச் சரிந்து விட்டது.''

''தேங்காய் விலை சரிவால் கேரள தென்னை விவசாயிகள் அடைந்த நட்டம் 2,000 கோடி ரூபாய். இந்த நட்டத்திற்கு பாமாயில் இறக்குமதிதான் காரணம். 10 ஆண்டுகளுக்கு முன்பு 7 இலட்சம் டன்னாக இருந்த எண்ணெய் இறக்குமதி, இன்று 40 இலட்சம் டன்னாக உயர்ந்து விட்டது. இதில் பாமாயில் இறக்குமதி மட்டும் 25 இலட்சம் டன். விவசாயிகள் அடைந்த 2,000 கோடி ரூபாய் நட்டம், இந்துஸ்தான் லீவர், கோத்ரெஜ் நிறுவனங்களுக்கு இலாபமாகப் போய்விட்டது. அதனால்தான், கடந்த ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி, காந்தி பிறந்த நாளன்று, பாமாயிலைப் புறக்கணிக்கும் போராட்டத்தைத் தொடங்கினோம். இன்று கூராசுண்டு கிராமத்தில் பாமாயிலை மருந்துக்குக் கூடப் பார்க்க முடியாது. தேங்காய் எண்ணெயைவிட, பாமாயிலின் விலை மலிவாக இருக்கலாம்; ஆனால், 40 இலட்சம் விவசாயிகளின் கதி என்னாவது?'' எனத் தங்கள் புறக்கணிப்புப் போராட்டத்தின் நியாயத்தை எடுத்துக் கூறினார்கள்.

''ஒரு கிலோ ரப்பரின் விலை எழுபது ரூபாயில் இருந்து இருபத்தெட்டு ரூபாயாகச் சரிந்து, விவசாயிகள் நட்டத்தில் திண்டாடுகின்றனர். ஆனால், ரப்பர் தயாரிக்கும் எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் இலாபம் 200 சதவீதமும், அப்பல்லோவின் இலாபம் 150 சதவீதமும் எகிறித் தாண்டுகிறது'' எனத் தாராளமயத்தால் கொள்ளை இலாபமடையும் முதலாளிகளைச் சுட்டிக் காட்டிய இவர்கள், ஒரு ரூபாய் பெறுமான குளியல் சோப்பை 12 ரூபாய்க்கு மக்கள் தலையில் கட்டும் லீவர் நிறுவனத்தை எதிர்த்து, ''குளியல் மற்றும் துவைக்கும் சோப்புகளைத் தயாரிக்கும் பயிற்சியை'' மக்களுக்கு அளித்து வருகின்றனர். 14 குளியல் சோப்புகள் தயாரிக்கத் தேவையான மூலப் பொருட்களை 10 ரூபாய்க்கு விற்று வருகின்றனர். அரங்கத்திலேயே குளியல் சோப் தயாரிக்கும் செயல்முறையை விளக்கி, சோப்பினைத் தயாரித்துக் காட்டினர். கோக் - பெப்சி குளிர்பானங்களை எதிர்த்து, ஆறு ரூபாய்க்கு இளநீரில் இருந்து குளிர்பானம் தயாரித்து விற்கின்றனர்.

சோப்பு தயாரிக்கும் செய்முறை அரங்கத்தில் நிகழ்த்திக் காட்டப்படுகிறது.



''இறக்குமதிக்கு அரசு 300 சதவீதம் வரை வரி விதிக்கலாம். ஆனால், அவர்கள் 35 சதவீதம்தான் வரி விதிக்கின்றனர். அரசியல்வாதிகள் தங்கள் கமிசனுக்காக இந்திய மக்களைப் பலியிடுகிறார்கள்'' என இவர்கள் ஓட்டுக்கட்சிகளையும் ஒரு பிடிபிடித்தனர்.

www.padippakam.com



# ''இந்திய அரசே, உலக வர்த்தகக் கழகத்தில் இருந்து வெளியேறு!''

கருத்தரங்கின் இரண்டாம் நாள் மாலையில் கோவையின் மையப் பேருந்து நிலையத்தில் இருந்து பேரணி புறப்பட்டு, பொதுக் கூட்டம் நடைபெறும் சிவானந்தா காலனியை அடையும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், போலீசு அதிகாரிகள் மையப் பேருந்து நிலையத்தில் இருந்து ஊர்வலத்தைத் தொடங்க அனுமதி மறுத்து விட்டு, வேறொரு பாதை வழியாக ஊர்வலத்தை நடத்திக் கொள்ள அனுமதித்தனர். அந்நிய நாட்டு மூலதனமும், பொருட்களும் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் நுழைந்து வருவதற்கு இருக்கும் சுதந்திரம், இந்தியக் குடிமகனுக்கு மறுக்கப்படுகிறது. இந்த அடிமைத்தனத்தை எதிர்த்துதான் இந்த மாநாடு நடந்தது.

கோவை - கணபதி பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கிய பேரணியில் கிட்டதட்ட 1500-க்கும் அதிகமான நாட்டுப்பற்று கொண்ட தொழிலாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும், இளைஞர்களும் கலந்து கொண்டனர். ஊர்வலம் சென்ற பாதையின் இருபக்கங்களிலும் கூடி நின்ற பொது மக்களும், வியாபாரிகளும், தொழிலாளர்களும், வீட்டு வாசப்படியிலும், வீட்டு மொட்டை மாடிகளிலும் நின்றிருந்த பெண்களும் ஊர்வல முழக்கங்களைக் கேட்டு வியந்து நின்றனர். இதை எதிர்பார்க்காத போலீசின் முகம்தான் கருத்துப் போனது.

கோவை - சிவானந்தா காலனி பேருந்து நிலையத்தில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு விவசாயிகள் விடுதலை முன்னணியின் ஒருங்கிணைப்பாளர் தோழர் நாராயணன் தலைமை தாங்கினார். ''தாராளமயத்தை எதிர்த்து வி.வி.மு. - பு.மா.இ.மு. - ம.க.இ.க. - பு.ஜ.தொ.மு. - இந்நான்கு அமைப்புகளும் தொடர்ந்து இயக்கங்கள் எடுத்துப் போராடி வருவதாகக் குறிப்பிட்ட அவர், ''இந்தக் கூட்டணி, ஓட்டுக் கட்சிகளின் தேர்தல் கூட்டணி போன்ற சந்தர்ப்பவாதக் கூட்டணியல்ல; ஏகாதிபத்திய சாவு வியாபாரிகளை எதிர்த்த தேசபக்தக் கூட்டணி'' என விளக்கிப் பேசினார்.

''ஒழிக அமெரிக்க மோகம்! ஓங்குக நாட்டுப் பற்று'' என்ற முழக்கம் விண்ணதிர நடந்த மறுகாலனியாதிக்க எதிர்ப்புப் பேரணி.







மக்கள் கலை இலக்கியக் கழக இணைச் செயலர் தோழர். காளியப்பன், ''தாராளமயத்திற்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள் நடத்தி வரும் போராட்டங்களை ஆதரித்தும்; பத்திரிகை - வானொளி மூலம் இந்திய மக்கள் மத்தியில் பரப்பப்படும் தனிநபர்வாதம் - நுகர்வு வெறி - அமெரிக்க மோகம்; தொழிலாளர்களின் சங்கம் சேரும் உரிமையினையும், ஊர்வலம், ஆர்ப்பாட்டம் நடத்தும் ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் நீதிமன்றம்'' ஆகியவற்றைக் கண்டித்தும் ''தாராளமயத்தை எதிர்ப்பதாகக் கூறும் ஓட்டுக் கட்சிகளின் மோசடி; ஆர்.எஸ்.எஸ். கும்பலின் போலி சுதேசி வேடம்'' ஆகியவற்றை அம்பலப்படுத்தியும், மாநாட்டில் நிறைவேற்றப்பட்டிருந்த 17 தீர்மானங்களையும் விளக்கிப் பேசினார்.

பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றிய புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி ஒருங்கிணைப்பாளர் தோழர் பரமானந்தம், ''மாணவர்களுக்கு மட்டுமல்ல, கல்லூரி ஆசிரியர்களுக்கும் புதிய பொருளாதாரக் கொள்கை பற்றித் தெரியவில்லை; கழிப்பறை வசதி இல்லாத மாணவர் விடுதிகளில் கூட, கலர் டி.வி.யும், கேபிள் இணைப்பும் உள்ளது. திரைப்படங்களைக் காட்டி மாணவர்களைச் சீரழித்துவிடத் துடிக்கிறார்கள். இதையும் மீறி, மாணவர்கள் புரட்சிகர அமைப்புகளில் இணைவதும், அதற்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் ஒத்துழைப்பதும் காலத்தின் அவசியமாகும்'' என மாணவர்களின் புரட்சிகரக் கடமையை வலியுறுத்தினார்.

மழையோடு சண்டை போட்டு, பொதுக் கூட்டத்தின் இறுதியாகச் சிறப்புரையாற்றிய தோழர் மருதையன், ''தேர்தலில் எதிரெதிரான கூட்டணிகளைப் பார்க்கிறோம். ஆனால், எந்தக் கூட்டணிக்கும் நாட்டை மறுகாலனியாக்குவதில் கருத்து வேற்றுமை இல்லை. 1429 பொருட்களைத் தாராள இறக்குமதி செய்து கொள்ளத் திறந்துவிட்டதை எந்தக் கூட்டணியாவது எதிர்க்கிறதா? உலக வர்த்தகக்

தொடர்ச்சி 22-ஆம் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com


## பல்கலைக்கழகங்களில் சோதிடப் பட்டப்படிப்பு:

# ★ இந்துவெறியர்களின் கொட்டம்
# ★ திராவிடக் கட்சிகளின் மௌனம்
# ★ போலி கம்யூனிஸ்டுகளின் இரட்டை நாக்கு

கடைச் சரக்காகிவிட்ட இன்றைய கல்வியை காவிமயமாக்கி வரும் இந்து வெறி ஆட்சியாளர்கள், இப்போது சோதிடத்தை பல்கலைக் கழகங்களில் பாடத்திட்டமாக்கக் கிளம்பியுள்ளார்கள். மத்திய இந்து வெறி அமைச்சர் முரளி மனோகர் ஜோஷியின் வழிகாட்டுதலின்படி, வரும் கல்வியாண்டிலிருந்து சோதிட வகுப்புகளை துவக்க முடிவு செய்து பல்கலைக் கழக மானியக் குழு (யு.ஜி.சி.) அண்மையில் அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது.

''தமிழகத்தில் மதுரைப் பல்கலைக் கழகம் உள்ளிட்டு நாடெங்கும் 24 பல்கலைக் கழகங்களில் ''வேத ஜோதிடம்'' எனும் தனித்துறை உருவாக்கப்படும். சோதிடத்தில் டிப்ளமோ, இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டய வகுப்புகள் தொடங்கப்படும். பாரம்பரிய சோதிடமுறை மற்றும் நவீனவகை சோதிடமுறை பற்றிய ஆராய்ச்சி, பிறந்த நேரத்தைக் கணித்தல், எதிர்காலப் பலன்களைத் தொகுத்தல், உடல்நலப் பிரச்சினைகளுக்கு சோதிட முறையில் தீர்வு காணுதல், மனையடி (வாஸ்து) சாஸ்திர முறை, வியாபாரம் - தொழில் நடத்துவதற்கான கிரக நிலை பற்றி கணித்தல், மணப்பொருத்தம் பார்த்தல், நல்ல நேரம் - கெட்ட நேரம் - பரிகார முறைகள், பயிர் வைக்க - அறுவடை செய்ய நல்ல நேரம் கணித்தல், இந்து எண் கணிதம் முதலானவற்றோடு புரோகிதமும் ஒரு பாடமாக அமையும். இத்துறைக்கு ஒரு பேராசிரியர், துணைப் பேராசிரியர், இரு விரிவுரையாளர்கள் ஆகியோரோடு ஒரு நூலக உதவியாளரும், கணினி ஊழியரும் நியமிக்கப்படுவர். நூலகம், கணினிக் கூடம், சோதிட வங்கி முதலானவற்றை நிறுவ ஒவ்வொரு பல்கலைக் கழகத்துக்கும் ரூ. 15 லட்சம் இவ்வாண்டில் ஒதுக்கப்படும்'' என்று மானியக் குழு தெரிவித்துள்ளது.

''சோதிட அறிவியலின் பயன் சமூகத்திற்கும் உலகிற்கும் முழுமையாகப் பயன்பட பாரம்பரியமிக்க இக்கலையைப் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைப்பது மிக அவசி



www.padippakam.com

யமாகும். இதன்மூலம் கல்வியில் மேலும் புதிய பரிமாணத்தை உருவாக்க முடியும். சோதிடக் கலையானது மரபு சார்ந்த இந்திய அறிவின் ஓர் அங்கமாகும். பழமை வாய்ந்த இந்திய விஞ்ஞானத்தின் ஒரு கூறாகும். வேத சோதிடம் என்பது பாரம்பரிய முக்கியத்துவம் பெற்ற துறை மட்டுமல்ல; அது மனித வாழ்விலும் உலகிலும் நடைபெறும் நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ள உதவும் மிகவும் பயனுள்ள துறையாகும்'' என்று மூடத்தனத்துக்கு நியாயம் கற்பிக்கிறது, பல்கலைக் கழக மானியக் குழு.

ஒரு சிலருக்கு சோதிடத்தில் நம்பிக்கை இருக்கலாம். ஆனால் அது ஒருபோதும் அறிவியல் ஆகாது. அதற்கு எந்த அறிவியல் அடிப்படையும் கிடையாது. சோதிடம் என்பது அப்பட்டமான ஏமாற்று வேலையே தவிர வேறெதும் கிடையாது. பிரபஞ்சத்தில் கோள்களின் நேர்கோட்டுச் சேர்க்கையும் பிரிவும் சிற்சில விளைவுகளை ஏற்படுத்துமே தவிர, பூவுலகிலுள்ள ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு விதமாகப் பாதிக்கும் என்பது அப்பட்டமான பொய்யே தவிர வேறில்லை. சோதிடத்தின் மூலம் அனைத்தையும் முன்கூட்டியே அறிய முடியும் என்றால், ஒரிசா புயலையும், குஜராத் நிலநடுக்கத்தையும் கார்கில் போரையும் கூட தடுத்திருக்கலாம்.

எனவேதான் சோதிடத்தை ''முட்டாள் தனத்தின் சிகரம்'' என்று அண்மையில் வெளியான ''கரண்ட் சயின்ஸ்'' என்னும் அறிவியல் இதழ் தனது தலையங்கக் கட்டுரையில் சாடியது. மேலும் இந்து சோதிட முறையானது பூமியை அச்சாகக் கொண்டு கோள்கள் சுற்றுவதாகவும், சூரியன், சந்திரன் உட்பட ஒன்பது கோள்கள் உள்ளதாகவும் குறிப்பிடுகிறது. இது அறிவியலுக்கு முற்றிலும் மாறானது. புதிய கோள்களின் கண்டுபிடிப்பானது, நவக்கிரக கோட்பாட்டையே நிராகரித்து விட்டது. இந்த உண்மைகளை விளக்கி, ''சுயமரியாதையுள்ள எந்தவொரு பல்கலைக் கழகமும் சோதிடத்தைப் பாடமாக்க ஏற்கக் கூடாது; நாட்டின் எதிர்காலத்தை பின்நோக்கிச் செலுத்தக் கூடாது; மூடத்தனத்தைப் பரப்பி அறிவியலை அழிக்கும் முயற்சிகளை முறியடிக்க வேண்டும்'' என்று நாடெங்குமுள்ள பிரபல அறிவியல் அறிஞர்களும், அறிவியல் கல்வி நிறுவனங்களும், கல்வியாளர்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். கடிதங்கள், மின்னஞ்சல், அறிவிக்கைகள் மூலம் தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். ஆனால் தம்மை பெரியாரின் வாரிசுகள் என்றும் பகுத்தறிவு திராவிடமே தமது கொள்கை என்றும் ''கண்மூடிப் பழக்கமெல்லாம் மண் மூடச் செய்யப் பாடுபடுவோம்'' என்றும் சவடால் அடித்து வரும் தி.மு.க., ம.தி.மு.க. முதலான பிழைப்புவாதிகளோ உதட்டளவில் கூட கண்டனம் தெரிவிக்க வக்கின்றி, பதவி சுகத்துக்காக இந்து வெறியர்களின் காலை நக்கிக் கொண்டு திரிகின்றனர்.

போலி கம்யூனிஸ்டுகளோ, பல்கலைக் கழகங்களின் வேதசோதிடம் பாடமாக்கப்படுவதை எதிர்த்து தமது பத்திரிகைகளில் சாடி எழுதுகின்றனர். தாங்கள் மூடத்தனத்தை எதிர்த்து அறிவியல் ரீதியிலான ஜனநாயகக் கல்விமுறைக்குப் போராடி வருவதாகக் காட்டிக் கொள்கின்றனர். சோதிட மூடத்தனத்தை எதிர்ப்பதாக நாடகமாகும் இத்துரோகிகள்தான், தாங்கள் ஆளும் கேரள மாநிலத்தில் சோதிடத்தை பல்கலைக் கழகத்தில் பாடமாகவே நடத்துகின்றனர். திருவனந்தபுரத்திலுள்ள கேரள பல்கலைக் கழகத்தில் கடந்த 13 ஆண்டுகளாக சோதிடம் ஒரு தனிப் பாடமாகவே நடத்தப்பட்டு வருகிறது. இந்த சோதிட பாடத்திட்டத்தை ஏற்று 1987-இல் தொடங்கி வைத்ததே போலி கம்யூனிஸ்டுகள்தான்! மாநில அரசின் பொறுப்பிலுள்ள இந்துக் கோயில் தேவஸ்தானங்களில், பூசைக்கான நல்ல நேரம் மற்றும் இந்துமதச் சடங்குகளுக்கான நாள் - நேரத்தைக் கணிக்க பயிற்சி பெற்ற சோதிடர்கள் தேவை என்ற காரணத்தைக் கூறி, சோதிடப் பாடதிட்டத்தை போலி கம்யூனிஸ்டுகள் வெட்கமின்றி நியாயப்படுத்தவும் செய்தனர். கடந்த 13 ஆண்டுகளாக சோதிட பாடத்திட்டத்தை தாங்கள் ஆளும் கேரளத்தில் தடைசெய்யாத 'இந்து' கம்யூனிஸ்டுகள், இப்போது பா.ஜ.க. கூட்டணி அரசின் சோதிட பாடத்திட்டத்தை எதிர்க்க என்ன அருகதை இருக்கிறது?

மூட நம்பிக்கை என்பது சோதிடத்தை நம்புவது மட்டுமல்ல; போலி கம்யூனிஸ்டுகளை நம்புவதும்தான்!

● அருண்

20-ஆம் பக்கத் தொடர்ச்சி

**கழகத்தில் இருந்து வெளியேறுவோம் என எந்தக் கூட்டணியாவது சொல்லுமா?'' என ஓட்டுக் கட்சிகளின் துரோகத்தைத் தோலுரித்தார்.**

மேலும், ''சனநாயகத்தின் முன்னிபந்தனை சுதந்திரமும், இறையாண்மையும். தேர்தல் வன் முறைகளைப் பார்த்தால், ஓட்டுக் கட்சிகளுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கிடையாது என்பது தெளிவாகி விட்டது. உ.வ.க. திணிக்கும் தனியார்மயம் - தாராளமயத்தைப் பார்த்தால், இந்த நாட்டில் சுதந்திரம், இறையாண்மை, சனநாயகத்திற்கெல்லாம் பொருளே கிடையாது எனப் புரிந்து கொண்டு விடலாம். தாராளமயம், பொருளைத் தேர்ந்தெடுக்க பல வாய்ப்புகளைத் தருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் விவசாயிகள், தொழிலாளர்கள், தேசிய முதலாளிகள் முன்னுள்ள ஒரே வாய்ப்பு, உலக வர்த்தக கழகத்தில் இருந்து வெளியேறக் கோருவதும் தேர்தலைப் புறக்கணிப்பதும் தான்'' எனக் கூறி, நாட்டுப்பற்று , கொண்ட

**இந்திய மக்களை நாடு மறுகாலனியாவதற்கு எதிராகப் போராட அறைகூவி அழைத்தார்.**

**செய்தித் தொகுப்பு: தீபன் & பிரகாஷ்**

**மறுகாலனியாதிக்க எதிர்ப்பு கருத்தரங்கம் - பேரணி - பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட நாட்டுப் பற்றாளர்கள்.**



www.padippakam.com



## கட்டுப்பாடற்ற இறக்குமதியும் காத்திருக்கும் பேரழிவும்

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அன்னிய நுகர்பொருட்களும் உணவுப் பொருட்களும் பெருநகரப் பல்பொருள் அங்காடிகளில் வெள்ளமெனக் குவியத் தொடங்கிவிட்டன. புதிய ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையால் அன்னிய நாட்டுப் பொருள்கள் தாராளமாகக் கிடைப்பதைக் கண்டு மேட்டுக்குடி வர்க்கம் குதூகலிக்கிறது. நெஸ்லே பாலாடைக் கட்டி, அமெரிக்க மெக்டொனால்டு பழக்கூழ், ஹெர்ஷே சாக்லெட் கூழ், மாக்ஸ்வெல் ஹவுஸ் காபி, வாஷிங்டன் ஆப்பிள், சோயா மொச்சை - என வகை வகையான உணவுப் பொருட்களும் பதப்படுத்தப்பட்ட மாவுப் பொருட்களும் அங்காடிகளை அலங்கரிக்கின்றன. ஆனால் இவற்றில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட (Genetically modified) உணவுப் பொருட்கள் எவை, அல்லாதவை எவை என்று இனம் பிரிக்கப்படாமலேயே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இத்தகைய உணவுப் பொருட்களால் கடுமையான பாதிப்பு ஏற்படும் என்றும், பாதிப்புகளை ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்குப் பின்னரே அறிய முடியும் என்றும் அறிவியலாளர்கள் எச்சரிக்கின்றனர்.

இதனால் மேலை நாடுகளில், மரபணு மாற்றத்தால் உருவான உணவு தானியங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. சில நாடுகளில், இத்தகைய உணவுப் பொருட்கள், பழங்கள், காய்கறிகளைத் தனியே பிரித்து வைத்து அடையாளமிட்டு விற்பனை செய்ய வேண்டும் என சட்டமியற்றப்பட்டுள்ளது. ஆனால் இந்தியாவில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் பற்றிய விழிப்புணர்வு இல்லாததைச் சாதகமாக்கிக் கொண்டு இத்தகைய உணவுப் பொருட்களை பன்னாட்டு நிறுவனங்கள் குவித்து விற்பனை செய்து வருகின்றன.



தாராள இறக்குமதி: ஆரோக்கியமா? பேரழிவா?

இறக்குமதியாகும் உணவு தானியங்களில் மரபணு மாற்றம் செய்யப்பட்டவை எவை என்று கண்டறிவது சிரமமானது. அதற்கான அறிவியல் சாதனங்களும் இந்தியாவில் புழக்கத்தில் இல்லை. இத்தகைய உணவுப் பொருட்களால் 2, 3 தலைமுறைக்குப் பிறகு பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கம் பொறுப்பேற்காது; சம்பந்தப்பட்ட பன்னாட்டு நிறுவனமே பொறுப்பு என்று கைகழுவப்படுகிறது. மரபணு மாற்ற உணவுப் பொருட்களையும் பணப் பயிர்களையும் உற்பத்தி செய்வது மான்சாண்டோ போன்ற 4, 5 பன்னாட்டு ஏகபோக நிறுவனங்கள்தான். அவற்றை எதிர்த்து ஒரு ஏழை நாட்டு அரசு உதட்டளவில் கூட முணுமுணுக்க சாத்தியமில்லை.

ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு புயல் - வெள்ளத்தால் ஒரிசா மாநிலம் தத்தளித்தபோது, அமெரிக்காவிலிருந்து நிவாரண உதவியாக வந்திறங்கிய கோதுமை, மரபணு மாற்றம் செய்யப்பட்டதாகும். இந்திய அரசுக்கு இது தெரிந்திருந்த போதிலும், அதைத் தடை செய்யாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விநியோகித்துள்ளது. மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயா உணவை ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தடை செய்துள்ளன. இருப்பினும், அதேவகை சோயா உணவு அமெரிக்காவிலிருந்து 'உதவி' என்ற பெயரில் இறக்குமதி செய்யப்பட்டு, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளிலும் குழந்தைக் காப்பகங்களிலும் தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

ரஷ்யாவில் செர்னோபில் அணு உலை விபத்தினால் கதிரியக்கம் பரவியதையடுத்து பல ஐரோப்பிய நாடுகளில் பாதிப்பு ஏற்பட்டு, அப்பகுதிகளிலிருந்து வரும் பாலும், பால் பவுடரும், மாட்டிறைச்சியும் தடை செய்யப்பட்டன. ஆனால் அவை இப்போது வேறு பல நாடுகளின் வழியே வேறு பெயர்களில் இந்தியாவில் குவிந்துள்ளன என்று பிரபல சுற்றுச் சூழலாளரான வந்தனா சிவா எச்சரிக்கிறார். அது போல ஐரோப்பிய கண்டத்தைத் தாக்கிய கால்நடைகளின் பைத்திய நோய்க்குக் காரணமான நச்சுத் தீவனங்கள் வேறு பெயர்களில் இந்தியாவில் தடையின்றி விற்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். மேலும், தற்போது இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள பொருட்களில், 20-க்கும் மேற்பட்ட நிறுவனங்களின் பொருட்கள், ''ஒஃபால்'' (OFFAL) எனும் பயனற்ற மூன்றாந்தர கழிவுப் பொருட்களாகும். ஆனாலும் இந்திய அரசு அவற்றை வெட்கமின்றி இறக்குமதி செய்ய தாராள அனுமதி அளித்துள்ளது.

## தொடரும் தீண்டாமைக் கொடுமை: அச்சத்தில் தவிக்கும் ''தலித்'' பஞ்சாயத்துத் தலைவர்கள்

பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடந்து ஏறத்தாழ நாலரை ஆண்டுகள் முடிவடைந்த நிலையில், தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் இன்னமும் தாங்கள் செயல்பட முடியாத நிலையை எதிர்த்து உரிமைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். ஆதிக்க சாதிவெறியர்களை மீறி ஏதாவது செய்ய முனைந்தால், அவர்களது உயிருக்கே ஆபத்து என்ற நிலைதான் இன்னமும் நீடிக்கிறது.

மதுராந்தகம் ஒன்றியத்திலுள்ள மாம்பாக்கத்தில் பஞ்சாயத்துத் தலைவராகத் தாழ்த்தப்பட்டவர் இருந்த போதிலும் பஞ்சாயத்து அலுவலகத்தை தாழ்த்தப்பட்டோர் உள்ள பகுதியில் கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பஞ்சாயத்தில் தீர்மானத்தை நிறைவேற்றவிடாமல் ஆதிக்க சாதிவெறியர்கள் தொடர்ந்து அச்சுறுத்தி வருகின்றனர். நீதிமன்றத்தில் எதிர்மனுத் தாக்கல் செய்து, அலுவலகக் கட்டிடம் கட்ட தற்காலிகத் தடையுத்திரவு பெற்று கொக்கரிக்கின்றனர்.

திருப்போரூர் ஒன்றியத்திலுள்ள ஆலத்தூர் பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டுள்ள போதிலும்; தேர்தல் முடிவுக்குப் பிறகு இன்றுவரை அவரைக் காணவில்லை. ஆதிக்க சாதி வெறியர்களின் அச்சுறுத்தல் காரணமாக அவர் தப்பியோடி தலைமறைவாகி விட்டாரா, அல்லது கொல்லப்பட்டாரா என்று தெரியவில்லை.

அச்சரப்பாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஒரு தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவரின் கட்டை விரலை ஆதிக்க சாதிவெறியர்கள் வெட்டி எறிந்துள்ளனர். மதுரை மாவட்டத்தில் சாதி வெறியர்களின் அச்சுறுத்தல் காரணமாக கீரிப்பட்டி, பாப்பாகுடி பஞ்சாயத்துகளில் இன்னமும் தேர்தலே நடக்கவில்லை. மருதன்குடி கிராமப் பஞ்சாயத்துத் தலைவரான தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த நாகர் என்பவர் சாதி வெறியர்களின் கொலை மிரட்டலுக்கு அஞ்சி, குடும்பத்தோடு ஊரை விட்டே ஓடித் தலைமறைவாகி விட்டார். இன்னும் பல பஞ்சாயத்துகளில், மேல்சாதி உறுப்பினர்களுடன் சேர்ந்து தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் சரிசமமாக நாற்காலியில் உட்கார அனுமதிக்கப்படுவதில்லை. நாகை மாவட்டம் வடகரை பஞ்சாயத்திலும், வேதா



படிப்பகம்

www.padippakam.com





தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களின் முதல் மாநில மாநாட்டில் மனித உரிமை அமைப்புகள் மற்றும் "தலித்" விடுதலை இயக்கங்களின் பிரதிநிதிகள்.

ரண்யம் அருகேயுள்ள ஆயக்காரன்புலம் பஞ்சாயத்திலும் இத்தீண்டாமைக் கொடுமை இன்னமும் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. இன்னும் பல பஞ்சாயத்துகளில், முடிவுகளை உள்ளூர் ஆதிக்க சாதி வெறியர்களே தீர்மானிப்பதும், தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் வேறுவழியின்றி அதில் கையெழுத்திடும் அடிமை நிலையே நீடிக்கிறது. ஊரப்பாக்கம் பஞ்சாயத்துத் தலைவியான மேனகா, பதவி வெறிபிடித்த அவர் சார்ந்துள்ள தி.மு.க. கட்சிக் குண்டர்களாலேயே பட்டப் பகலில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

தொடரும் இச்சாதிவெறிக் கொடுமைகளைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களின் உரிமைகளை நிலைநாட்டக் கோரியும் கடந்த ஏப்ரல் 10-ந் தேதியன்று தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்து தலைவர்கள் சென்னையில் முதல் மாநில மாநாட்டை நடத்தியுள்ளனர். சில தன்னார்வக் குழுக்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் ஆதரவுடன் நடந்த இம்மாநாட்டில் தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள், சாதி வெறியர்களின் அச்சுறுத்தலால் தங்களால் செயல்பட முடியாத அவலத்தை வேதனையுடன் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்களைப் பழிவாங்கவும், பதவி நீக்கம் செய்யவும் மாவட்ட ஆட்சியருக்கு வரம்பற்ற அதிகாரமளிக்கும் பஞ்சாயத்து சட்டவிதி 205-ஐ நீக்க வேண்டும் என்று இம்மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இச்சட்ட விதியைக் கொண்டு, தங்களது பஞ்சாயத்துத் தீர்மானங்களைக் கிடப்பில் போடுவதும் அல்லது மிரட்டுவதும் தொடர்வதாக அவர்கள் குமுறுகின்றனர். தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவிகளுக்குப் பல வகையிலும் அச்சுறுத்தல்கள் தொடர்வதால், உரிய பாதுகாப்பு அளிக்கவும் கோரியுள்ளனர்.

இப்படி, தாழ்த்தப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர்கள் செயல்படக் கூட முடியாமல் அவர்களது பிரதிநிதித்துவ உரிமையும் சாதி வெறியர்களால் பறிக்கப்பட்டு நிரந்தர அச்சுறுத்தலின் கீழ் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்காக அவதாரமெடுத்துள்ளதாக கூறிக் கொள்ளும் "தலித் அரசியல்" கட்சிகளும் தலைவர்களும் தொடரும் இச்சாதிவெறிக் கொடுமையை எதிர்த்துப் போராடத் தயாராக இல்லை. மாறாக, பதவி சுகத்துக்காக இச்சாதி வெறியர்களுடன் தேர்தல் கூட்டணி கட்டிக் கொண்டு ஓட்டுப் பொறுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## இந்துவெறி தளபதிகளின் காமவெறி அட்டூழியம்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள சதாரா நகரில் இளம் பெண்களை சினிமா - தொலைக்காட்சித் தொடர்களில் நடிகையாக்குவதாக ஆசைகாட்டி, பாலியல் இச்சைக்குப் பயன்படுத்திய காமவெறி கயவாளிகளின் அதிக்கிரமச் செயலைக் கண்டு அம்மாநிலமே அதிர்ச்சியடைந்துள்ளது. மராத்தி சினிமாப்படத் தயாரிப்பாளர், இயக்குனர், தரகர், ஓட்டல் முதலாளி, வியாபாரப் பெரும்புள்ளிகள், அரசியல்வாதிகள் என ஒரு பெருங் கும்பலே இப்பாலியல் வெறியாட்டத்தில் ஈடுபட்டுள்ளது. 1994-ஆம் ஆண்டில் ஜலகோன் நகரில் 18 இளம் பெண்களை மிரட்டிப் பணிய வைத்து பாலியல் இச்சைக்கு பயன்படுத்திய ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள் - முதலாளிகள் பற்றிய விவகாரம் அம்பலமானதற்குப் பிறகு நடந்துள்ள மிகப் பெரிய செக்ஸ் மோசடி விவகாரம் இதுதான் என்று பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. இப்போதைய பாலியல் மோசடி விவகாரத்தில் 10-க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வெளியே தெரிந்தால் அவமானம் என்று பலர் புகார் கூறாமல் விட்டு விட்டதாகவும் செய்திகள் வருகின்றன.

விபச்சாரத் தரகரான மிருதுளா வனராசி என்ற இளம் பெண், சினிமா - தொலைக்காட்சித் தொடர்களில் நடிகையாக்குவதாக ஆசை காட்டி இளம் பெண்களை அழைத்து வருவார். மராத்தி சினிமா தயாரிப்பாளரான சஞ்சய் பவார், இயக்குனர் பிருதிவிராஜ் சவான் ஆகியோர் அப்பெண்களை நடிகையாக்குவதாக மயக்கி, அரை நிர்வாணப் புகைப்படங்களை எடுப்பர். பின்னர் அவற்றை பத்திரிகைகளில் வெளியிட்டு விடுவதாக அப்பெண்களை மிரட்டிப் பணிய வைத்து தமது காமவெறிக்குப் பயன்படுத்திக் கொள்வதோடு, தமது கூட்டாளிகளான முதலாளிகளுக்கும் விருந்தாக்குவர். இக்கும்பலிடம் சிக்கிய பெண்கள் எளிதில் தப்பவும் முடியாது. இக்கும்பல் அழைக்கும் போதெல்லாம் சென்று அவர்களின் காமவெறியைத் தணிக்க வேண்டும். இல்லையேல் நிர்வாணப் படங்களை சுவரொட்டியாக அச்சிட்டு நகரெங்கும் ஒட்டி அவமானப்படுத்துவோம் என்ற மிரட்டல் வரும்.

இப்படிப் பல பெண்கள் பாலியல் வன்முறைக் கொடுமையில் சிக்கித் தவித்த நிலையில், வேறொரு கொலை வழக்கை விசாரித்து வந்த போலீசாருக்கு இந்த விவகாரம் பற்றி சில தடயங்கள் கிடைத்தன. உள்ளூர் பத்திரிகைகளும் இப்பாலியல் கும்பல் பற்றி கிசுகிசு செய்திகளை வெளியிட்டன. அதைத் தொடர்ந்து, புகார் கொடுப்போரின் பெயர்கள் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்று போலீசார் அறிவித்து இந்த விவகாரத்தை விசாரணை செய்யத் தொடங்கியதும், 10-க்கும் மேற்பட்ட இளம் பெண்கள் நேரில் வந்து சாட்சியமளித்து தமது கண்ணீர்க் கதையைக் கூறி புகார் செய்தனர். அதன் பிறகு வேறுவழியின்றி இப்பாலியல் மோசடி கும்பலின் முக்கிய புள்ளிகளைப் போலீசார் கைது செய்துள்ளனர்.

இம்மோசடி கும்பலின் முக்கிய புள்ளியான சினிமா தயாரிப்பாளர் சஞ்சய் பவார், இந்துவெறி பாசிசக் கட்சியான சிவசேனாவின் திரைப்படத் துறை அணியின் தளபதியாவான். அவனது கூட்டாளியான இயக்குனர் பிருதிவிராஜ் சவாண், இந்த சிவசேனா சினிமா அணியில் முக்கிய பொறுப்பில் இருப்பவன். இந்தக் காமவெறி கயவாளிகள்தான் 'இந்து' கலாச்சார பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கும் சிவசேனாவின் உத்தம சீலர்கள்! தமது சொந்த சகோதரிகளை விபச்சார அடிமைகளாக்கும் இத்தகைய கயவாளிகளின் கட்சியான சிவ

சதாரா நகரை அச்சுறுத்திய பாலியல் மோசடிக் கும்பல்: சிவசேனாவின் 'நல்ல' பாம்புகள்.





படிப்பகம்

www.padippakam.com



சேனா, அழகிப் போட்டி எதிர்ப்பு, ஆபாசப்பட எதிர்ப்பு என்று வேஷங் கட்டி ஆடி வருகிறது. இந்து வெறி பாசிஸ்டுகளின் யோக்கியதை வேறு எப்படி இருக்க முடியும்?

## அரசியல் சாணக்கியரா? பயங்கரவாத பாசிஸ்டா?

பயங்கரவாத "தடா" சட்டம், நாட்டு மக்களின் கடும் எதிர்ப்புக்குப் பிறகு காலாவதியாக்கப்பட்ட நிலையில், அதே "தடா" சட்டத்தை புதிய பெயரில் செயல்படுத்தப் புறப்பட்டுள்ளார், ஆந்திராவின் "ஹை-டெக்" முதல்வர் சந்திரபாபு நாயுடு. அமைப்பு ரீதியிலான குற்றத் தடுப்புச் சட்டம் (APCOCA) என்ற பெயரில் இப்பதிய தடா சட்டம் கடந்த ஏப்ரல் முதல் வாரத்தில் ஆந்திர சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஆந்திராவின் முக்கிய நகரங்களில் குற்றக் கும்பல்களின் அட்டூழியங்கள் பெருகி விட்டதாகக் கூறி, சாதாரண சட்டங்களால் இவற்றைக் கட்டுப்படுத்த முடியாததாலேயே இப்புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளதாக சந்திரபாபு நியாயம் கற்பித்துள்ளார். ஆந்திராவில் கிரிமினல் குற்றக் கும்பல்களையே விஞ்சும் வண்ணம் வெடிகுண்டு, துப்பாக்கிகளுடன் ஆளும் தெலுங்கு தேசக் கட்சியில் நடந்து வரும் குழுச் சண்டை அம்மாநிலத்தையே அச்சுறுத்துகிறது. இருப்பினும் ஆளும் கட்சி அரசியல் குண்டர்கள் மீது இச்சட்டம் பாயாது. மாறாக, மாநிலத்தையே சிறைச்சாலையாக்கி, குடிமக்கள் அனைவரையுமே குற்றவாளியாக்கி, அதிகார வர்க்கம் - போலீசு - நீதித்துறை - சிறைச்சாலை அடங்கிய அரசு எந்திரத்தின் கையில் வரம்பற்ற அதிகாரத்தைக் கொடுக்கும் வகையிலேயே இப்பாசிச சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.




இக்கொடிய சட்டத்தின்படி போலீசார், பழிவாங்கும் நோக்கத்தோடு எவரையும் கைது செய்து பயங்கரவாதி என்று குற்றம் சாட்டலாம். யாரையும் கைது செய்து விசாரணையின்றி வதைக்கலாம். போலீசுக்கு ஆள்காட்டியாகச் செயல்பட மறுக்கும் எவரையும் கைது செய்யலாம். குற்றம் சாட்டப்பட்டவரின் சொத்துக்களைக் கைப்பற்றி முடக்கி வைக்கலாம். குற்றம் சாட்டப்பட்டவர் மேல்முறையீடு செய்யவோ, பிணையில் வெளி வரவோ முடியாது. எல்லாவற்றுக்கும் மேலாக, சந்தேகப்படும் எந்தவொரு நபரின் கடிதங்கள், தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கவும் இடைமறிக்கவும் போலீசாருக்கு இச்சட்டப்படி அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத "தடா" சட்டத்தில்கூட இல்லாத கொடிய விதி இது. இதன்மூலம் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகள், குடியுரிமை - ஜனநாயக உரிமை இயக்கத்தினர், புரட்சிகர அமைப்புகளை ஒடுக்கி முடமாக்கிவிடத் துடிக்கிறது பாசிச சந்திரபாபு அரசு. குறிப்பாக, தொழில் - வர்த்தகம் - அன்றாட வாழ்க்கைக்கு இடையூறு செய்து சீர்குலைப்பவர்கள் குற்றவாளிகளாவர் என்று இச்சட்டம் குறிப்பிடுவதால், நாளை தொழிற்சங்க, விவசாய சங்கத்தினர் போராட்டம் நடத்தினால், அதனால் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டதாகக் கூறி, அவ்வமைப்புகளையும் குற்றவாளியாக்கித் தண்டிக்கத் துடிக்கிறது ஆந்திர பாசிச அரசு.

மொத்தத்தில் பெயரளவிலான குடியுரிமை - ஜனநாயக உரிமைகளையும் காலில் போட்டு மிதிக்கும் மிகக் கொடூரமான பாசிச் சட்டமாகவே ஆந்திராவின் புதிய "தடா" சட்டம் உருவெடுத்துள்ளது.

ஆனாலும், முதலாளித்துவ வாதிகளும் பத்திரிகைகளும் தமது வர்க்க நலன் காக்கும் பாசிச முதல்வர் சந்திர பாபுவை "அரசியல் சாணக்கியர்" என்று துதிபாடிக் கொண்டிருக்கின்றனர்.

## பதவி பறிபோனாலும் பகற்கொள்ளை

ஆடம்பர பங்களா, சொகுசு கார், பங்களாவைப் பராமரிக்க மாதம் ரூ. 3000, காருக்கு மாதம் 250 லிட்டர் பெட்ரோல், தொலைபேசி செலவுக்கு மாதம் ரூ. 4000, மின் கட்டணச் செலவுக்கு மாதம் ரூ. 1500, மருத்துவ செலவுக்கு ரூ. 5000, ஒரு உதவியாளர், ஒரு சிறப்பு உதவியாளர் மற்றும் இரு கடைநிலை ஊழியர்கள், இதுதவிர ஓய்வூதியம் என முன்னாள் முதல்வர்களுக்கு வசதிகள் செய்து தரும் மசோதாவைக் கொண்டு வந்து, அதை சட்டமன்றத்தில் நிறைவேற்றியுள்ளார், காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா. அடுத்த தேர்தலில் தமது வாரிசு உமர் அப்துல்லாவை முதல்வராக்கி விட்டு ஓய்வு பெற உள்ள பரூக் அப்துல்லாவுக்கு, குப்கார் பகுதியில் பட்டுப் புல்வெளியில் அழகு கொஞ்சும் தால் ஏரியை நோக்கி பிரபல கட்டிடக் கலைஞர்களைக் கொண்டு பல லட்ச ரூபாய் செலவில் பளிங்கு மாளிகையைக் கட்ட மாநில அரசு முடிவு செய்துள்ளது. இது தவிர, முன்னாள் முதல்வர்களுக்கு செய்யப்படும் சலுகைகளுக்காக மட்டும் மாநில அரசு ஆண்டுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டும். பரம்பரை பதவி சுகத்தை அனுபவித்துக் கொண்டு காஷ்மீர் மக்களை வஞ்சித்து வரும் பரூக் அப்துல்லா கும்பல், இதுவும் போதாது என்று பதவியிழந்த பின்னரும் காஷ்மீர் மக்களின் வரிப்பணத்தின் மஞ்சள் குளிக்க கிளம்பிவிட்டது.

## 'சொர்க்க' பூமியில் நெருக்கடி: கனவுக் கோட்டை நொறுங்கியது

உலகின் மிகப் பெரிய ஏகாதிபத்திய வல்லரசான அமெரிக்காவின் பொருளாதாரம் தீராத நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. கடந்த ஆறு மாதங்களில் அதன் பொருளாதார வளர்ச்சி விகிதம் 5.6%-லிருந்து 2.7% ஆகச் சரிந்து விட்டது. பட்ஜெட் பற்றாக்குறையோ பூதாகரமாகிவிட்டது. குறுகிய காலத்தில் அதிக லாபமீட்டும் துறையாகச் சித்தரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத் துறைகளில் முதலீடு செய்த ஊக வணிக முதலாளித்துவ சூதாடிகள், தமது முதலீட்டைத் திரும்பப் பெறத் தொடங்கியதும், அத்துறையே மீள முடியாத நெருக்கடியில் சிக்கிக் கொண்டு விட்டது.

இந்நெருக்கடியிலிருந்து மீள ஊழியர்களைக் குறைக்கும் நடவடிக்கையை முதலாளிகள் மேற்கொண்டு வருகின்றனர். தகவல் - தொழில்நுட்பத் துறையில் 11 லட்சம் பேரிலிருந்து 9 லட்சம் பேராக ஊழியர்கள் குறைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க அரசின் புள்ளி விபரமே ஒப்புக் கொள்கிறது. "மோட்டரோலா" செல்போன் - கணினித் தொழில்நுட்ப நிறுவனம் கடந்த டிசம்பரிலிருந்து மார்ச் வரை 22,000 ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டது. சிங்கோ, லூசென்ட், நார்டெல், இன்டெல், ஹெச்.பி, இன்போசிஸ், விப்ரோ, ஆப்பிள், காம்பாக், சன் முதலான கணினி - தகவல் தொழில்நுட்ப பெரு நிறுவனங்களில்லே ஆப் விடப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்தியாவிலிருந்து

www.padippakam.com



அமெரிக்காவுக்கு ஓடோடிச் சென்ற கணினி வல்லுனர்கள் பல்லாயிரக் கணக்கில் வேலையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். இவ்வாண்டின் தொடக்கத்திலிருந்து இதுவரை 50,000 பேர் வேலையிழந்து இந்தியாவுக்குத் திரும்பி விட்டதாக செய்திகள் வருகின்றன. கணினி வல்லுனராக பெருமையுடன் அமெரிக்கா சென்று, பின்னர் திருமணம் செய்து கொள்ள இந்தியா வந்து, திருமணம் முடிந்து அமெரிக்காவுக்கு மனைவியுடன் புறப்படத் தயாரான போது வேலை பறி போன செய்தி கிடைத்து, புலம்பித் தவிப்போரின் துயரக் கதை, வேலையிழந்து வீதியில் வீசியெறியப்பட்ட நிலையில் குடும்பத்தை இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு வேலை தேடி அலையும் கணினி வல்லுனர்களின் சோகக் கதை, அமெரிக்காவிலிருந்து விரட்டப்பட்டு இந்தியாவுக்கு வந்த பிறகும் வேலை கிடைக்காமல் தவிப்போரின் வேதனைக் கதை - என்று முதலாளித்துவப் பத்திரிகைகள் 'கண்ணீர் கதை'களை வெளியிடுகின்றன.

ஓராண்டுக்கு முன்பு வரை இதே பத்திரிகைகளும் முதலாளித்துவ வாதிகளும் அமெரிக்க சொர்க்க பூமியில் கணினி வல்லுனர்களுக்கு வேலை கொட்டிக் கிடப்பதாகவும், அறிவுத் திறன் மிக்க மூளை உழைப்பாளர்கள் மூலம் இந்தியா ஒரு வல்லரசாக மாறிவிட முடியும் என்றும் கதையளந்தார்கள். மலிவான விலையில் மூளை உழைப்பாளர்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்வதை வெட்கமின்றி நியாயப்படுத்தினார்கள். அமெரிக்க மோகத்தில் வீழ்ந்த இளைஞர்களான கணினி வல்லுனர்கள், இன்னுமொரு பில்கேட்சாக உருவாகப் போகும் கலர்க் கனவுகளோடு அமெரிக்காவுக்கு ஓடினார்கள். அங்கு கிடைத்த அற்பக் கூலியையும் கொத்தடிமை வாழ்வையும் சகித்துக் கொண்டார்கள். ஆனால் அமெரிக்காவின் நீர்குமிழிப் பொருளாதாரம் வெடித்ததும், அவர்களது மணற்கோட்டைகளும் சரிந்து கறிவேப்பிலையாகத் தூக்கியெறியப்படுகிறார்கள்.

அதனாலென்ன? அமெரிக்க சொர்க்கத்தில் இடமில்லை என்றால், ஜெர்மனி, ஜப்பான் முதலான இதர ஏகாதிபத்திய சொர்க்கங்களில் மயிலாசனம் காத்திருக்கிறது என்று முதலாளித்துவ எடுபிடிகள் மீண்டும் கனவு வியாபாரத்தைத் தொடங்கிவிட்டார்கள். ஆனால் முதலாளித்துவ முட்டாள்களைத் தவிர வேறு எவரும் இனியும் ஏமாறத் தயாராகவில்லை.

## பட்டினிச் சாவில் பழங்குடி மக்கள் வக்கிரத்தில் காங்கிரசு ஆட்சியாளர்கள்

காங்கிரசு கயவாளிகள் ஆளும் இராஜஸ்தான் மாநிலத்தில் வறட்சியும் பஞ்சமும் தீவிரமாகி பட்டினிச் சாவுகள் அதிகரித்து வருகின்றன. கடந்த இரு மாதங் களில் மட்டும் 10-க்கும் மேற்பட்டோர் பட்டினிக் கொடுமை தாளாமல் தற்கொலை செய்து கொண் டுள்ளனர். உதய்பூர், ஜெய்பூர் மாவட்டங்களில் ஏறத்தாழ 30 லட்சம் மக்கள் ஒரு வேளை கூட உணவின்றி, காட்டுச் செடிகளின் வேர்கள், கிழங்குகளையும் ''கஜாரி'' எனப்படும் காட்டாமணக்கு விதைகளையும் வேகவைத்து உண்டுபட்டினியைவிரட்ட முடியாமல் பரிதவிக்கின்றனர். இராஜஸ்தானின் மேற்கு மாவட்டங்களில் வறட்சி - பஞ்சத்தில் தத்தளிக்கும் ''கமார்'' எனும் பழங்குடியின மக்கள் பிழைக்க வழிதேடி குஜராத்துக்கு ஓடி, கொத்தடிமைகளாக உழல்கின்றனர். குஜராத்திலும் வேலை கிடைக்காமல் சொந்த ஊருக்குத் திரும்பிய பலர், பட்டினிக் கொடுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். இராஜஸ்தானில் மேற்கு மாவட்டக் கிராமங்கள் எங்கும் மரண ஓலம் எதிரொலிக்கிறது. பட்டினிக் கொடுமையால் குழந்தைகள் எலும்பும் தோலுமாகக் காட்சியளிக்கின்றனர். தண்ணீரும் தீவனமும் இல்லாமல் கால்நடைகள் கொத்துக் கொத்தாக மடிந்து வருகின்றன.

அதேசமயம் நாடெங்கும் உள்ள இந்திய உணவுக் கழக கிடங்குகளில் பல லட்சம் டன் உணவு தானியங்கள் பிதுங்கி வழிகின்றன. முறையாகப் பராமரிக்காமல் வெட்ட வெளியில் அவை கெட்டழுகிப் போவதோடு, பெருச்சாளிகளால் வேட்டையாடப்படுகின்றன. குறிப்பாக, இராஜஸ்தான் மாநிலத்தில் உணவுக் கழக கிடங்குகளில் நிரம்பி வழியும் கோதுமையைக் கொண்டு 4 மாதங்களுக்கு 20 லட்சம் பேருக்கு உணவளிக்க முடியும். ஆனாலும் கேடுகெட்ட ஆட்சியாளர்கள் எந்த நிவாரண உதவியுமின்றி உழைக்கும் மக்களைப் பட்டினியில் பரிதவிக்க விடுகின்றனர். வறட்சி நிவாரணத் திட்டம், வேலைக்கு உணவுத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம், இந்திரா ஆவாஸ்யோஜனா திட்டம் - என கணக்கற்ற வறுமை ஒழிப்புத் திட்டங்கள் இருந்த போதிலும், எந்தத் திட்டத்தையும் செயல்படுத்த ஆட்சியாளர்கள் முன்வரவில்லை.

பட்டினிக் கொடுமையைத் தாளாமல் பழங்குடி மக்கள் கடந்த பிப்ரவரி 18-ஆம் நாளன்று ஊர்வலமாகத் திரண்டு வந்து மாநில முதல்வர் வீட்டை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். மார்ச் 5-ஆம் நாளன்று ஜெய்ப்பூரிலுள்ள உணவுக் கழகக் கிடங்கை பல்லாயிரக் கணக்கான மக்கள் முற்றுகையிட்டு, ''வேலை கொடு! உணவு கொடு!'' என்று போராடினர். தொடரும் பட்டினிச் சாவுகள் பற்றி தன்னார்வக் குழுக்களின் மூலம் பத்திரிகைகளில் செய்தி வெளிவரத் தொடங்கியதும், பீதியடைந்த ஆட்சியாளர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மலிவு விலையில் கோதுமையை விநியோகிக்கவும், கண் துடைப்பு நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும் இப்போது உத்தரவிட்டுள்ளனர்.

வறட்சி நிவாரணப் பணியாக ஏரி - குளங்களைத் தூர் வாருவதோ, சாலைகள் அமைப்பதோ, மரங்களை நடுவதோ நடக்கவில்லை. வெளிநாட்டினரைக் கவரும் வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது என்ற பெயரில் ''கோல்ஃப்'' விளையாட்டு மைதானம் அமைக்க காங்கிரசு ஆட்சியாளர்கள் கிளம்பியுள்ளனர். ''கோல்ஃப்'' விளையாட்டு மைதானத்துக்கு பரந்த அளவிலான புல்வெளி வேண்டும். சீரான புல்வெளியை நிறுவிப் பராமரிக்க ஏராளமாகத் தண்ணீர் வேண்டும். மாநிலமோ வறட்சியிலும் பட்டினியிலும் தத்தளிக்கிறது. அதைப் போக்க உருப்படியாக எதுவும் செய்ய வக்கற்ற ஆட்சியாளர்கள், 5000 பேர் வாழும் ஒரு கிராமத்தின் தண்ணீர் தேவையை உறிஞ்சக் கூடிய கோல்ஃப் மைதானத்தில் பட்டுப் புல்வெளியை அமைக்கத் துடிக்கிறார்கள்.

●●●

''வேலை கொடு! உணவு கொடு!'' - பட்டினியில் பரிதவிக்கும் பழங்குடியினப் பெண்கள் வட்டாட்சியர் அலுவலகத்தின் முன் நடத்தும் ''தர்ணா'' போராட்டம்.




படிப்பகம்

(2-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கி அவர்களின் குறையைப் போக்கியது. அதே சமயம், புயல் தாக்கிய ஒரிசாவில் சாதாரண புயல் பாதுகாப்பு மையங்களைக் கூட அரசாங்கம் கட்டித் தராததால், பத்தாயிரக் கணக்கான மக்கள் வெள்ளத்தில் மூழ்கி இறந்து போனார்கள்.



மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஜவஹர் பகுதியில் திடீரென வாந்தி - பேதி நோய் தாக்கியதில், 72 குழந்தைகள் பாதிக்கப்பட்டு, இரண்டு குழந்தைகள் இறந்து போயின. 'அதிருஷ்ட வசமாக' தப்பிப் பிழைத்த குழந்தைகளை மருத்துவர் பரிசோதிக்கிறார். ராக்கெட்டை ஏவிய இந்தியாவுக்கு, வாந்தி - பேதி நோயை ஒழிக்க வக்கில்லையே!

மனித வாழ்க்கைக்கு அவசியமான விஞ்ஞான கண்டுபிடிப்புகளைக் கூட, யாரால் அனுபவிக்க முடிகிறது எனப் பாருங்கள். இன்னும் சொல்லப் போனால், பெருவாரியான மக்களின் நலனில் இருந்துதான் எல்லா விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும்/சாதனைகளும் உருவாக்கப்படுகின்றன எனச் சொல்லவே முடியாது.

இப்பொழுது விண்ணில் ஏவப்பட்டுள்ள செயற்கைக் கோள் வானொலி - வானொளி ஒலி/ஒளிபரப்புக்கும், தொலை தொடர்புக்கும் பெரிதும் பயன்படும் என்கிறார்கள். அஞ்சல் போக்குவரத்துக் கூட இல்லாத, சாலை வசதி கூட இல்லாத இலட்சக் கணக்கான கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு இந்த செயற்கைக் கோள் எந்த விதத்தில் பயன் அளிக்கும் என்பதை ஒதுக்கிவிட்டால் கூட, இந்தச் 'சாதனை' இந்திய மக்களுக்கானது எனக் கூறவிட முடியுமா? இதனால் ஆதாயமடையப் போகிறவர்கள் தொலை தொடர்புத் துறையிலும், செயற்கைகோள் தொலைக்காட்சி ஒளிபரப்பு வியாபாரத்திலும் நுழைந்துள்ள தனியார் முதலாளிகளைத் தவிர வேறு யாரும் கிடையாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, இந்தியா அணுகுண்டு சோதனை நடத்தியதையும், அறிவியல் சாதனையாக, தேசியப் பெருமிதமாகக் கொண்டாடினார்கள். இந்தியா இந்த அணுகுண்டை பாகிஸ்தான் மீது போட்டால், அதன் கதிர்வீச்சுத் தாக்குலை, எதிர் விளைவுகளை இந்திய மக்களும் அனுபவிக்க வேண்டியிருக்கும் எனும் பொழுது, இந்தச் 'சாதனை'யில் மக்களின் நலன் எங்கே ருக்கிறது? இந்தியாவின் கையில் அணுகுண்டு இருப்பதால், ஏறின விலைவாசி கீழே இறங்கி விட்டதா? இல்லை, மக்களின் வாழ்க்கை தரம்தான் உயர்ந்து விட்டதா? அணுகுண்டு வெடித்ததால், போக்ரானில் பெரும் பள்ளம் உருவாகிக் கிடப்பதும், பன்னாட்டு நிறுவனங்கள் காப்பீடு துறையில் நுழைந்ததும்தான் நாம் கைமேல் கண்ட பலன்!

உயிர் காக்கும் மருத்துவத் துறையில் கூட, விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பன்னாட்டு நிறுவனங்களின் இலாபம் தீர்மானிக்கிறதே தவிர, மக்களின் நலன் அல்ல. 1975-லிருந்து 1997 வரையிலும் 1323 புதிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதில், 13 மருந்துகள்தான் ஏழை நாட்டு மக்களைத் தாக்கும் நோய்களுக்குப் பயன்படக் கூடியவை. மீதி அனைத்தும் வழுக்கை, தொப்பை, காம இச்சை குறைவு போன்ற 'பிணிகளை'த் தீர்ப்பதற்காகக் கண்டுபிடிக்கப்பட்டவை. ஏழை மக்களைக் காவு கொல்லும் காலராவையும், மலேரியாவையும் ஒழிக்க முடியாத நவீன உலகம், ''வயாக்ரா'' கண்டுபிடிக்கப்பட்டதைச் சாதனையாகக் கொண்டாடுவதைவிட வேறு கேவலம் ஏதேனும் இருக்க முடியுமா?

''900 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் ஈட்டித் தரும் மருந்துகளுக்குதான், மருந்து நிறுவனங்கள் ஆராய்ச்சியிலும், தயாரிப்பிலும் முக்கியத்துவம் கொடுக்கின்றன'' என்கிறார் மருத்துவர் பெகௌல்.

முதலாளித்துவ சமூகத்தில், விஞ்ஞான சாதனைகள் அனைத்தும் முதலாளிகளின் இலாபத்திற்கான கருவியாகத்தான் பயன்படுகின்றன. இந்நிலையில் ''ஜி.எஸ்.எல்.வீ'' ராக்கெட் விண்ணில் ஏவப்பட்ட சாதனை, இந்திய மக்களின் வரிப் பணத்தில் நடந்த வாண வேடிக்கை தவிர வேறென்ன?

**● செல்வம்**

# வாசகர் கடிதம்

★ ஒரு செல் உயிரியான அமீபாவின் தன்மையுடன் இன்றைய ஓட்டுக் கட்சிகளின் கூட்டணி அரசியலை ஒப்பிட்டுக் காட்டிய தலையங்கக் கட்டுரை மிகச் சிறப்பாக உள்ளது. தரைக் கடை வியாபாரிகளின் அவல நிலையையும் அரசின் அடக்குமுறையையும் தொகுத்தளித்த கட்டுரை சிந்தனையைத் தூண்டியது. அவர்களது நியாயமான போராட்டத்தில் நாமும் பங்கேற்க வேண்டும் என்ற உணர்வை ஊட்டியது. ''பால்கோ'' போராட்டம் பற்றிய செய்திக் கட்டுரை, பா.ஜ.க. அரசின் மக்கள் விரோத - தேச விரோதத் தன்மையை நிரூபித்துக் காட்டியது.

**- பொன். இராதா கிருட்டிணன், மதுரை.**

★ யுகப் புரட்சித் தலைவன் தோழர் லெனின் சொன்னபடியே இன்றைய அரசியல் நடப்புகள் உள்ளன. முதலாளித்துவ சமூக அமைப்பில் சுரண்டலும் ஊழலுமே தலையாய இடம் பெறும் என்று லெனின் கூறியதை காங்கிரசும் பி.ஜே.பி.யும் நிரூபித்துக் காட்டி வருகின்றன. போலி கம்யூனிஸ்டுகளும், திராவிட பிழைப்புவாதிகளும் ஊழலின், மதவெறியின் தொங்கு சதையாக மாறியிருப்பது அரசியல் அவலம். புதிய ஜனநாயகம், உழைக்கும் மக்களுக்குத் தெளிவாக வழிகாட்டும் கலங்கரை விளக்கம்!

**- செம்மலர் மா. நடராசன், அறந்தாங்கி.**

★ தேர்தல் கூத்துகளை கட்டிவரும் இவ்வேளையில், தேர்தல் பாதையில் நம்பிக்கை இழப்போரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவது கண்கூடு. உண்மையான நாட்டுப் பற்றோடும் மக்கள் நலனில் அக்கறையோடும் செயல்படும் புரட்சிகர இயக்கங்கள் முன்மொழியும் தேர்தல் புறக்கணிப்பு மிகச் சரியானதே. புரட்சிகர மாற்றுப் பாதை பற்றிய தெளிவான சிந்தனைகளை புதிய ஜனநாயகம் இதழில் வெளியிட்டால், மக்களைத் தேர்தல் புறக்கணிப்பு அரசியலில் அணிதிரட்ட ஏதுவாக இருக்கும்.

**- த.ரா. செயபாலன், மதுரை.**

★ நான் உங்கள் பத்திரிகையை தவறாமல் படித்து வருகிறேன். எந்த ஓட்டுக் கட்சியும் வால் பிடிக்காமல், உழைக்கும் மக்கள் சார்பில் நின்று நேர்மையாகச் செயல்படும் புதிய ஜனநாயகத்தை மனதார வாழ்த்துகிறேன். சாத்தூர், சிவகாசி பகுதியில் தீப்பெட்டி தொழிலாளர்களுக்காகப் போராடுவதாகக் காட்டிக் கொண்டு, முதலாளிகளிடம் இரகசியமாகக் கூடிக் குலாவும் இடது, வலது கம்யூனிஸ்டுகளை நான் நன்கறிவேன். ஊழல், மோசடி பேர்வழிகளான இவர்கள், மதுரை பு.ஜ. முகவரைத் தாக்க என்ன அருகதை இருக்கிறது?

**- செண்பகராமன், சாத்தூர்.**

Published and Owned by R. SHANMUGARAJ, 25, Arunachalam St., Jothiramalinga Nagar, Chennai - 600 083.
Printed by him at EZHIL PRINTS, 110, IInd Floor, 63, Arcot Rd., Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (TAMIL FORTNIGHTLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPER FOR INDIA UNDER NO. 42648/85
Regd. No. TN/Chief.PMG- 544

# இதுதான் இன்றைய இந்தியா

இதோ! சொல்லி வைத்து எடுத்தாற் போலிருக்கும் இப்படம் பூந்தமல்லி அருகே சித்துக்காடு என்ற இடத்தில் எடுக்கப்பட்டது. போலீசுக்குத் தெரியாமல் சமூக விரோதிகள் சிலர் கள்ளச் சாராயம் காய்ச்சுவதாகவும், தகவல் கிடைத்து விரைந்த போலீசார் பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாராய பானைகள், ஊறல்களைக் கைப்பற்றி அழித்ததாகவும், அதில் ஈடுபட்டிருந்த சிலரைக் கைது செய்து விசாரணையைத் தொடங்கியிருப்பதாகவும் வழக்கம் போலவே செய்திகள் வெளியிடப்பட்டன.



ரவுடிகள், கள்ளச் சாராய வியாபாரிகள், போலீசு இவர்களுக்கிடையிலான உறவு ஊரறிந்த ரகசியம்தான். எதிர்பாராமல் விஷச் சாராயத்தால் உயிர் பலிகள் நேர்ந்தாலோ, வியாபார போட்டியால் போலீசுடனான 'பேரத்தில்' பிரச்சனை உண்டானாலோ, பதவி உயர்வு போன்ற நிர்பந்தங்கள் கருதியோ மட்டுமே சில பகுதிகளில் திடீர் கள்ளச் சாராய வேட்டை பெயரளவில் நடைபெறுகிறது. மற்ற இடங்களில் போலீசின் சம்மதத்தோடு கள்ளச் சாராயமும், அதிகாரிகளின் அனுமதி பெற்ற உயர் ரக மதுபானக் கடைகளும் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டால் கூட சாராய வெள்ளம் வற்றாமல் பார்த்துக் கொள்கிறது.

இதோ! இப்படத்தில் நீங்கள் பார்ப்பது சென்னை திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவு நியாய விலைக் கடை (டி.யு.சி.எஸ்.). இதில் அரிசி, கோதுமை வகையறாக்களுடன் இந்தியாவில் தயாரிக்கப்படும் வெளிநாட்டு மதுவகைகளும் விற்பனை செய்யப்படுகின்றன. நியாயமான விலையில் அரசே விற்பனை செய்வதால் தேநீர் கடைகளைப் போல் எந்நேரமும் குடிமகன்களின் கூட்டம் அலைமோதுகிறது.



அதோடு மேட்டுக் குடியினர் புழங்கக் கூடிய நட்சத்திர விடுதிகள் மற்றும் சில பெரிய கடைகளில் மட்டுமே குடிப்பதற்கான அறை (பார்) சட்டப்படி அனுமதிக்கப்பட்டுள்ளது. மற்ற சாதாரண மதுபானக் கடைகளில் சட்டத்துக்குப் புறம்பாக ஒரு தட்டியால் தடுத்து சிறிய அறைகளை வைத்துள்ளனர். ஆனால் குறைந்தபட்ச சட்ட விதிகள், பொது ஒழுக்கம் அனைத்தையும் தூக்கியெறிந்து விட்டு டி.யு.சி.எஸ். அரசு கூட்டுறவு மதுபானக் கடைகளில் திறந்தவெளியில் குடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பக்கம், சாராயம் காய்ச்சுவது சட்ட விரோதமான செயல் என்று கூறி அதைத் தடுத்து நிறுத்த தனிப் போலீசு பிரிவையும் ஏற்படுத்தி வைத்துள்ளது அரசு. மறுபக்கம் அந்தச் சட்டத்தை முதலில் மீறுகிற அமைப்பாகவும் இந்த அரசே செயல்படுகிறது. எங்கோ காட்டுக்குள் காய்ச்சும் கள்ளச் சாராயத்தைக் கண்டுபிடித்து வேட்டையாடும் போலீசுக்கு, தினம்தோறும் கடந்து செல்லும் சாலைகளில் நடக்கும் சாராய வியாபாரம் கண்ணுக்குத் தெரிவதில்லை என்பது எவ்வளவு பெரிய வேடிக்கை.

இத்தகைய அரசுக்கோ, அதிகார வர்க்கத்துக்கோ, போலீசுக்கோ சாராய ஒழிப்பைப்பற்றிபேச அருகதையுண்டா? அல்லது அவை எடுக்கும் நடவடிக்கைகள்தான் சாராயத்தை ஒழிக்குமென நம்ப முடியுமா? ஒருபுறம் மக்களின் நலனுக்காக இருப்பதாக காட்டிக் கொண்டே மறுபுறம் மக்கள் விரோத நடவடிக்கைகளில் இறங்கும் அரசின் பித்தலாட்டத்தை உழைக்கும் மக்கள் இனியும் அனுமதிக்க முடியுமா?